




Tamil Comics Ulagam - King Viswa

ஸ்பைடர் தோன்றும்

# சிவப்புத் தளபதி!






ல.ம-1



அடுத்து—
பிரம்மாண்டமான உலோக குமிழி போல் தோற்றமளிக்கிறது! அட— விரிகிறதே! உள்ளிருந்து ஏதோ வெளியேறுகிறது — கவனி!
ஓசை கூட வருகிறது! வரவர உரத்துக் கேட்கும் அந்த ஓசை ஏதோ ஒரு இயந்திரத்தின் இயக்கம் என்று தோன்றுகிறது!




விநோத வடிவமைப்புடைய, மிகப் பெரிய விமானம் ஒன்று வானோக்கி எழும்பியது—
விமானமா-ஹெலிகாப்டரா- புதுமையான வாகனமாக இருக்கிறதே!
எங்கே செல்கிறது?
க்ர்ர்ர்...



இரண்டு மணி நேரம் கழித்து—ஸ்பைடரின் இருப்பிடத்தில்—
பாஸ்—ஓடிவாருங்கள்—அங்கே-உயரே-அதி அற்புதமான ஏதோ ஒன்று—
'அதி அற்புதமான' என்ற அடைமொழிச் சொல் எல்லாம் ஸ்பைடரின் அகராதியில் மட்டுமே உண்டு என்பதை மறந்துவிட்டு ஏதேதோ உளறுகிறாயே-ஆர்டினி! சரி-தொலையட்டும்—இப்படி நீ மிரண்டு ஓடி வருகிற மாதிரி அங்கே என்னதான் இருக்கிறது என்று போய்த்தான் பார்ப்போமே!
மேல் தளத்தை அவர்கள் சென்றடைந்த போது, இடி முழக்கக் குரலில் எங்கும் எதிரொலித்தது ஓர் எச்சரிக்கை—
நியூயார்க் நகர வாசிகளுக்கு சிவப்புத் தளபதியிடமிருந்து ஒரு எச்சரிக்கை-
ஆர்டினி-உன் கூற்று உண்மை தான்—என்ன அட்டகாசமான தோற்றம்! அதீத வாய்ந்த ஒலிபெருக்கி அமைப்பு—அடடா-
ஊய்ய்! காது ஜவ்வு கிழிந்துவிடும் போல் என்னமாய் அலறுகிறது!



அந்த ராட்சஸ கலத்திலிருந்து ஏதோ ஒன்று வெளியேறி கீழே இறங்கியது—
அடுத்த சில நிமிடங்களில் பெட்டகத்துடன் கூடிய ராக்கெட் ஒன்று தரையிறங்கும்—அதனுள் ஒரு பில்லியன் டாலர் பெறுமானமுள்ள தங்கத்தை வையுங்கள். பின்னர், ராக்கெட்டிலுள்ள ஏவுகணை அமைப்பை தூண்டினீர்கள் என்றால் அது நேராக என்னை வந்தடையும்—
அந்த கலத்தைப் போலவே, இப்படியொரு விபரீதமான எச்சரிக்கையை விடுத்துக் கொண்டிருந்த நபரும் விசித்திரமானவனே-
இதை நீங்கள் நான்கு மணி நேரத்திற்குள் நிறைவேற்றத் தவறினால் சக்திவாய்ந்த குண்டுகளினால் உங்களுடைய நகரை நிர்மூலப்படுத்துவேன்—ஜாக்கிரதை!



மறு நிமிடம்—மேலே வட்டமடித்துக் கொண்டிருந்த அந்த கலத்தை குறி வைத்து மேலெழும்பின, பல ஜெட்-யுத்த விமானங்கள்—
முட்டாள்கள்! சிங்கத்தை வெல்ல வந்த சிறு கொசுக்கள்!
ரொம்பவும் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை—இரண்டே நிமிடத்தில் 'இல்லை' என்று ஆக்கிவிட்லாம் அந்தக் கலத்தை—
U.SAF


ஜெட் விமானங் களால் எதையும் சாதிக்க முடிய வில்லை—
கண்ணுக்குப் புலப்படாத ஏதோ வேலி-ஒரு வீரிய வேலி அந்தக் கலத் தை சுற்றிலும் இயங்குகிறது-
உங்களுடைய சிறுபிள்ளைத் தனமான செயல் நகைப் பிற்குரியது-என் காந்த வேலியை ஊடுருவ எந்த சக்தியாலும் முடியாது—மூடர்களே!
அச்சமும், பீதியும் பரவியது—
என் அறிவாற்றலுக்கு முன் நீங்களெல் லாம் எம்மாத்திரம்? இறுதியாக எச்சரிக் கிறேன்-நான் சொன்னவாறு உடனே தங் கத்தை அனுப்பி வையுங்கள்—இல்லையேல் அழிந்து போவீர்கள்!
சொல்கிறபடியே செய்து விடுவான் போலிருக்கிறதே—நான்கு மணி நேர கெடுவுக்குள் நகரை காலி செய்து விட்டு ஓடிப்போவது என்பது முடியாத காரியம். கேட்டபடி தங்கத் தை அனுப்பி வைப்பதைத் தவிர தப்பிக்க வேறு வழியே இல்லை!



கோபத்தால் கொதித்தெழுந்தான் ஸ்பைடர்-
அந்த அகம்பாவம் பிடித்தவனின் ஆணவப் பேச்சுக்கு அடி பணிவதா—ஊஹூம்—கூடவே கூடாது!
வேறு வழியில்லையே—பாஸ்!
"இல்லை" என்பதே இல்லையடா இந்த ஸ்பைடரின் அகராதியில்—அவனுடைய மிரட்டலுக்குப் பயந்து தங்கத்தை அனுப்பி வைத்தால், இந்த அக்கிரமத்தைத் தடுத்து நிறுத்த ஸ்பைடரால்கூட முடியவில்லையா? என்று ஏளனம் செய்யும் இந்த உலகம். அந்த பழிச் சொல்லை சகித்துக் கொண்டு பின்னரும் உயிர்வாழ முடியுமா—என்னால்?


மாஸ்டரின் அழைப்புக்குரலை இனம் கண்டு கொண்டு விரைந்தோடி வந்தது—அற்புத வாகனம்—ஹெலிகார்!
ஹெலிகார்!
பாஸ் அந்த கலத்தை நோக்கி செல்லப் போகிருர் போலிருக்கிறது!


மறுகணம்-ஸ்பைடரை ஏற்றிக்கொண்டு 'ஜிவ்' வென்று மேலெழும்பிப் பறந்தது, ஹெலிகார்—
சவாலா விடுகிருய்—சவால்! இதோ வந்து கொண்டிருக்கிறேனடா—அற்ப புழுவே! மோதிப் பார்த்து விடலாம்!


அந்நிய கலத்தின் அடியில் மண்டிக்கிடந்த மேக மூட்டத்தை சமீபித்ததும்—
அவனுடைய மின்--காந்த வேலியை யாராலுமே ஊடுருவ முடியாதாம்- அதையும்தான் பார்த்து விடுவோம்!


ஹெலிகாரைவிட்டு வெளியேறிய ஸ்பைடர் ஜெட் அமைப்பை தூண் டினன்—
மறுபடியும் ஒரு அற்பத்தனமான இயந்திர அமைப்பை என்னை நோக்கி ஏவி விட்டு ஏன்தான் நேரத்தை வீணடிக்கிறீர்களோ-



ஒரு ஈயை விரட்டுவது போல் அதை சுலபமாக துரத்தியடிக்க முடியும்—என்றால்!
ஹெலிகார் தறிகெட்டு தரையை சுழன்று செல்வதாக நீ நினைக்கிறாய்—தவறு—**தளபதி**! உண்மை என்னவென்று விரைவிலேயே புரிந்து கொள்வாய்!
அடுத்து—
இதோ—என்னுடைய எதிர்மின்காந்த ஜிஸ்மோ கருவி, அந்த சைத்தானின் காந்த வேலியை ஊடுருவி வழி ஏற்படுத்துகிறது!



கலத்திலிருந்த கண்காணிப்பு காவலன் எதிரே விரிந்த காட்சியை கண்டு திக்பிரமையடைந் தான்-
நிஜம்தானு-? கனவா இல்லை பிரமையா–
அவன் எச்சரிக்கைக் குரல் கொடுப்பதற்கு முன்–
முடக்க-வாயு பிஸ்டல் ஓசையின்றி காரியத் தை சாதித்து விடும்!
ஓ–!
13



இங்கிருந்தவாறே, கண்ணிமைக்கும் பொழுதில் பயலை கூண்டோடு கை- லாசம் அனுப்பிவிட முடியும்-என்றால்! ஆனால் நேருக்கு நேர் சந்தித்து முறி- யடிப்பது ஸ்பைடரின் யுத்த தர்மம் ஆகும்!
இதற்கிடையே, பொறுமை- யிழந்து கொதித்துப் போயிருந் தான் **சிவப்புத் தளபதி**
நான்கு மணிநேர அவகாசம் கொடுத்தது தப்பாகி விட்டது. மிக சாவகாசமாக இருக்கிறார் கள்—இதனால் நான் அடுத்த இலக்குக்கு சென்று என் கை- வரிசையைக் காட்டுவது தாமதப்படுகிறது. வேகமாக செயல்படுமாறு இவர்களைத் தூண்ட நான் ஏதாவது செய்தாக வேண்டும்—உடனே!



சிவப்புத்தளபதியிடமிருந்து குண்டு வீசும் குழுவுக்கு– நான் பொறுமையிழந்து போயிருக்கிறேன் என்பதை உணர்த்த ஒரு சிறு வெடிகுண்டை உடனே அனுப்பி வையுங்கள்–
RB
இன்னமும் கண்காணிப்பு அறையிலேயே இருந்த ஸ்பைடர் பார்த்தான்–
இதோ–அனுப்பி விட்டோம்–பாஸ்!
வெடிகுண்டு!



சட்டென்று ஸ்பைடரின் வலைத் துப்பாக்கியிலிருந்து நீண்டன, எஃகை விட உறுதியான பல இழைகள்—
வெடிகுண்டை கட்டி இழுத்து நிறுத்தியாயிற்று—நான் நேரடி நடவடிக்கையில் இறங்கவேண்டிய தருணம் வந்து விட்டது!


ஹே-யார் நீ?
என்னைத் தெரியாது? உங்களுடைய அறியாமை என் கோபத்தை கிளர்ந்தெழச் செய்கிறது!


அசட்டுத் துணிச்சலோடு, அவர்கள் துப்பாக்கியை உருவி எடுக்க முனைந்த போது!-
ஹா—என்ன இது—தகர்த்தக் கூட முடியவில்லையே!
உங்களைப் போன்ற அற்பப் புழுக்களிடம் என் நேரத்தை வீணடித்துக் கொண்டு இனியும் நான் இங்கே நிற்க விரும்பவில்லை!


பின்னர்-
நான் இங்கே இருக் கிறேனடா—கோமாளி வேடதாரியே!
ஒ-ஆணவக்காரன் ரெட் பாரனு?
மறுகணம்-ஸ்பைடரின் வாயுத் துப்பாக்கி இயங்கியது-
ப்யூ-ஏமாற்றி விட்டாயே—இவ்வளவு சுலபத்தில் அழிந்து விட்டாயே!
நான் அழிந்து போக வில்லையடா—முட்டாள்! பார்வைக்கு தெரியாத மர்ம வேலியின் பின்னே நான் பத்திரமாக நிற்பது தெரியவில்லையா?


இந்த மின்—காந்த வேலி என் பல்வேறு பாதுகாப்பு அம்சங்களில் ஒன்றுகும்- இப்போது பார்-இன்னு மொரு அமைப்பின் செயல் திறனை—
பயல்—பொசுங்கி அழிந்து போவது உறுதி—அட—ஆவ்-


ஸ்பைடரின் ஆருவது புலன் கடைசித் தருணத்தில் எச்சரிக்கை விடுவிக்கவே—
மின்னல் வேகத்திப் விலகி, மேலேறிக் கொண்டானே!


அந்த ராட்சஸ கலத்தின் சுழலும் காற்றாடிகளுக்குக் கீழே—
விரட்டிப் பிடியுங்கள் அவனை! வெளியே காற்று வீசுவதால் அவனுடைய வாயுத் துப்பாக்கியால் தொல்லை ஏதும் ஏற்படாது—பரவலாக நின்று தாக்கினீர்கள் என்றால் வலைத் துப்பாக்கியையும் ஏக காலத்தில் அனைவரின் மீதும் பிரயோகிக்க முடியாது—
மிக ஆபத்தான இடம்—ஸ்பைடரை தவிர வேறு யாரும் இங்கே இப்படி நிற்க முடியாது!


பாதுகாப்புக் கருவிகள் தளபதியிடம் மட்டும்தான் இருக்க வேண்டும்என்பதில்லை— இதோ—
ஏன் இப்படி திடீரென்று— காலூன்றி நிற்க முடியாமல்—ஹே— நல்ல வேடிக்கை!
ஆ—வ்!
மறு விநாடி—
புவி ஈர்ப்பு இழப்பு கதிர்வீச்சை பயன் படுத்தி காற்றிலும், இலேசானவர்—களாக்கி விட்டேன் இவர்களை! கதிரின் வீரியம் குறைந்து கொண்டே வர மெள்ள மெள்ள தரையை நோக்கிச் சென்று, கீழே காத்துக் கொண்டு நிற்கும் காவல் அதிகாரிகளிடம் போய் மாட்டிக் கொள்வார்கள்!


மீண்டும் நேரடி மோதலுக்கு ஸ்பைடர் கீழே இறங்கி வந்த போது—
உன் திறமையை ரொம்ப குறைவாக மதிப்பீடு செய்து விட்ட தவறு புரிந்துவிட்டது— ஆனால் அதே தவறை மீண்டும் செய்ய மாட்டேன்!
காற்றுப் பீச்சிகளின் நடுவில் வந்து நிற்கிறான்-வகையாக மாட்டிக் கொண்டான்!
அசாத்திய வேகத்தில் காற்றை பீச்சியடித்தன இரு கருவிகள்-
ஆவ்-இந்த காற்றுத் தாரை ஒவ்வொன்றும் எஃகுக் கம்பிபோல் உறுதியாக இருக்கின்றன— விலகிக் கொண்டு வெளி யேற இயலவில்லையே!
அதிர்ஷ்டம் உன்னைக் கை விட்டு விட்டது-அப்பனே! ஒழிந்தாய் இத்தோடு-


சிவப்புத் தளபதி துப்பாக்கி விசையை இழுக்க முனைந்த போது—
அத்தோடு, எதிரி காற்றின் வீரியத்தையும் மீறி தன் வலைத் துப்பாக்கியை எடுக்க கையை கொண்டு போகிறான்—
பாஸ்—ஐயோ—கூரை பிய்த்துக் கொண்டு விட்டது!
வலைத் துப்பாக்கியிலிருந்து வெளிப்பட்ட எஃகைவிட உறுதியான இழை-கள் கலத்தின் விசிறிகள் சுழலாதவாறு பின்னிப் பிணைத்ததை பீதியோடு நோக்கிய எதிரிகள்—
கலம் விழுந்து நொறுங்கப் போகிறது!
அவசர கால உதவிக் கலத் துக்குள் ஓடி வாருங்கள்!


கலவரமடைந்த ஊழியர்கள் அனைவரும் சிறியதொரு கலத்தில் ஏறி தப்பி வெளி-யேறி விட்டனர்—
கட்டுப்பாடிழந்த பெரிய கலத்தினுள் அகப்பட்டுக் கொண்டவர்கள் ஸ்பைடரும், தளபதியும் மட்டுமே!
ஆபத்துக் கால பாதுகாப்பு கருவிகளை இயக்கி இன்னமும் நான் இந்த கலத்தை காப்-பாற்றிவிட முடியும்!
ஒத்துக் கொள்கிறேன் தளபதி ஏனெனில், கலத்தில் எந்தக் கோளாறுமே ஏற்படவில்லை என்பதுதான் உண்மை!


தனக்கு மறை கழன்று விட்டதோ என்ற சந்தேகம் வந்து விட்டது ரெட் பாரனுக்கு-
ஹா—மேற்கூரை—காற்றாடிகள் அனைத்தும் சரியாகத்தானே இருக்கின்றன!
பலே—அருமையான கண்டுபிடிப்பு! ஓர் உண்மையை சொல்கிறேன்- கேட்டுக்கொள்—கொஞ்ச நேரத்திற்கு உன்னையும், உன் சகாக்களையும் ஹிப்னாட்டிஸ சக்தியால்குழப்பத்தில் ஆழ்த்தினேன். பிரமையில் நீங்கள் குழம்பித் தவித்துக் கொண்டிருக்கையில் மெள்ள என் கையை விடுவித்துக் கொண்டேன்.
மறுகணம்—
எங்களை ஏமாற்றிய உன்னை—ஆவ்—
என் ஜெட் அமைப்பு காற்றுத் தாரைகளை விலக்கி எனக்கு சுதந்திரம் வழங்கி விட்டபடியால்—


நியூயார்க் நகர தெருக்களில்-
அந்தக் கலம் கடலினுள் விழுந்து வெடித்து விட்டது!
அங்கே பார்—ஸ்பைடரின் ஹெலிகார் வருகிறது!
ஹெலிகார் தரையைத் தொட்டதும், கதவைத் திறந்து, தளபதிக்கு, ஒரு உதை கொடுத்து வெளியே தள்ளினான் ஸ்பைடர்-
காவல்துறை அதிகாரிகளே—ஏற்றுக் கொள்ளுங்கள் என் எளிய அன்பளிப்பை!
ஸ்பைடருக்கு நிகர் ஸ்பைடர்தான்!
நியூயார்ச் நகரை மட்டுமின்றி இந்த பூவுலகையே தளபதியின் பிடியிலிருந்து காப்பாற்றி விட்டான்!
முற்று


"கலிவரின் யாத்திரைகளைப்'' பற்றி பள்ளியில் படித்திருப் பீர்கள்-! இதோ நாங்கள் வழங்கும்—
கார்வினின் யாத்திரைகள்!
இந்து மகா சமுத்-திரத்தில் உள்ள டாபிடோ தீவு-
கார்வினும் அவருடைய தோழி ரீனுவும்...
அட்டகாச-மாக இருக்கிறது -காட்டேஜ்!
சொந்தக்காரன் ஒரு பெரிய சீமான்-மாடஸ்டியின் நண்பன்.
இதை நமக்கு அவள்-தான் அமர்த்திக் கொடு-த்தாள்.
டார்ரண்டை மடக்கி எனக்கு லீவு வாங்கித்தந்தவ-ளும் அவள்தான்!
அதே சமயம், புதிரான இரு உருவங்கள் அவர்களை கண்காணித்துக் கொண்-டிருந்தன-
இன்றிரவே அமுக்கிவிடலாம் ...காம்ரேட் டாக்டர்வாலே!
அதோ-அவர்கள் தான்!



அடுத்து—ஒரு ரெஸ்டாரண்டில்...
உளவுத் தொழில் எப்படியிருக்கிறது ...ரீனு?
த்ரில்லாகத்தானிருக்கிறது- ஆனால் ....ஓய்வு ஒழிச்சலே இல்லே!
விடுமுறையை கழிக்க வந்த இடத்திலும்இந்தப் பேச்சுதானு?
ஏற்பாடுகள் ரெடி... டாக்டர் வாலே!
இருவரும் பயிற்சி பெற்ற திறமைசாலிகள்-நால்வர் போதுமா?
தோற்றால், -திட்டம் 2ஐ அமல் செய்வோம்!
கோச்சுவண்டிப் பயணம் -வெகு ஜோர்!
வீடு திரும்பிக் கொண்டிருந்தனர் கார்வினும் ரீனுவும்.
அதே சமயம் லண்டனில்-
நடன நிகழ்ச்சி ரசிக்கிறதா மாடஸ்டி?
அழைப்பு விடுத்தமைக்கு நன்றி!


வழக்கமாக ஆபத்தானபணி-களுக்கு மட்டுமே அழைப்பு விடுப்பேன்...
எனக்கு பிடித்தமான தும்அது-தானே! ஆனல்...
...அம்மாதிரி அழைப்பே வரக்காணேமே -கொஞ்ச நாளாய்?
ஸாரிஸார்-ஒரு அவசர செய்தி....
ப்ரேஸர்-டார்ரண்டின் உதவியாளர்!
C.I.A.யிடமிரு-ந்துஅவசரவேண்டு கோள் ஒன்று ரீஞவைஈடுபடு-த்த வேண்டி-யிருக்கும்.
இடையிலேயே பிரிந்துசெல்ல வேண்டிய அவசரம்... ...ஸாரி...மாடஸ்டி!
அவசியமில்லே — நானும் கூடவே வரப்போகிறேன்.
உன்னிடம் சொல்ல முடியாத இரகசிய விஷயம்...இது!
ரீஞவின் பெயர் அடிபட்டது-உங்களுடைய பேச்சில்-ஆகையால் விஷயம் முழு வதையும் நீங்கள் சொல்லா விட்டால்-
நானும் கேட்க வில்லேயே அதைப் பற்றி!
ஆனல்... வந்து —



அவளோடு இருக்கும் கார்லினுக்கு போன் செய்து நீங்கள் ரீனாவோடு தொடர்பு கொள்ளவே முடியாதவாறு தடுக்க உத்தேசித்துள்ளேன் —ப்ளாக் மெயில்தான்!
இதென்ன... வம்பு
தலைமையகத்தில்-
டாபிடோவில் சிலரது நடவடிக்கைகளை ஒற்றறிய வேண்டியிருக்கிறது. C.I.A. க்கு அரசியல் காரணங்களால் தங்களுடைய உளவாளிகளை அனுப்ப முடியாத நிலை
மாடஸ்டியை எதிர் அணியில் வைத்து திண்டாடுவதைவிட நம் அணியில் வைத்துக் கொள்வதுதான் விவேகம்
பணிக்கு தேவையான திறமையுடைய மற்ற உளவாளிகள் வெவ்வேறு பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். மேலும்...ரீனா இப்போது டாபிடோவிலேயே இருக்கிறாள்.
ஆகையால் அவளையே முடுக்கி விடுவதாக உத்தேசித்திருந்தேன்.
ரீனா இருக்கையில் நான் ஏன் வெளியே ஆள் தேட வேண்டும்?
தகுதியான வேறொரு நபரை வெளியிலிருந்து அமர்த்திக் கொள்ளலாமே— உதாரணமாக ... என்னை!
மறுபடியும் வில்லி— ரீனா நிம்மதியை குலைக்க உங்களை நான் அனுமதிக்க மாட்டேன்!


கேஸை மாடஸ்டிக்கு விளக்க ஏற்பாடுகள் செய்யட்டுமா ஸார்?
செய்...
...வேறு வழி?
தீவை சென்றடைய 48 மணி நேர பயணம்— விமானத்தில்...
அதையடுத்து—
ஏற்கனவே தெரியும் என்றாலும் அந்தத் தீவின் அமைப்பை மறுபடியும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.
இதோ... இங்கே இருக்கிறது— உடல் நல பல்கலைக் கழகம்! இதன் நடவடிக்கைகளைத்தான் C. I. A. உளவறிய விரும்புகிறது.
அதே கணம்— டாபிடோ தீவில்-
இதென்ன விபரீதம்!
நிறுத்து— இல்லையேல் சுடுவேன்!
எங்களை பார்வையில் படும்படி வையுங்கள்!
வில்லி... யார் இவர்கள்?
31


வந்த இடத்திலும் தொல்லைதானா?
பாவம்... இன்று யார் முகத்தில் விழித்தார்களோ?
பேச்சு... போதும்!
இம்மாதிரி நெருக்கடிகளை சமாளிக்க ரீனாவுக்கு ஏற்கனவே பயிற்சி கொடுத்-திருக்கிறேன்
நால்வரில்... இரு-வரிடம் துப்பாக்கி— ஒருவனிடம்... எறி—வளை!
உதட்டை அசைக்-காமலே, முக அசைவு மூலம் சில-செய்திகளை சீனாவுக்கு தெரி-வித்தார் கார்வின்.
ம்ம்...
அலட்டல் இன்றி கீழே இறங்கி வாருங்கள்.
'லாரல்— ஹார்டி' யுக்தி!
குப்புற படுங்கள்— கட்டிப் போட வசதி-யாக கைகள் பின்புறம் இருக்கட்டும்.
மறுகணம்—
அறிவு கெட்டதனமாக மறுபடியும் என்னை இக்கட்டில் மாட்டி விட்ட...உன்னை—



கையை குவித்து, ஆனால் பலத்த ஓசை எழுமாறு, ரீனா ஓங்கி விட்ட அறையினால் பின்னுக்குச் சரிந்தார் கார்வின்—
சத்!
அஹ்!
...அடுத்த செயலுக்கு மிக மிக வசதியான இலக்கில்—
தலைவனை கார்வின் வீழ்த்திய அதே கணத்தில்...
பலே!
பின்னாலிருந்தவனுக்கு ரீனா விட்டாள் ஒரு உதை!
ணங்!
அடுத்து—தான்...
குனிந்து விலகிக் கொண்டாள் ரீனா....
இன்னும் ஒருவன் பாக்கி—


கடைசி நபர் கத்தியை கையி-லெடுத்துக் கொண்டான்
ரீனு— அவனை நீ கவனிக்-கிருயா?
நான் லீவில் அல்லவா இருக்கிறேன்!
மறுகணம்— கார் வினிடமிருந்து பறந்தது எறிவளை...
கத்தியையா காட்டுகிருய்...
வழிப்பறிக்காரர்-களாக இருக்குமோ?
வேறு எப்படி-யிருக்க முடியும்?
நீ விட்ட உதையை ஆயுளுக் மறக்க மாட்டான். இதையே மாடஸ்டி கொடுத்திருந்தால் அவனுடைய தாடை எலும்பு பொடிப் பொடியாகியிருக்கும்
இப்போது மட்டும் என்னவாம்!
மறைவில்-
திட்டம்—! தோற்று விட்டது...டாக்டர் வாலே!
போலீஸுக்கு இதை நாம் தெரிவிக்க வேண்டு-மல்லவா?
ஆமாம் .. ஆனல் —


...இப்போது சென்ட்ரல் நள்ளிரவு வரை விசாரணை தொடரும்— தூங்க முடியாது
திட்டம்—2க்கு ஏற்பாடு செய்!
அங்கு இலண்டனிலே—
நூறு ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள இந்த நிலையத்தில் பணம் படைத்தவர்களின் உடல் நலம் சீர் செய்யப்படுகிறது
ஏமாற்று வேலேயோ?
கிலோவுக்கு ஆயிரம் டாலர் என்று இங்கே வந்து கூடுதல் எடையை குறைத்துக் கொள்கிறார்களாம்— வாடிக்கையாளர்கள்!
ஆனால்...?
கீழ்த்திசை சக்தி ஒன்றின் இரகசிய நடவடிக்கைகளுக்கு திரையாக இது இயங்கி வருகிறதோ என்ற சந்தேகம் C. I. A. க்கு
விவகாரம் எப்படிப் பட்டது என்று
C. I. A. க்கே தெரியாது தெரிந்து கொள்ளத்தான் இந்த முயற்சி
... நசுக்கி விட வேண்டுமோ?
இல்லை... உளவறிந்து, கண்ட உண்மைகளை அவர்களுக்கு தெரிவித்து விட்டால் மிச்சத்தை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்,
35


கண்டதை வந்து சொல்ல உன் உடம்பில் உயிர் இருக்க வேண்டும் — மறந்து விடாதே!
ஜாக்கிரதையாக இருப்பேன்!
டாபிடோ சென்றதும் கார்வினோடு தொடர்பு கொள்வாயா?
நிச்சயமாக... இல்லை!
டாபிடோவில் அதே சமயம்-
அழைப்பு மணி விடாது ஒலித்தது —
யாரது?
போலீஸ்...ஸார்! உங்களோடு பேச வேண்டும்— மேடத்தோடும் தான்!
என்ன விஷயம்...ஸார்!
யாரோ உங்களை வழியில் தாக்கியதாக கேள்விப்பட்டோம்!


அகால வேளையாயிற்றே, நாளை தெரிவிப்போமே என்றிருந்தோம்!
விஷமிகளை பிடித்து விட்டோம்— அவர்களை நீங்கள் அடையாளம் காட்டவேண்டும்
அவசியமில்லை ஸார்— இங்கேயே வேனில் வைத்திருக்கிறோம்— பயல்களை!
சரி..., காலையில் ஸ்டேஷனுக்கு வருகிறோம்
புதுமையான சட்டம்!
நீங்களும் வரவேண்டும் மேடம்—எங்கள் சட்டப்படி இரண்டு சாட்சியங்கள் தேவை
தாக்கியவர்களை அடையாளம் காட்ட இயலுமல்லவா!
முடியும் என்றே நினைக்கிறேன்
வேனின் கதவு திறந்ததும்—
அ...ஹ்!


மயக்க ஊசி!— உன் சுயவுணர்வு - ஆறு விநாடிகளுக்கு மட்டுமே நீடிக்கும்... கார்வின்!
இடைப்பட்ட குறுகிய கால அவசியத்தில் மின்னலாக செயல் பட்டார் கார்வின்
வேடதாரி-கள்...!
தப்பி ஓடி விடு . ரீனா!
கார்வின் சுயவுணர்விழந்து சரிந்த கணத்தில் ரீனாவின் முதுகில் செருகியது மயக்க ஊசி ..
பலித்து விட்டது!... நம் திட்டம்— 2!
ஆ
மயக்க ஊசி செருகிய பின்னும் கார்வினின் செயல்திறன் எப்படி இருந்தது என்பதை நாம் கவனிக்க வேண்டும்
நம் தோழன்...? செத்து விட்டானே—
தியாகி பட்டம் கொடுத்து விடலாம்— வேறென்ன செய்ய முடியும்!
அவனை தேர்ந்-தெடுத்ததே அதனால்தானே!



விரைவில் ஆய்வுக் கூடத்திற்கு வந்து சேர்ந்தனர்.
குறுகிய வட்ட டி. வி. யில் —
கார்வின் அசைகிறான் ..
ஆரம்பித்து விடலாம்.. !
படுக்கையில் வைத்து கட்டிப் போட்டாயிற்று...
'வாலே — யாகோ சிகிச்சையின் பலனை சோதித்தறிய தகுதி வாய்ந்த இந்த ஜோடி அகப்பட்டது நம் அதிர்ஷ்டமே ...காம்ரேட் டாக்டர் யாகோ...!
நாம் கண்டு பிடித்த இந்த புது வகை சிகிச்சை மீது நம் அரசு நம்பிக்கை கொண்டி-ருப்பதும் மகிழ்ச்சிக்குரிய விஷயம்தான்...காம்ரேட் டாக்டர் வாலே!
வில்லி... விழித்துக் கொண்டீர்களா?
இப்போதுதான்... ! சுயவுணர்விழந்த நிலையில் நீண்ட நேரம் கிடந்திருப்-போம் போலும்!
இது என்ன இடம்?
திரும்பக் கூட முடியதா வாறு பிணைத்திருக்-கிறார்கள் என்னை...



இப்போது அதை தெரிந்து கொள்வீர்கள்!
விசை ஒன்று அழுத்தப்பட்டது... கட்டில்கள் செங்குத்தாக எழுந்து கொண்டன
நான் காம்ரேட் டாக்டர் யாகோ... இவர்— காம்ரேட் டாக்டர் வாலே...
இப்போது நீங்கள் உடல் நல பல்கலைக் கழக கட்டிடத்தில் ஓர் இரசிய அறையில் இருக்கிறீர்கள்...
மனத்தை வசப் படுத்தும் சிகிச்சைப் பிரிவு இது!
நாங்கள் கண்டுபிடித்த புதுவகை சிகிச்சையின் பலனை நடை முறையில் சோதித்தறிய திடசித்த-முடைய நபர்கள் தேவைப்பட்டனர்...
உன் பராக்கிரமங்களை கேள்விப்-பட்டு உன்னை தேர்தெடுத்-தோம்... வலிய வந்து கிடைத்த போனஸ் இந்த பிரிட்டிஷ் பெண் உளவாளி!



கடந்த 24 மணி நேரத்தில் ஹிப்னாட்டிஸ முறையில் உங்களுடைய மனத்தை சோதனைக்கு பக்குவப்-படுத்தி விட்டோம்...
இனி— ஆரம்பித்து விடலாம்!-
எங்களுடைய ஆதிக்கத்தின் கீழ் கொணர்ந்து, சாத்தியமேயில்லாத சம்பவங்களையும் கூட 'நிஜம்' என ஏற்றுக் கொள்ளும்படி உங்களை தூண்ட முடியும்
இது வெறும் பொழுது போக்கா... இல்லை தொழிலா?
கருத்து வேறுபாடுள்ளவர்-களின் சிந்தனை மீது ஆதிக்கம் செலுத்த வகை செய்யும் இந்த அரிய கண்டு பிடிப்பு!
நாட்டுக்குச் செய்யும் சேவை!
உங்களுடைய பயணம் தொடங்கி விட்டது...
நீங்கள் காணப் போகும் விந்தைக் காட்சி...கனவல்ல— நிஜம்!
போதை மருந்து ஏற்றப்பட்டதும், மீண்டும் சுய-உணர்விழந்து போனார்கள்... கார்லினும் ரீனாவும்!
41


அத்தியாயம்-2
தொலை தூர புதிய பூமியில்-- ப்ரோப்டிங் நாக்கில்---நீங்கள் விழித்தெழுவீர்கள்!
ஆங்கிலம் பேசும் பயிற்சியாளர்கள்... வந்து போகலாம்- அல்லது தங்கி சிகிச்சை பெறலா
டாபிடோ வந்து சேர்ந்திருந்த மாடஸ்டி-பல்கலைக்கழகத்தின் அருகாமையில் தங்கியிருந்தாள்-
சிகிச்சை பெற வந்தவள் போல் உள்ளே நுழைந்து விடலாம் தான்...! ஆனால் அதற்கு முன் சில அடிப்படை கண்ணோட்டம் அவசியம்!
தொலைவில் படகிலிருந்து கொண்டே முதலில் நோட்டமிடலாம்-பின்னர் நீரடியில் மூழ்கி தீவை சென்றடையலாம்!
இலக்கை சென்றடைந்ததும் நீருக்கு மேலே வந்தான் மாடஸ்டி...
கரையோரமாக நிறையப் பேர் குளித்துக் கொண்டிருந்தனர்
எனக்குத் தேவையானது, அங்கே உடைமாற்றும் மறைவிடத்தில் கிடைக்கக் கூடும்!



விரைவில்-
கச்சிதமாக பொருந்தி விட்டது...!
நூறு மீட்டர் அப்பால் பாறைகளின் மறைவில் பயிற்சியாளரின் உடையை அணிந்து கொண்டாள் மாடஸ்டி...
வேஷத்தை முழுமையாக்க— கையில் ஒரு குறிப்பேடு போதும்...!
இனி என்னை யாரும் சந்தேகிக்க மாட்டார்கள்...
நன்றி— இங்கே நீங்கள் புதியவர்... அப்படித்தானே?
பல்கலைக் கழக கட்டிடத்திற்குத்தானே போகிறீர்கள் மேடம்— காரில் ஏறிக் கொள்ளுங்களேன்!
பிரதான முற்றத்தில்—
நிர்வாகப் பிரிவு— ஆராய வேண்டிய இடம்!
கட்டிட அமைப்பை முழுவதுமாக தெரிந்து கொண்டு விட வேண்டும்... முதலில்!



அங்கே-
எழுந்தி-
ருங்கள்...
சே...மறைந்து
விட்டாளே!


ஐயோ ... நாம் மேஜையின் மீதா இருக்கிறோம்?
அந்தப் பாவிகள் தூண்டி விட்ட பிரமை இது என்றால் எதிரே நிற்கும் நீங்களும் நிஜமாக இருக்க முடியாதே, வில்லி!
கனவு காண்-கிறேனா?
இல்லை ரீனா — நான் நிஜம்...! இருவருக்கும் ஒரே நேரத்தில் ஒரே மாதிரி-யான பிரமை ஏற்படுவது சாத்தியமில்லையே!
அந்த சண்டாளர்கள் சொன்ன ஒரு வார்த்தை நினைவுக்கு வருகிறது...
கலிவரின் யாத்திரையில் வரும் ராட்சஸர்களின் பூமியல்லவா அது... சொன்னபடியே சாதித்து விட்டார்-களே — கிராதகர்கள்!
ப்ரோப்டிங்நாக்!


சாத்தியமில்லாத ஒன்றை நம்ப வைக்கப் போகிறோம் என்றார்கள்... இந்தப் பிரமை நிஜம்தான்... கவனத்தில் விழும் அறையைப் போல!
அதையும் பரிட்சித்து விடலாமே
நிஜமா... கனவா — என்றறிய
சக்!
வலியும் பிரமை தான் என்றில்லா- விடில் அத்தனையும் நிஜம் தான்!
ஸாரி வில்லி...
இருவருமே ஒரே மாதிரி- யான மாயத் தோற்றத்- தை காண்பதாக வைத்துக் கொண்டாலும் பிரமை- யிலிருந்து விடுபடும் வரை அதை நிரூபிக்க முடியாது ..
உண்மை தான்...!
எனவே, அதற்கிடை யே—அன்று கலிவர் ப்ரோப்டிங்நாக்கில் செய்தது போல் ஆராய்ச்சியை தொடங்குவோம்...
...அறை ஒன்றினுள் இப்போது நாம் இருக்கிறோம்... வெளி உலகை காண முடிந்- தால் விளக்கம் கிடைக்கலாம்
ஆனால்... இவ்வளவு பெரிய மேஜையின் மேலே இருந்து முன்னர் எப்போதாவது கீழே இறங்கியிருக்- கிறீர்களா?


நமக்கு உதவக்கூடிய பொருள் ஏதேனும் அகப்படுமா என்று தேடிப் பார்ப்போம் வா!
எவ்வகையானது?
ம்ம்- கீழே இறங்க நூல்-ஏணி தயாரிக்கப்பயன்படும் ஏதேனும்-
விளையாடுகிறீர்களா?
சேச்சே- நிஜமாத் தான் சொல்கிறேன்!
புதுமையான அனுபவம்!
அங்கே பாருங்கள் சிலந்தி ஒன்று உங்களுடைய தலை அளவுக்கு!
அந்தப் பிழவி-லிருந்து- இப்போது தான் வெளிப்பட்டது!
அங்கே நிஜ உலகில் மாடஸ்டி
இதுவரை வித்தியாசமாக எதுவுமே கண்ணில் படவில்லை!


அடுத்து ஐந்தாவது மாடிக்கு சென்று ஆராய்ச்சியை தொடர்ந்தாள் மாடஸ்டி-
தாழிட்ட அறை எதுவுமே இல்லை- சந்தேகப்படும்படியானது ஒன்று கூட இல்லை இங்கே!
தளப்பகுதியை தவிர கட்டிடம் முழுவதும் நோட்டம் விட்டாயிற்று!
பத்து நிமிடங்களுக்குப் பின் பிரம்மாண்டமான தண்ணீர் தொட்டி ஒன்றின் பின்னால்-
தாழிடப்பட்டிருக்கிறது- கட்டிடத்தின் வெளிப்புற சுவர் இது- எனவே கதவின் பின்னாலிருப்பது நிலவறையாக இருக்கவேண்டும்!
மறைவிடத்தில் அமர்ந்து பொறுமையாக காத்துக்கொண்டிருந்தாள் மாடஸ்டி-
பூட்டை உடைத்துத்தான் திற
வேண்டியிருக்கும். இரவில் வை
துக்கொள்ள வேண்டும் அந்த
விஷமத்தை!
அங்கே மாய உலகில்-
முறைக்கிறது பாருங்கள் சகிக்கவில்லை-
அது நம்மை கடிக்கப் போவதில்லை- ஆனாலும் விரட்டிவிடலாம்!


ஓடுகிறது பார்! இடுக்கில்
புகுந்து மறைந்துவிட்டது!
இனி கீழே இறங்கும் வழி
வகையை திட்டமிடலாம்!
முப்பது அடி உயர-
மாவது இருக்கும்
போலிருக்கிறதே!
மேஜை மீது இருந்த பல்குத்தும்
குச்சிகளில் ஒன்றையெடுத்து
ஈட்டி போல் எறிந்தார் கார்வின்
அதோ அங்கே கிடக்கும்
சோபாவின் மீது குதிக்க
முடிந்தால் வேலை
சுலபமாகிவிடும்!
தட்டுகள் வைக்கும் அடுக்கை
மேஜை விளிம்புக்கு நகர்த்து!
நகர்த்து?!...
இந்தக் கத்தியை அதன்
அடியில் செருகுவோம்!
மிகுந்த பிரயாசைக்குப் பின்-
ம்- தாங்கும்!
அடுத்து ஒயின் ஜாடியை கீழே
தள்ளி உடைக்க வேண்டும்!


அங்கிருந்து சோபாவின் மீது குதிக்க உங்களால் முடியும். ஆனால் என்னால் முடியாதே!
நான் மட்டும் இங்கே மாட்டிக் கொள்வேன்!
ஊஹூம் அப்படியெல்லாம் இல்லை! வந்து ஒரு கை பிடி!
என்ன தான் செய்கிறீர்கள்?
மேஜை விளிம்புக்கு நகர்த்து!
அந்த ராட்சஸ சிலந்தியை பார்த்தாயல்லவா? அங்கே கீழே இன்னும் என்ன வகையான பயங்கர ஜந்துக்களை எல்லாம் சமாளிக்க வேண்டி வருமோ?
எனவே கையில் ஏதாவது ஆயுதம் இருப்பது நல்லதல்லதா?
அதற்கும் இதற்கும் என்ன சம்மந்தம்?
க்ராஷ்!
பிறகு விபரமாக சொல்கிறேன்- அந்த நாப்கின் சுருளை விளிம்புக்கு நகர்த்து!



எதுவும் தேவையில்லை!
அடுத்து உயிரை பணயம் வைத்து பாயப் போகிறேன்!
இரைச்சலை உறிஞ்சி எடுக்கும் குச்சி-கள்- உடைந்த கண்ணாடி துண்டுகள்- நாப்கின் சுருள்- மேற்கொண்டு?
கத்தி முனையிலிருந்து பாய்ந்தால் எட்டும் தொலைவில் தான் இருக்கிறது சோபா!
அடுத்து-
ஹுப்!
பொத்தென்று மெத்தை மீது போய் விழுந்தார் கார்வின்-
யுக்தி பலித்துவிட்டது!
சோபாவிலிருந்து மெத்தையை கீழே தள்ளினார் கார்வின்-
51


பின்னர் அதன் மீது குதித்து கீழே இறங்கிக்கொண்டு மேஜையருகே இழுத்துப் போட்டார்-
இனி நீ குதிக்கலாம்– பயமின்றி!
சொல்லிவிட்டீர்கள்- சுலபமாக!
வேறொரு இரகசிய
ஆமாம் டைரக்டர்!
கண்காணித்து வருகிறோம்!
சோதனை வெற்றியடைந்து வருகிறது- சாத்தியமில்லாத சம்பவங்களை நிஜம் என்று நம்பும்படி கார்வின்-ரீனா இருவரின் மனங்களிலும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்!
சந்தடி அடங்கிவிட்டது- இனி பூட்டை திறக்கும் முயற்சியை தொடங்கிவிடலாம்!
Oooo
தள பகுதியில்-
பிறர் சந்தேகிக்காத வண்ணம் தாக்குப்பிடித்தால் மட்டுமே வந்த காரியத்தை வெற்றி கரமாக முடிக்கலாம்!
அங்கே-
குதிக்கலாமா நான்?



முதுகு கீழே இருக்குமாறு விழு!
பொத்!
மறுகணம் -
பலே!
இனி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொள்ளவேண்டும்!
சிலந்தியே அத்தனை பெரிது என்றால் இங்கே மற்ற பெரிய ஜந்துக்கள் சுலப மாக நம்மை விழுங்கிவிடக்கூடும்!
இது எஃகு கத்திக்கு சமமாகாது என்றாலும் ஒன்றுமே இல்லை என் பதற்கு இந்த கூரிய கண்ணாடி துண்டு தேவலாம் அல்லவா?
சிக்கலில் மாட்டிக்கொண்டு தவிக்கும் போதெல்லாம் அருகில் மாடஸ்டி யில்லையே என்ற எண்ணம் தானாகவே வந்துவிடும்!
பக்கத்தில் மாடஸ்டி இருந்திருக்கலாம் என்று நினைக்கிறீர்களா?
அவளுடைய மதி நுட்பமும் செயல் வேகமும் அபூர்வ மானது!
நம் அடுத்த நடவடிக்கை?
53


ஜன்னலருகே சென்று வெளியுலகை எட்டிப் பார்ப்போம்!
எதற்காக?
எனக்கே காரணம் தெரியவில்
மனத்தின் தன்னிச்சையா
தூண்டுதல்!
அபாரமான விழிப்-புணர்ச்சியுடையவர் நீங்கள் என்று மாடஸ்டி சொல்லி கேள்விப்பட்டு இருக்கிறேன்!
வில்லி! அங்கே-
க்ர்ர்ர்!
திடீரென்று சுவரிலிருந்த ஒரு துளையிலி
ருந்து ராட்சஸ அளவிலான பெருச்சா
ஒன்று தலையை நீட்டி கிரீச்சிட்டது-
வெளியேறி வந்து நம்மைக் கடித்து குதறிவிடப் போகிறது!
அது வெளியேறி வர முடியாது!
அந்த அளவுக்கு துளை பெரிதல்ல!


ஆனால் பயங்கரமாக கிறீச்சிடுவதை நிறுத்தவேயில்லை அந்த ஜந்து-
மாயத்தோற்றங்கள் நம் இஷ்டத்திற்கு ஏற் படுத்திக் கொள்ளக் கூடியவை அல்ல!
அந்த திரைச்சீலைகள் நீக்கடு இருந்தால் அவற்றை பற்றி மேலே போய்விடலாம்!
மேலேயிருந்து கயிறு ஒன்று தொங்குகிறது பாருங்கள்!
அந்தக்கயிற்றை தன் பலம் கொண்ட மட்டும் இழுத்தார் கார்வின்!
இந்த வீட்டின் உரிமையாளர் எந்நேரமும் இங்கே வந்துவிடலாமல்லவா?
கார்வின் ஏறத்தொடங்கியபோது
ஜன்னல் வழியாக எப்படிப்பட்ட காட்சி தென்படும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?
ப்ரோப்டிங் நாக்கின் தெருக்களில் நடமாடும் ராட்சஸ உருவங்கள் தென்பட்டதெனில்-
55


உண்மையை புரிந்து கொண்டுவிடலாம்!
ஆனால் தலையை சுற்றுகிறதே!
ரீனா.....
கார்வினை மயக்கம் தழுவுவத
முன்பே அவர் மீது மயங்கிச்
சரிந்துவிட்டாள் ரீனா-
திறக்க முடியவில்லை- பிளாஸ்டிக் வெடியை பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம்!
அத்தியாயம்-3
தள பகுதியில்-.
அதையடுத்
அதிக சப்தம் எழவில்லை- ஆனால் அடுத்து இந்தக் கதவை திறப்பவர்கள் சுலப-மாக தெரிந்துகொள்ளக்கூடும் இந்த விஷயத்தை!
கீழே மட்டுமே செல்லும் லிப்ட், படிக்கட்டு-
மடமடவென்று படிகளில் விரைந்தா
மாடஸ்டி-
ஓகோ- பல இரகசிய அறைகள் இங்கே உள்ளன!


ஓரிரு அறைக்குள் நுழைந்து தேடினால் எனக்கு வேண்டியது கிடைத்துவிடக்கூடும்!
யெஸ்! டாக்டர் யாகோ- இதோ இணைப்புக் கொடுக்கிறேன்!
யாரது யாகோ?
பழைய சாமான்கள் தான் இங்கே கிடக்கிறது!
பதிவேடுகள், குறிப்பேடுகள், பெட்டகம் இருக்கக்கூடிய அலுவலக அறையை தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்!
தேடும் படலத்தைத் தொடர்ந்தான் மாடஸ்டி-
டாக்டர் யாகோவும் டாக்டர் வாலேயும் ஆய்வுக்கூடத்தில்-
ம். விழித்து எழுகிறார்கள்!
கனவுலகமான ப்ரோடிங் நாக்கிலிருந்து திரும்பி வந்திருக்கும் உங்களுக்கு நல்வரவு!
உங்களுடைய மனங்களின் மீதான எங்களுடைய ஆதிக்கம் விளங்கியிருக்குமே!


உன்னுடைய அனுபவத்தை மிஸ் ரீனுவிடம் சொல் கார்வின்- இருவருக்கும் ஒரே மாதிரியான பிரமை ஏற்பட்ட உண்மையை தெரிந்து கொள்வீர்கள்!
அப்படியில்லை டாக்டர்!
ஏனெனில்- நான் வேறொரு அழகி யோடு வெனிஸ் நகரில் சுற்றுவதாக-
உண்மையை மறைக்க நினைக்காதே!
இருக்கவே முடியாது- ப்ரோப்டிங் நாக்கில் சிறு பொம்மை அளவுக்கு சிறிய உருவத்தில் நடமாடிக்கொண்டிருப்பதான பிரமை ஏற்பட்டிருக்கவேண்டும்!
ஓகோ- அப்படித் தானிருக்குமோ?
அங்கே நிறைய நீரோடைகள் இருக்குமா டாக்டர்! நான் கண்ட அழகி கூட ஏதோ பொம்மைக்கு உயிர் வந்த மாதிரி-
மூடு வாயை-
நீ கண்ட மாயத்தோற்றத்தைச் சொல் பெண்ணே!
58



கார்வினின் வழியை பின்பற்றி அவனும் நன்கு கதை விட்டான்-
நானும் இளவரசர் சார்லஸும் பறந்த விமானம் மனித சஞ்சாரமற்ற தீவில் விழுந்து விட்டதையடுத்து அவர்-
நம் சிகிச்சை முறை தோற்றுவிட்டதாக உணர்த்துவதன் மூலம் நம்மை குழப்ப சூழ்ச்சி செய்கிறார்கள்!
நிறுத்து!
இருவருமே கதை விடுகிறார்கள் டாக்டர் யாகோ!
இந்த சிகிச்சை முறையை வழிவகுக்க கோடிக்கணக்கில் செலவிட்டிருக்கிற நமது அரசாங்கம் தோல்வியை சகித்துக் கொள்ளாது!
சாதித்துக் காட்டி விட வேண்டும்!
உங்களுடைய மூளையில் நாங்கள் உருவாக்கிய மாயத் தோற்றத்தை நீங்கள் காணவில்லை என்று மறுப்பதா? மறுபடியும் சிகிச்சை அளிக்கப் போகிறோம்!
உங்களுடைய மனத்திண்மை இன்னொரு பயணத்திற்குத் தாக்குப் பிடிக்காது!
சரியாகச் சொன்னீர்கள் டாக்டர்!
எழுந்திருங்கள் வில்லி- மீண்டும் மாய உலகிற்கு வந்துவிட்டோம்!
அஹ்!
இரண்டாவது முறை-


அதே செட்-அப் மீண்டும்!
நாம் செய்த விஷமங்களின் சுவடேயில்லை- திரும்பவும் அதே யுக்திதானா?
ஒரு கட்டம் வரை அப்படி செய்வோம்- இம்முறை வி செயல்பட்டு புதிதாக ஏதே செய்ய முயற்சிக்க வேண்
அவர்களுக்கு இந்த மாயக்காட்சியை நிஜம் என்று நம்மை நம்ப வைத்துவிட முடிந்தால் பின்னர் எதை வேண்டுமானாலும் நிஜம் என்று நம்ப வைத்துவிட முடியுமல்லவா?
நிஜத்தன்மை பற்றி பின்ன பேசுவோம் இப்போது மு போல் கீழே செல்ல ஏற்பா செய்வோம்!
அங்கே மாடஸ்டி சிக்கலில் மாட்டிக்கொண்டாள்-
இப்படி நிதானமாக அலட்டிக் கொள்ளாமல் நடந்தால் குழம்பிப் போவார்கள்!
யார் நீ- இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?
யாரது- அங்கே?
ஓ- எனக்கு நீங்க உதவக்கூடும்!


காதில் விழுந்த பெயரை பயன் படுத்தி அருகே நெருங்க வகை செய்து கொண்டாள்-
டாக்டர் யாரோ அழைத்ததாக சொன்னார்கள்- வழிதவறிவிட்டது-
அவர் என்னிடம் உன்னைப்பற்றி ஏதும் குறிப்பிடவில்லையே?
ஒரே நேரத்தில் இருவரையும் தாக்கினாள் மாடஸ்டி-
சத்!
அஹ்
ஒருவன் சுதாரித்து எழுந்தவாறு துப்பாக்கியில் கை வைத்தான்-
மறுபடியும் ஒரு மின்னல் தாக்கு-
ஸாங்!
உப்!
நல்லவேளை-வேறு யாரும் தெரிந்து கொண்டுவிடவில்லை ஒதுக்குப் புறமாக இவர்களை இழுத்துப் போடவேண்டும்!
இங்கே நடக்கும் விவகாரம் எதுவாகயிருந்தாலும் ஒருசில நபர்களே சம்பந்தப்பட்டு இருப்பதாகத் தோன்றுகிறது!
அதையடுத்து-


அடுத்த இரண்டு மணி நேரத்திற்காவது இவர்கள் விழித்துக் கொண்டுவிடலாகாது!
ஸ்டீல் அலமாரிகள்- இங்கு உருப்படியான பைல்கள் அகப்படலாம்!
இருவருக்கும் ஊசியை ஏற்றியபின்-
இரகசிய குறிப்பேடுகள்!
குறிப்பிட்ட சில பக்கங்களை புகைப்படம் எடுத்தாள்-
விவகாரம் எப்படிப்பட்டதென்று C.I.A.க்கு கோடி காட்ட போதுமான தகவல் சேகரித்தாலே போதும்!
இரண்டு பிலிம் சுருள்களில் படம் எடுத்துக்கொண்ட பின்-
லிப்ட் வருகிறது- என்னை பார்த்து விடுவார்களோ?
நல்லவேளை- ஆனால் அந்தக் கதவில் நான் செய்திருக்கும் விஷமம் நிச்சயமாக பார்வையில் பட்டுவிடும்!
நிதானமாக அடி எடுத்து வைத்து இன்னும் கொஞ்சதூரம் கீழே சென்றாள் மாடஸ்டி-


விரைவிலேயே அபாய எச்சரிக்கை நடவடிக்கைகள் தொடங்கப் போவது உறுதி!
என்ன ஒலி அது- அங்கிருக்கும் காஸட்டிலிருந்து? ஏதோ பிருண்டுகிற மாதிரி!
முன்போலவே கீழே இறங்கி வந்து ஆயுதங்களை தயார்செய்து கொண்டார்கள்- கார்வினும் ரீனாவும்-
ம் போகலாமா?
அங்கே தென்படுவது என்ன? சுவரிலுள்ள துளையை அடைத்துக்கொண்டு நிற்கிறது! சிறு தண்டவாளத்தின் மீது நிற்கும் அதை நகரச்செய்ய மின் அமைப்பு கூட இருக்கிறது!
ராட்சஸ சிலந்தியும் பெருச்சாளியும் வரக்கூடும் ஜாக்கிரதை!
நான் மறந்துவிடவில்லை!
பெருச்சாளியின் தலை மீண்டும் வெளிப்பட்டது அதே சீறலோடு-
அதோ மறுபடியும் -
இங்கேயே இரு- இம்முறை நான் நெருங்கிச் சென்று உற்றுப் பார்க்கிறேன்!


ஆனால் கார்வின் கிட்டே நெருங்-கியதும் சட்டென்று தலையை உள்ளுக்குள் இழுத்துக் கொண்டு விட்டது அந்த சைத்தான்-
மாடஸ்டி-நீயா? பிரமைக் காட்சியினுள் நீயும் எப்படி வந்து சேர்ந்தாய்?
பிரமைக் காட்சியா?
கனவுமல்ல- பிரமையுமல்ல- நிஜமாகவே நான் உளவறியும் நோக்கத்தோடு இங்கே இரகசியமாக நடமாடிக் கொண்டிருக்கிறேன்!
ஆக நீ கனவு காணவில்லை-குள்ளமாக குறுகிப் போய்விடவும் இல்லை- அப்படித்தானே இளவரசி!
ஆனால் ஏன் நீங்கள் இப்படி பிதற்றுகிறீர்கள் என்று என்னால் ஓரளவு யூகிக்க முடிகிறது!
இங்கே என்னதான் நடக்கிறது? ராட்சஸ உருவில் வடிவமைக்கப்பட்ட எலிபொம்மையையும் ஓசையெழுப்பும் கருவியையும் கண்டேன்!
மனதில் குழப்பத்தை ஏற்படுத்த செய்யப்பட்டுள்ள செட்-அப் இது! நிஜமாகவே பிரமையில் ப்ராப்டிங்நாக்கிற்கு வந்து விட்டோம்-என நம்மை நம்பச் செய்ய ஏற்பாடு இது!
ஆக இங்குள்ள அத்தனையுமே நிஜமா?


அப்படியானால், இந்த அறை யில் உள்ள அத்தனையுமே நிஜம் ராட்சஸ அளவில் செய்யப்பட்டவை!
மேலாடையை களைந்து எறி-சீக்கிரம்!
யாரோ மூன்றாவது நபர் ஊடுருவி இருப்பதாக தெரிகிறது.
ஆய்வுக் கூடத்தில்–
இதை அனுமதிக்க லாகாது- டி.வி.யை இயக்குங்கள் யாரென்று பார்த்து விடலாம்!
இதோ-
திரையில் பாருங்களேன்- ஆவ்-!
வில்லியின் குரலும் டி.வி.யில் கேட்டது-
நம் உடையின் உட்புறம் சிறு கருவி ஒன்று ஒட்டிக் கொண்டிருக்கிறது-பார்!
ஹிப்னட்டிஸ- கருவியை தூண்டுகிறேன்!
தோலை தொட்டுக் கொண்டிருக் கும் சிறு ஊசியோடு மின் இணைப்பு இருக்கிறது!
மின்னணு மூலமாக இந்த ஊசியை தூண்டி மருந்தை உட்செலுத்தி தூக்கத்தில் ஆழ்த்திவிட முடியும்!


ஊஹூம்-ஹிப்னட்டிஸ இணைப்பை அகற்றி விட்டார்கள்-உடம்பிலிருந்து!
அதோ-அங்கே ஒரு கேமரா ஒளிந்து கொண்டிருக்கிறது கவனி!
அங்கே-
கேமராவையும் பார்த்து விட்டார்கள்.
அதை அவர்கள் செயலிழக்கச் செய்யுமுன் நம் ஆட்களை அங்கே வரவழைத்து விட முடியும்-
ஆனால்-
அவர்கள் தொடர்ந்து நம்மை கண்காணிக்க முடியாமல் பண்ணி விடலாம்!
மாடஸ்டியின் பேச்சு டி.வி.யில் தெளிவாக கேட்டது.
இந்த செட்-அப் குறுகிய வட்ட டி.வி. யோடு இணைக்கப்பட்டிருக்கும்.
அந்தப் பெண்-சந்தேகமேயில்லை-மாடஸ்டி பிளைஸியேதான்!
பிரமைக் காட்சி போலி என்று தெரிந்து கொண்டார்கள். அவர்கள் தப்பி வெளியேறி விட்டால்-அத்தோடு தொலைந்தது நம் திட்டம்!
காவலர்கள் அனைவரும் 'பிரமை உலக' அறைக்கு ஓடி வரவும்!



உன் வசம் துப்பாக்கி இருக்கிறதா இளவரசி!
மறுகணம்-
ஒரே முயற்சியில் நொறுக்கித் தள்ளிவிட்டாளே!
மால்
எதற்கும் இனி, அடிக் குரலில் பேசுவோம்-
நான் வந்த வழியே நாம் திரும்ப ஓடிப் போய் விடலாம்-ஆனால் நிச்சயமாக எதிர்ப்பு இருக்கும்-
நேரடி மோதலே தவிர்ப்பது நலம்-
மாட்ஸ்டியிடம் ஆயுதங் கள் இருப்பதாக டாக் டர் வாலே சொல்கிறார்- எனவே நாம் ஜாக்கிர தையாக செயல்பட வேண்டும்!
இந்த எலி வளைதான் பிரமை உலக அறைக்குள் வந்துபோக இருக்கும் ஒரே வழி-
ஏதாவது தடையை அங்கே வைத்து விட்டால் நாம் சிந்திக்க கூடுதல் அவகாசம் கிடைக்கலாம்! ரீனா நீ என்னோடு வா!



திட்டத்தை எப்படி ஏற்படுத்துவது என்று நீ சொல்லவேயில்லையே!
வில்லியின் மதியூகத்தில் எனக்கு அபார நம்பிக்கை உண்டு!
கைவசம் இருந்த கொக்கியில் ஏதோ விஷமம் செய்யத் தொடங்கினாள் மாடஸ்டி-
மேஜையின் மேல் வில்லியோடு ஒருவரும் மற்றவர் கீழேயும் நின்றுகொள்வோம்!
எதிரிகளை நாம் விரும்பும் இடத்திற்கு வரவழைக்க வழக்கமாக நாங்கள் கையாளும் யுக்தி ஒன்று உண்டு!
வில்லி சொல்லி இருக்கிறார்!
அதில் என் பங்கைச் செய்யத் தயார்!
பல கண்ணாடித் துண்டுகளை நாப்கின் உருளையில் செருகினார் கார்வின்-
அதை உருட்டிச் சென்று எலி வளையினுள் தள்ளினார்-
மறுபக்கத்தில்-
கோவெக்- உள்ளே நீ போ- முதலில்!
எனக்கு மட்டும் உயிரின் மீது ஆசையில்லையா?


அப்போது திடீரென்று-
ஜாக்கிரதை!
மேஜையின் இரு கால்களோடு வெடிகளை பொருத்தினாள் மாடஸ்டி-
வில்லியும் மேலே வந்தார்-
எதிரிகள் உள்ளே வரும் வரை பொறுமையாக காத்திருப்போம்!
அடுத்து-
இங்கே என்ன விபரீதம் நடந்து இருக்கிறது என்று ஓரளவு யூகிக்க முடிகிறது. ஆனாலும் விபரமாக சொல்லுங்கள் வில்லி!
தடையை அகற்றிய பின்-
முடிந்தவரை அவர்களை உயிரோடு பிடிக்க முயற்சியுங்கள்!
நடந்தவைகளை விபரமாக எடுத்துரைத்தார் கார்வின்-
பிரமை எது நிஜம் எது என்று தெரிந்துகொள்ள முடியாத அளவுக்கு ஒருவனை குழப்பி விட்டால் அவனுடைய மனத்தின் மை அடியோடு மறைந்துவிடும்!
69


அதன் பிறகு நம் இஷ்டத்திற்கு அவனை ஆட்டிப்படைக்கமுடியும்!
அப்படியொரு குழப்பத்தை ஏற்படுத்தும் இந்த யுக்தியை பரீட்சித்துப் பார்க்க முயன்றிருக்கிறார்கள்!
ரீனா உங்களோடு இருந்தது நல்லதாகப் போயிற்று- இல்லாவிடில் இருவரின் அனுபவத்தையும் ஒத்துப் பார்க்க வாய்ப்பின்றி குழப்பம் நிலைத்துவிட்டிருக்கும்!
எதிரிகள் தங்கள் வெற்றியை கொண்டாடியிருப்பார்கள்!
அதோ வந்து விட்டார்கள்!
வாஸ்தவம்தான் இளவரசி!
மாடஸ்டியும் கார்வினும் கண்ணில் படாததால் ஒருகணம் திகைத்து நின்றார்கள்-
எங்கோ ஒளிந்து கொண்டிருக்கிறார்கள் ஜாக்கிரதை!
ரீனா மெள்ள விசிலடித்தாள்- அதற்காகவே காத்துக் கொண்டிருந்த மாடஸ்டி வெடிகளை தூண்டினாள்-
இறுக பற்றிக்கொள்ளுங்கள் வில்லி!
70


வெடிகள் வெடித்ததும் மேஜையின் இரண்டு கால்கள் முறிந்தன—.
என்னது?
கச்சிதமான வேலை!
பிரமாதம்!
கால்கள் முறிந்ததால் மேஜை சரிந்தது-
சறுக்கியவாறு விரைந்து கீழே வந்தடைந்தனர் கார்வினும், மாடஸ்டியும்-
நம்மில் யாராவது உள்ளே போய் பார்த்தால்தான் தெரியும்!
அங்கே ஏதோ நொறுங்கிய சப்தம் கேட்டதே?
என்ன விவகாரம்?
போச்சு-எல்லாமே போச்சு- ஏகப்பட்ட செலவில், கஷ்டப் பட்டு நாம் நிர்மாணித்த மாயஜால உலகத்தை நாசம் செய்கிறார்கள்-


மடேர்!!
அதிரடித் தாக்குதல்-
மின்னல் வேகத்தில் மாடஸ்டியும் தாக்கினாள்-
சத்!
பித்தலாட்டமா பண்ணுகிறீர்கள்?
தொலைகிறான்-விட்டு விடு இளவரசி!
அசையாமல் அப்படியே நில்லுங்கள்-
இல்லையேல் சுடப்படுவீர்கள்!
துப்பாக்கியை சரியாக பிடிக்கக்கூட தெரியவில்லை?
என்ன?
அதிலுள்ள பாதுகாப்பு-தடையை விலக்கினீர்களோ?
கதவைக் கூட குறி வைத்து சுட முடி-யாது கற்றுக் குட்டிகளால்!


சரியாகச் சொன்னாய்!
கைகளை உயர்த்துங்கள்-
முதலில்- பெண்கள்-
இரகசியமாக கீழே கிடந்த கட்டையினுள் பாதத்தை நுழைத்தாள் மாடஸ்டி-
சட்டென்று கட்டையை வாரிவிட்டாள் மாடஸ்டி-
மறுகணம் - கார்லினின் கையிலிருந்து புறப்பட்டது அந்தக் கட்டை-
தற்காப்புக்காக!
துப்பாக்கியை நீட்டாதீர் என்று எச்சரித்தேன். கோரிக்கையை விளக்க நீங்கள் அவகாசம் கொடுக்க மாட்டீர்கள் என்றார் டாக்டர் வரலே!
கோரிக்கையா?
ஆமாம்-அமெரிக்காவில் எங்களுக்கு புகலிடம் தரவேண்டும். ஏகப்பட்ட பொருட்செலவில் திட்டமிடப் பட்ட இந்த யுக்தியின் வெற்றி அது பரம இரகசியமாக இருக்கும்வரை தான் ஆனால்-இப்போது-


அம்பலமாகி விட்ட தால் அர்த்தமற்றுப் போய் விட்டது!
இவர்களோடு புது உறவு ஏற்படுத்திக் கொண் டுள்ளேன்!
டாக்டர் வாலேக்கு நினைவு திரும்பியது-
அ-அ-என்ன நடந்தது?
அவரை கீழே இறக்கி விடலாமே வில்லி!
இனியும் உள்ளே வேலையில்லை நமக்கு!
தளத்தை வந்தடைந் ததும்-
இங்கேதான் பூட்டை உடைத்து உள்ளே புகுந்தேன்-
ஓ-வெளியேறப் போகிறோமா!
நிர்வாகப் பிரிவுக்கு வெளியே விடிவதற்கு சற்று முன்னதாக-
எனக்கும் டாக்டர் வாலேக்கும் அமெரிக்காவில் புகலிடம் கிடைக்காவிடில் ஆயுளுக்கும் சிறையில் வாட வேண்டி யிருக்கும்-
கடைசித் தருணத்தில் டாக்டர் யாகோ விஷமத் தனமாகஏதாவது செய்து விடுவாரோ என்று நினைத்தேன்.
தேவை-யில்லாத கற்பனை!
இங்குள்ள C.I.A. அதி-காரியிடம் ஒப்படைக்கப் போகிறேன் உங்களை!


அரைமணி நேரத்திற்குப் பின் அமெரிக்க அதிகாரியின் வீட்டை சென்றடைந்தனர்-
மிஸ்டர் ஸ்மித்ஸன்? என்னைத் தெரிகிறதல்லவா?
தெரியாமலென்ன, மிஸ் மாடஸ்டி!
ஆனல்-தனியாக வரு-வீர்கள் என்று எனக்குத் தகவல்-பன்னிரண்டு மணி நேரம் முன்னதாகவே எதிர்பார்த்தேன்.
சற்றுத் தாமதமாகி விட்டது!
'இதுதான் 'உடல்நல பல்கலைக் கழகம்'-பணியை தொடங்கு முன் முழு விபரமும் தெரிந்து கொள்வது நல்லதல்லவா?
பணி ஏற்கனவே முடிந்து விட்டது!
மனத்தை வசப்படுத்தும் புதுவகை சிகிச்சை முறையை அங்கே திட்டமிட்டு உருவாக்கி வந்திருக்கிறார்கள், இதோ இங்கே நிற்கும் டாக்டர் யாகோவும்-இவர்களுக்கு அமெரிக்காவில் புகலிடம் தரவேண்டுமாம்-
ஓ-! அப்படியா!
எங்கள் நாட்டுக்குச் சென்றால் அரசாங்கம் சும்மா விடாது எங்களை!
உயிரின்மீது ஆசை-யாருக்குத்தான் இல்லை!
குறித்துக் கொள்ள நீங்கள் தயார் என்றால் எங்களுடைய இரகசிய ஆராய்ச்சி பற்றிய அனைத்து விபரங்களையும் இப்போதே வெளியிடத் தயார்!
சரி-நான் விடைபெறுகிறேன்!

# எலிகள் ஜாக்கிரதை!


ஆயிரக்கணக்கான எலிகள் படையெடுத்து வருகின்றன!
ஓடுங்கள்! இல்லையேல் தொலைந்தோம்!
நியூயார்க் நகரின் மீது தாக்குதலை எலிகள் துவங்கிய போது நண் பகல் இருக்கும்!
எதிர்பாரா இந்தப் பிரச்சினையைத் தீர்க்க படையினர் வரவழைக்கப்பட்டனர்-
எவ்வித தாக்குதலுக்கும் மசியக் காணோம்!
இவற்றைத் தடுத்து நிறுத்தவே முடியாது! பின் வாங்குங்கள்!
வந்த வேகத்திலேயே தாக்குதல் முற்றுப் பெற்றது. நியூயார்க்கில் அமைதி திரும்பியது. ஒரு வாரத்திற்குப்பின், கிழக்கு ஐரோப்பாவில்-
இந்த எலிப்படை எதிர்த்து நிற்கும் அனைத்தையும் அழித்துவருகிறது காம்ரேட்ஸ்!
ஓடுங்கள்!
அந்த தாக்குதலும் திடுதிடுப்பென ஓய்ந்து போனது. ஆனால் விரைவில் இத்தாலியத்தலைநகரான ரோமில் கைவரிசையைக் காட்டின-
நகரத்தையே சூறையாடுகின்றன சனியன்கள்! மக்களைக் கொன்று உணவையும் நாசம் செய்கின்றன!
இ- இதற்கு என்ன காரணம்? எலிகளுக்கு வெறிபிடித்துவிட்டதா?
உலக மக்கள் அனைவரையும் அதே கேள்வி வாட்டி வந்தது. ஐ.நா. சபையில் அவசர கால மீட்டிங் கூட்டப்பட்டது!
ஒவ்வொரு நாட்டிலும் லட்சக்கணக்கான எலிகள் உள்ளன! அவை அனைத்தும் இதேபோல தாக்கத் தொடங்கினால் மனித குலமே அழிந்துவிடக்கூடும்!


C.I.D. லாரன்ஸும் அற்புத பலம் படைத்த அவரது சகாவான ஜீடோ டேவிட்டும் ஐ.நா வின் விசேஷ அழைப்பின் பேரில் அங்கே வந்திருந்தனர்-
கனவான்களே, இந்த இரு வீரர்களும் எண்ணற்ற தீய சக்திகளை ஒடுக்குவதில் நமக்கு உதவியுள்ளனர்- இந்த எலிகளின் அபாயத்திலிருந்து நம்மைக் காக்க இவர்களே சரியான நபர்கள்!
பின்னர், எலிகளின் சமீபத்தைய தாக்குதலின் இலக்குகளை உலக வரைபடத்தின் மீது குறித்துப் பார்த்த பொழுது-
டேவிட்- இதைப் பார்- க்விக்!
அடி சக்கை- அ.கொ.தீ கழகத்தின் ரகசியத் தலைமையகங்கள் இருக்கும் எல்லா நகரங்களிலும் எலிகள் அட்டகாசம் செய்துள்ளன!
அழிவு, கொள்ளை, தீமை செய்வதையே குறிக்கோளாய் கொண்ட கொடிய ஸ்தாபனம்தான் அ.கொ.தீ. கழகம்-
இதுவும் அந்தக் கிராதகர்களின் வேலைதானா?
பார்- அ.கொ.தீ.களின் ரகசியத் தலைமையகம் இருந்தும் இதுவரை எலிகளின் தாக்குதலுக்கு உட்படாத ஒரே நகரம் ரோட்டர்டேம்தான்! என் யூகம் சரியாக இருக்கும் பட்சத்தில் எலிகளின் அடுத்த இலக்கு ரோட்டர்டேமாகதானிருக்கும்!
மறுநாளே லாரன்ஸும் டேவிட்டும் ஹாலந்து நாட்டை நோக்கிப் பறந்தனர்- இருநாட்களுக்கு அ.கொ.தீ.களின் நடவடிக்கைகளை நோட்டமிட்டவாறே இருந்தனர். மூன்றாவது நாள்-
ஸார்- அவன்தான் கொரில்லா காங்! அ.கொ.தீ.களின் பயங்கரக் கொலைகாரன்!
அவனைப் பின் தொடருவோம் வா!
ஒரு மணி நேரத்திற்குப் பின்னர்-
அந்தப் பழுதடைந்த ஆலையினுள் போகிறான் பயல்! வாசலில் காவலன் நிற்கிறான்! நாம் பின்வழி மூலமாய் முயற்சிப்பது நல்லது!
விரைவில்-
இந்தப் பக்கம் கதவு ஏதும் இல்லாததால் காவலாளி எவனையும் காணவில்லை! ஆனால் உயரத்தில் ஒரு ஜன்னல் உள்ளது. அது தான் நமக்கு சரியான வாய்ப்பு!


டேவிட்டின் அபார வலிமையின் உதவியுடன் ஆலேயின் சுழலும் கரம் ஒன்றினை எட்டிப் பிடித்தார் லாரன்ஸ்!
அப்பாடா! இனி ஒரு கயிற்றை அனுப்பி, டேவிட்டை மேலே வரச் செய்து விடலாம்!
உள்ளே-
கணப் பொழுதில் மேலேயிருந்த திறந்த ஜன்னலை சென்றடைந்தனர் தோழர்கள்-
அ.கொ.தீ.க.வின் சதிவேலை என்ன-வென்று விரைவில் கண்டு விடலாம்!
இதோ, எனது அற்புதக் கண்டுபிடிப்பான 'சானிக் சென்சிடைசரிலிருந்து' இப்பொழுது வெளிவந்து கொண்டிருக்கும் ஓசை, மனித செவிகளுக்கு எட்டாத ஒரு அலைவரிசையில் உள்ளது! ஐந்து மைல் சுற்றுக்குள் இருக்கும் எலிகளை மட்டுமே இந்த சப்தம் பாதிக்கும்- வெகுண்டுபோய் இந்த நகர மக்களை எலிகள் தாக்கும்!
அ.கொ.தீ.க.வின் அபார ஆற்றலை உலகிற்கு எடுத்துக் காட்டும் கடைசி உதாரணமாய் இச்சம்பவம் அமையும்! இதற்குப் பின், உலகத் தலைவர்களுக்கு எச்சரிக்கை விடுப்போம்-"அ.கொ.தீ.கவிடம் சரணடையுங்கள்-அல்லது மனித குலமே அழிக்கப்படும்"
அருமையான திட்டம் புரபஸர்! எலிகளைத் தடுத்து நிறுத்த எவராலும் முடியாது!
உன்னிப்பாகக் கவனித்து வந்த லாரன்ஸ், டேவிட்டுக்கு திடீரென உலகமே இருண்டு போனது-
ஆ ஆ
புரபஸர்! இதோ இரு அழையா விருந்தாளிகள்!
இருவருக்கும் நினைவு திரும்பிய பொழுது, தாம் உறுதியாகக் கட்டிப் போடப்பட்டிருப்பதை உணர்ந்தனர்!
நல்வரவு லாரன்ஸ் & டேவிட்! உங்களை இந்தப் பணியில் ஈடுபடச் செய்ததற்காக உலகமே வருந்தப் போகிறது! இதோ இப்பொழுதே இலண்டனுக்குப் புறப்பட்டுச் சென்று எலிகளால் நகரையே அழிக்கப்போகிறேன்!


அடுத்த சில நிமிடங்களுக்குள் அ.கொ.தீ.க. கும்பல் ஒரு ஹெலிகாப்டரில் பறந்துவிட்டது!
அந்த விசித்திர டிரான்ஸ் மீட்டரை எடுத்துச் சென்று விட்டார்கள்!
இதோ அந்தக் கருவி எழுப்பிய ஓசையைக்கேட்டு வருகின்றன எலிகள்! க்விக்- உன் கைகளை என் கால்களுக்கருகே கொண்டு வா டேவிட்!
இடதுகால் பூட்ஸை தரைமீது ஓங்கி லாரன்ஸ் அறைய அதனுள்ளிருந்து ஒரு கூர்மையான வட்டவடிவ ரம்பம் வெளிப்பட்டது-
கைகளை அசைக்காமல் வைத்திரு டேவிட் கயிற்றை நான் அறுத்து விடுகிறேன்!
டேவிட் விடுபட்டவுடன் லாரன்ஸின் கட்டுகளை அவிழ்த்து விட்டார்!
நெருப்புப் பிஸ்டல்களை வெளியே எடு டேவிட்!
மறுகணம் இருவரின் பிஸ்டல்களும் எலிகளுக்கு மரணத்தை பரிசளித்தன-
எல்லா விலங்குகளைப்போலவும் எலிகள் நெருப்பைக் கண்டு அஞ்சுகின்றன!
அங்குலம் அங்குலமாய் இருவரும் வெளியேறினர்-
இதே கணத்தில் அ.கொ.தீ.க தடியர்கள் இங்கிலாந்து நோக்கிப் பறந்து கொண்டிருப்பார்கள்! நாமும் அங்கே போய்ச் சேர வேண்டும் உடனடியாக!
அரைமணி நேரம் கழித்து, ரோட்டர்டேம் துறைமுகத்திலிருந்து ஒரு அதிவேக இயந்திரப் படகு பறந்து கொண்டிருந்தது-
நம் வரவை எதிர்நோக்கி பிரிட்டிஷ் உளவுப்படை அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருக்கும் சார்!


இங்கிலாந்தை வந்தடைந்ததும்-
டேவிட், அந்தக் கிராதகர்களின் இருப்பிடத்தைக் கண்டறியும் பொருட்டு, ஒரு தடியனின் மீது மினி டிரான்ஸ்மீட்டர் ஒன்றை பொருத்தியுள்ளேன்!
காரிலிருந்த ரேடாரில் அந்த டிரான்ஸ் மீட்டர் எழுப்பும் சமிக்ஞைகள் பதிவாயின-
அதோ! மத்திய இலண்டனின் திசையிலிருந்து தான் வருகிறது!
இலண்டனின் ஒரு மோசமான ஆற்றோரப் பகுதிக்கு அவர்களை இட்டுச் சென்றது ரேடார்-
சார்! எலிகளைப் பார்த்தீர்களா?
நம் திருட்டு நண்பர்கள் அதற்குள்ளாக காரியத்தில் இறங்கி விட்டனர் போலும்!
சாலை மீது வழுக்கிக் கொண்டு பறந்தது கார்-
அதோ-ஆற்றை நோக்கியிருக்கும் அந்தப் பெரிய கிட்டங்கியிலிருந்து தான் சமிக்ஞைகள் வருகின்றன!
எலிகள் நெருங்கும் முன்னர் கிட்டங்கியை சென்றடைந்தனர்-
இதோ-உள்ளே நுழைய சுலபமான வழி!
டேவிட்டின் வலிமையான கரங்களுக்கு முன்னால், இரும்புக் கம்பிகள் தோல்வி-யடைந்தன-


ஓசையின்றி முன்னேறி எதிர்ப்பட்ட காவலர் அனைவரையும் வீழ்த்தினர்-
ஆஆ ஆ!
இறுதியில்-
இதோ அந்த நாசக் கருவி!
மெல்ல நெருங்கி வந்தனர் ஆனால்-
லாரன்ஸ், டேவிட் நீங்கள் இருவரும் இன்னுமா உயிரோடு இருக்கிறீர்கள்!
கணப்பொழுதில் துப்பாக்கியை உருவி எடுத்தான் அந்தக் கொடியவன்!
FULL POWER
சாவதற்கு முன்னால் என் கருவியின் முழு ஆற்றலையும் பார்க்க வேண்டாமா நீங்கள்? இதோ உச்ச வேக செயல் திறனுக்கு இயந்திரத்தைக் கொண்டு வந்துள்ளேன்!
ஹா! ஹா! தறிகெட்டுப் பாயும் எலிகள் இன்னும் சில மணி நேரங்களுக்குள் இலண்டனையே சுடுகாடாக ஆக்கிவிடும்!
புரபஸர் உங்கள் பின்னால் பாருங்கள்! எலிப்பட்டாளம்!
அறிவிலிகளே! இது போன்ற சிறுபிள்ளைத்தன-மான தந்திரவேலையால் என்னை மடக்கி விட முடியாது! என் வசம் இருக்கும் இந்த எதிர்ப்புக் கருவி எலிகளின் தாக்குதல்களிலிருந்து என்னைப் பாதுகாக்கும்!



ஆனல் புரபஸர் வாயை மூடும் முன்-
ஆஆஆ!
படுபயங்கரம்! உச்ச வேகத்தில் அந்த இயந்திரத்திலிருந்து எழுந்த ஒலியலைகள்-எதிர்ப்புக் கருவியின் சக்தியை முறியடித்து விட்டன போலும்!
மறுகணம், சென்சிடைஸரை நிறுத்தி விட்டு, நெருப்புப் பிஸ்டலால் எலிகளைத் தாக்கத் தொடங்கினர்!
புரபஸர் என்ன ஆனர் சார்?
செத்துப் போய் விட்டார்! எலிகள் அவர் கணக்கை முடித்து விட்டன!
''சானிக் சென்சிடைஸர்'' செயல்படாமல் நின்று விட்ட போதிலும், வெகுண்டு போயிருந்த எலிகள் சுய நிலைக்குத் திரும்ப,பலமணி நேரங்கள் ஆகக் கூடும் - ஆனல்-
நெருப்புப் பிஸ்டலால் கிட்டங்கியே தீப்பிடித்து விட்டது! வெளியேற வழியே இல்லை!
கூரையை நோக்கி ஓடு!
மேலே-
தீயின் உக்கிரம் எலிகளைத் தடுத்து நிறுத்தி விட்டன. இனி நாம் என்ன செய்வது?
கீழே ஓடும் ஆறு ஒன்றுதான் நமக்கு உதவக் கூடும்!
மறுகணம்-
நீரிலிருந்து அவர்கள் வெளிப்பட்ட போது-
அந்தக் கிடங்கே இடிந்து போகிறது!
-அத்தோடு அ.கொ.தீ.க.வின் சதித் திட்டமும் நாசமாகி விட்டது! அந்தக் கருவியின் செயல்பாட்டை அறிந்த ஒரே நபர் புரபஸர் தான்! அவரும், அவருடைய கருவியும் தீயில் தொலைந்து போய் விட்டன!
மீண்டும் ஒரு முறை லாரன்ஸ், டேவிட் சாகஸ ஜோடி, உலகையே அ.கொ.தீ.க.வின் ஆதிக்கத்திலிருந்து காப்பாற்றி விட்டிருந்தனர்!
முற்றும்.

# சூப்பர் கௌ-பாய் டெக்ஸ் வில்லரின் முழுநீள சாகஸம்....

# பழிக்குப் பழி!




வழியில் சேணத்தை நாம் தூக்கிச் சுமக்க நேரிடாமல் கிராமத்தைச் சென்றடைந்தால் சரிதான்!
எதிலுமே உனக்கு அவநம்பிக்கை!
வழியில் ஏற்பட்ட அனுபவங்கள் என்னை இப்படி பேசச்செய்கின்றன!
பெரிது படுத்துகிறாய்!
மூலியேடா நம்மிடமிருந்து தப்பிவிட்டது வாஸ்தவம்தான்! ஆனால் அவனுடைய ஆட்களில் மூவர் பாலைவன மணலினுள் ஆழப் புதைந்துவிட்டார்கள். மற்ற இருவரும் இப்போது சோனாய்டா சிறையினுள்-
துலே பாங்கின் 10,000 டாலர்?
அந்த அயோக்கியனின் பையில் மாட்டிக்கொண்டுவிட்டதை மறந்துவிட்டாயா? பயல் எல்லையைத் தாண்டிச் சென்றுவிட்டான்!
நாம் என்ன செய்திருக்கவேண்டும் என்கிறாய்? உள்ளூர்வாசிகளிடையே கலவரம் மூள காரணமாகிவிடலாம்! என்ற அபாயத்தை அலட்சியம் செய்துவிட்டு தொடர்ந்து அவனை துரத்திச் சென்றிருக்கவேண்டுமா?
அப்படியில்லை! நான் உனக்கு நினைவூட்ட விரும்புவதெல்லாம்- நமக்கு இப்போது நேரம் சரியில்லை என்பதையே! நிலவரம் போகப்போக இன்னும் மோசமடைந்தாலும் நான் ஆச்சரியப் படமாட்டேன்!
முதலில் இப்படியொரு எண்ணத்தை விட்டொழி!



முயற்சிக்கிறேன்! ஆனல் நீ-
ஓ! அருமையான நண்பர்தான் நீங்கள் அண்ணுக்ஷி!
போதும்! பேச்சைவிடு கார்ஸன்! இல்லையேல் உன் வாயை மூட நான் பலாத்காரத்தில் இறங்கவேண்டி வரலாம்!
எதையும் மனத்தில் வைத்துக்கொள்ளாதே கார்ஸன்! உனக்கு விருந்து கொடுக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்!
முதலில் உதைப்பேன் என்ருய்-இப்போது-விருந்து-தருகிறேன் என்கிருய்?
கிண்டலா!
நல்ல ஆளப்பா நீ!
சுமார் ஒருமணி நேரம் கழித்து இருவரும் ஒரு லாயத்தைச் சென்றடைந்தனர்.
நிஜமாக இப்படி ஊர் வந்து சேருவோம் என்ற நம்பிக்கை வழியில் கிடையாது எனக்கு!
குதிரைகளை நன்ருக கவனித்துக் கொள்-போகும்போது உன்னை நன்ருக கவனிக்கிருேம் நாங்கள்!
STORE
இன்றைக்கே கிளம்பி விடமாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.


ரொம்பவும் தான் சளைத்துப் போயிருக்கின்றன!
ஆமாம்! ஒரு நாள் ஓய்வு அவசியம் தான்!
இங்கே நல்ல ரெஸ்டாரண்ட் எது?
அதோ-அந்த மது பானக் கடைக்கு நேர் எதிரில்இருக்கிறது!
நல்ல விடுதி?
மதுபானக் கடையின் அருகிலேயே நல்ல விடுதி உள்ளது!
இந்தா வைத்துக் கொள்!
நன்றி- ஸார்!
SALOON
ஐந்து நிமிடங்களுக்குப் பின்-
இப்போது எல்லாம் திருப்திதானே?
பொறு-எனக்கு வந்து சேரும் இறைச்சித் துண்டு எப்படி வறுக்கப் பட்டிருக்கிறது என்று பார்த்து விட்டு சொல்கிறேன்!
ராகு காலத்தில் பிறந்தவனாக இருப்பாயோ நீ?
தெரியாது! ஆனால் நீ சூறாவளியும் ஆலங்கட்டி மழையும் வெறியாட்டம் போட்ட ஒரு பயங்கர நாளில்தான் பிறந்திருக்கவேண்டும்!



உன் நலத்துக்காக-
இது உன் நலத்துக் காக-ஷைசத்தானே!
அப்பொழுது-
கராக்
?!
எல்லோரும் எழுந்து நில்லுங்கள்-ம் சொல்கிறேனல்லவா!
டுமீல்... டுமீல்...
உங்கள் முன் நிற்கும் கதாநாயகனுக்கு இன்று இருபது வயது பூர்த்தியாகிறது! உரியமுறையில் கொண்டாடப்படும் இந்தத் திருநாள்!
ஐயோ!ஷாண்டலியர் போச்சு-
டுமீல்... டுமீல்...


நஷ்டத்தை கணக்கிட்டு என் கணக்கில் எழுதிக்கொள் டாம்மி! போய் வரட்டுமா?
ஸாரி- ஸார்! வாருங்கள்-வேறு மேஜை ஏற்பாடு செய்கிறேன! உங்களுக்கு!
அவன் பேக்கரின் மகன்தானே!
ஆமாம்! இம்மாதிரி அடாவடித்தனமும் அட்டூழியமும் பண்ணிய பின்னும் ஜெயிலுக்குள் போகாமல் தப்பித்துக் கொண்டு திரிய அவனுக்கு மட்டுமே சாத்தியம்!
கிராதகப் பயல்!
ரெயின்போ பண்ணையின் உரிமையாளரான பேக்கரின் ஒரே மகன்- ஆல்பர்ட்!
ஸாரி- இப்போது நீங்கள் குறிப்பிட்டுப் பேசிய அந்த நபர் யார்?


இந்தப்பிராந்தியத்திலேயே மிகப்பெரிய பண்ணை அதுதான்! ஆனால் பின்னர் பெரியவரின் காலத்திற்குப்பின் இவன் கைக்கு பண்ணை வந்துசேர்ந்ததும் அழிந்து நாசமாகிப் போகும் பாருங்கள்!
ம்ம்ம்-
மேஜை தயாராகி விட்டது ஸார்!
இருக்கட்டும்! இதோ சற்று நேரத்தில் திரும்பி வருகிறோம்!
மறுபடியும் நான் அவநம்பிக்கை கொள்ளலாமா?
ஆமாம்- நிலவரம் அப்படித் தான் இருக்கிறது!
பிறந்தநாளைக் கொண்டாடும் லட்சணத்தைப்பார்- சை!
டுமீல்... டுமீல்...
கொண்டாட்டத்தின் முக்கியபகுதி இனிமேல்தானிருக்கிறது!-
உன் வார்த்தைகளுக்கு செயல் வடிவம் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறேன்!
இதோ- அந்த காட்டெருமைத்தலை, இத்தோடு காலி! ஹாஹ்- ஹா!
டுமீல்... டுமீல்...
அருகாமையிலிருந்த வேறு ஒரு கடையில்-


முழங்கும் துப்பாக்கிகளுடன் நுழைந்தனர் இருவரும்-
?!
?!
போச்சு! என்னிடமிருந்த விலை மதிப்புள்ள ஒரே சொத்து அந்த அலங்கார கண்ணாடி தான்! அநியாயமாக நொறுங்கிப் போயிற்றே! ஐயோ!
தம்பி- உனக்கு ஒரு சிறு அறிவுரை! எல்லோரும் காணும்படியாக கைகளை மேலே உயர்த்து!
இன்னும் ஒரு அறிவுரை! இவர் சொல்கிறபடி நடந்துகொள்- இல்லையேல் உடம்பு சல்லடையாகிப்போகும்!
90


யார் நீங்கள்? ஊர் ஊராக சுற்றித் திரியும் ரௌடிகளா?
நீ ஆல்பர்ட் பேக்கர்- சரிதானே!
ஆமாம்- அதனால் என்ன?
ஓ! எங்களுடைய அப்பாவின் பண்ணையில் வேலை தேடி வந்திருக்கிறீர்களா!
சற்று முன் என் நண்பரின் தலையை உராய்ந்துகொண்டு செல்லுமாறு தோட்டாவை அனுப்பிய போக்கிரி நீதானா என்பதை உறுதிசெய்துகொள்ளவே அப்படிக் கேட்டேன்!
ஓகோ! ஆபத்தை விலைகொடுத்து வாங்குகிறீர்கள் என்று எச்சரிக்கிறேன்!
என் அதிகாரம் கொடிகட்டிப்பறக்கும் ஊர் இது! உடனே பிஸ்டலை உள்ளே வைக்கத்தவறினால்- ஆவ்!
ஹூம் உங்களுக்கு சம்பந்தமில்லாத விவகாரம் இது! ஒதுங்கியே இருங்கள்-அது தான் உங்களுக்கு நல்லது!


சண்டாளனே - நீ நாசமாகப் போக!
எழுந்திரிடா நாயே!
நீ-நீ உன்னைக்கொல்லாமல் விடப் போவதில்லை நான்- ஆஆஆவ்!
கராக்!!
உன்னை மாதிரி சவடால் பேர்வழி-களை நிறைய பார்த்திருக்கிறேனடா!
ணங்!!
ஆனாலும் உன் பித்துக்குளித்தனத்துக்கு ஈடு இணை கிடையாது!


அடக் கடவுளே!
?!
ணங்!
ஆள் அம்பேல்- டெக்ஸ்! போதும் விட்டு விடு- தொலைகிறான்!
ப்பூ! ஒரு வாளி தண்ணீர் கொடுங்கள் இப்படி!
இதோ!
ஓஓ-வ்!
சளேர்!
இனிய கனவுகள் கலைந்து விட்டனவா? போதும்- எழுந்திரு!


இனிமேல் எதையாவது கொண்டாட, சுட வேண்டும் போல் இருந்தால், சற்று முன் செய்தமாதிரி இல்லாமல் மேற்கூரையையோ வானத்தையோ குறிவை!என்ன?
என் அறிவுரை உன் மர மண்டைக்கு புரிகிறதா?
உப்-உப்!
கொண்டாட்டத்தின் உச்சக் கட்டம் இனிமேல்தான் வரப் போகிறது! இம்முறை பிழை ஏதும் நேராது!
என்னுடைய இலக்கு உன் மண்டைதான்!
அஹ்!
கும்!
என்ன கலாட்டா இங்கே? கைகளை உயர்த்துங்கள்!



ஓகோ- ஒருவழியாக வந்து சேர்ந்துவிட்டாரா?
பிஸ்டலை உள்ளே வையுங்கள் ஷெரீப்!
அடக்கடவுளே வில்லரும், கார்ஸனுமா?
நல்ல காலம்! நீ சார்ஜண்ட் ரோஸ் அல்லவா?
ஆமாம்! அவனே தான்!
உங்களை மீண்டும் சந்திக்கமுடிந்ததில் மிக்க மகிழ்ச்சி! ஆனால் நீங்களிருவரும் ஆழம் தெரியாமல் காலை விட்டுக் கொண்டிருக் கிறீர்களே என்று நினைக்கையில்-
அப்படியா?
ஆமாம்! அந்த இளைஞன் யாரென்று தெரியுமா?
ஆல்பர்ட் பேக்கர் அதுதானே அவன் பெயர்?
அங்கே ரெஸ்டாரண்டில் சற்று முன் அவனுடைய தோட்டா ஒன்று கார்-ஸனின் தலையை உராய்ந்துகொண்டு சென்றபோது, விசாரித்ததில் அப்படித் தான் சொன்னார்கள்!
ம்ம்ம்!


மிச்சத்தை சொல்லாமலே என்னால் யூகிக்க முடிகிறது!
ரெஸ்டாரண்டுக்கு நீ எங்களோடு வரவில்லை என்றால் இப்போதே நாங்கள் விடை பெற்றுக் கொள்கிறோம்!
ரெஸ்டாரண்ட் இருக்கட்டும் விடு! இந்த பழைய நண்பனுக்கு ஒரு உபகாரம் செய்யவேண்டும்!
அதாவது-ஊரைவிட்டு நீங்கள் முதல் வேலையாக கிளம்ப வேண்டும்!
கிண்டலர்?
இல்லை வில்லர்! அந்த இளைஞன் டைனமட்டை விட பயங்கரமானவன்!
தற்பெருமை பேசியலையும் உதவாக்கரை இவன்! பாபாகோ குடியிருப்பிலிருந்து துல்சன் மேடுவரையிலான மிகப் பரந்த பண்ணைக்கு சொந்தக்காரர் இவனுடைய தந்தை!
இதெல்லாம் எனக்கு வேண்டாத விபரங்கள்!
அப்படியில்லை டெக்ஸ் வயதான பேக்கர் அப்படியொன்றும் மோசமான பேர்வழி இல்லை என்றாலும் பொதுவாக தந்தைமார்களுக்கு இருக்கும் பலவீனம் அவரிடம் உண்டு! மகன்கள் செய்யும் தவறு அவர்களுக்குத் தெரியாது! நீங்கள் தொடர்ந்து இங்கே இருந்தால் தொல்லை வந்து சேரலாம்!
ரெயின்போ பண்ணையாள் ஒருவன் தான் இங்கே கலாட்டா நடப்பதாக என்னிடம் வந்து சொல்லிக்கொண்டு போனான்! நிறைய ஆட்களை திரட்டிக் கொண்டு வந்துசேரலாம்!


உண்மை நிலவரம் என்ன என்று இப்போதாவது நீ புரிந்து கொண்டாயா?
புரிகிறது! ஆனால் உடனே நாங்கள் கிளம்புவதாக இல்லை! முதல்காரணம்- இப்போது எங்களுக்குப் பசி!
இரண்டாவதாக, அந்த இளைஞனுக்கு தகுந்த முறையில் பாடம் கற்பித்து அனுப்பியதைத் தவிர குற்றமேதும் செய்யவில்லை நாங்கள்!
மூன்றாவதாக?
கட்டாயம் தெரிந்து கொள்ள ஆசையா?
சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட பாடுபடுவேன் என்று பிரதிக்ஞை எடுத்-துக்கொண்டு நட்சத்திர முத்திரையை அணிந்துகொண்டிருக்கும் ஒரு நபரின் கடமை என்னவென்றால்-
போதும்- நிறுத்து டெக்ஸ்! புரிகிறது!
உன் மனத்தை நோகச் செய்வதற்காக டெக்ஸ் இதைச் சொல்லவில்லை ரோஸ்! சரியான கோணத்தில் நீ புரிந்து கொள்ளவேண்டும்!
பேக்கர் மாதிரி பண பலம் படைத்த அதிகார முதலைகளுக்கிடையே கடமையாற்றும்போது இப்படி சுய கௌரவத்துக்கே பங்கம் வந்துவிடும் அபாயம் இருக்கத்தான் செய்கிறது!
வாஸ்தவம் தான்! டெக்ஸ் சொன்னதில் தப்பேதும் கிடையாது!
சரி தொலைகிறது விடு! எதைப்பற்றியும் கவலை கொள்ளாமல் வா- எங்களோடு!


இதோ- ஒரு நிமிடம்! கடைசி முயற்சியாக!
ஓ! பயல் ஒரு வழியாக எழுந்துவிட்டானா?
ஏதோ தெரியாமல் நடந்துவிட்டது!
அவர்களை கைது செய்யுங்கள் ஷெரீப்!
அவர்களுடைய உளறல்களைக் கேட்டுக்கொண்டு மரம் போல் நிற்காமல் உங்கள் கடமையைச் செய்து ஜெயிலுக்குள் தள்ளுங்கள் அவர்களை! இல்லையேல் அடுத்த தேர்தலில் உங்களை மண்ணைக் கவ்வச்செய்துவிடுவார் என் தந்தை!
நீ ஒரு மாபெரும் தவறு செய்கிறாய் ஆல்பர்ட்
மிஸ்டர் பேக்கர் என்று என்னை அழையுங்கள்- ஷெரீப்!
நான் என் பதவியை இந்தக் கணமே எறியத் தீர்மானித்துவிட்டேன்! இஷ்டப்படி புதிய ஷெரீப்பை நியமித்து கொள்ளுமாறு உன் தந்தையிடம் போய்ச்சொல்!
நாட்டைவிட்டே உன்னை துரத்தியடிக்கச் செய்வேன்- ரோஸ்!
போய்த் தொலை!
உனக்கு ஏன் அந்தச் சிரமம்? நானாகவே போய்விட தீர்மானித்து விட்டேன்!


நான் ஏன்தான் முன்னதாகவே பதவியை உதறி எறிந்துவிட்டு வெளியேற நினைக்கவில்லை என்று எண்ணும்போது வியப்பு ஏற்படுகிறது! எனக்கு வயதாகி விட்டது என்றாலும் வேறெங்காவது நிச்சயமாக ஒரு வேலையை தேடிக்கொண்டு விட முடியும்தான்!
சாப்பிட்டுக்கொண்டே இதைப்பற்றி பேசலாம்- வாருங்கள்!
இதற்கிடையே-
அங்கே பார்! குதிரையை ஏன் இப்படி விரட்டிக்கொண்டு வருகிறான்?
வழியில் பேய் பிசாசு எதையாவது பார்த்திருப்பான்!
கெனோ எங்கே?
பெரியவருடன் புல் பேட்டுக்குச் சென்றிருக்கிறான்!
ஏன்? ஏதாவது விவகாரமா?
சில்வரில் ஆல்பர்ட் இரண்டு ஆசாமிகளோடு மோதிக்கொண்டான். செமத்தியான அடி பயலுக்கு!
யாரது?


வெளியூர் ஆசாமிகளா?
ஆமாம்! இந்தப் பகுதிக்கு அவர்கள் புதிது போலும்! எப்படிப்பட்ட விவகாரம் என்று தெரியாது காலை விட்டிருக்கிருர்கள்!
ஷெரீப்புக்கு தகவல் கொடுத் விட்டு இங்கே ஓடி வந்தேன்
நீ செய்தது சரிதான் ஸ்லிம்! ஆனாலும் இந்த விவகாரம் போலீஸாருக்குச் செல்லாமல் தவிர்க்கவேண்டியது அவசியம்!
கெனேவுக்காக காத்திராமல் நாம் மட்டுமே செல்லலாம் என்கிருயா?
ஏன்? அந்த இரண்டு போக்கிரி அடித்து நொறுக்க நம்மாலாகா
ம்ம்-வந்
என்ன விஷயம்? எங்கேயாவது தீ பற்றிக்கொண்டு விட்டதா?
அதைவிட மோசம்! வழிப்போக்கர்கள் இருவரிடம் வம்புக்குப்போய் வகையாக வாங்கிக்கட்டிக் கொண்டிருக்கிருன் ஆல்பர்ட்!
வேறுசில அடியாட்களும் வந்து சேர்ந்தனர்-
அந்த இரண்டு போக்கிரிகளையும் நாமே சென்று உதைத்து பாடம் கற்பித்துவிட்டு வரலாம் என்கிருன் ஜாடே!


சரிதானே! நாம் ஐந்துபேர் போதாதா? இராணுவமா வேண்டும்- இரண்டு பேரை அடித்துநொறுக்க?
சரி! கிளம்புங்கள் போகலாம்!
இந்தத்தடவை முதலாளியிடமிருந்து பெருந்தொகை அன்பளிப்பாக கிடைக்க வாய்ப்பு உண்டு!
ஆமாம்—நிச்சயமாக!
அந்த இரண்டு ரௌடிப் பயல்களையும் கையை காலை ஒடித்துஅனுப்புவோம்!
ரொம்பவும்தான் முரண்டினார்கள் என்றால் உடம்பை தோட்டாக்களால் துளைபோட்டுவிடலாம்!
சில நிமிடங்களுக்குப்பின் அந்த ஐந்து முரடர்களும் குதிரைகளில் வேகமாக விரைந்தனர்-
சுமார் ஒருமணிநேரத்தில் கிராமத்தைச் சென்றடைந்தனர்-



பேங்கரின் மகளை பார்த்தீர்களா?
அதோ!
டாக்டரிடம் காயத்திற்கு மருந்திட்டு கொண்டு வெளியே வருகிறான்-
நன்றி!
என் அறிவுரையை மறந்து விடாதே! வீட்டுக்குப் போய் சில தினங்கள் படுக்கையில் படுத்து நன்றாக ஓய்வெடு!
மிஸ்டர் ஆல்பர்ட்!
ஏன்? என்னுடைய கோ
தை கண்டு ரசிக்க இங்
வந்தீர்களா?
கணக்குத் தீர்க்க வந்திருக்கிறோம்!
சில்வர் ஹால் எதிரேயுள்ள ரெஸ்டாரண்டில் ஷெரீப்புடன் அவர்கள் உணவருந்திக் கொண்டிருப்பதாக கேள்விப்பட்டேன்!
அவர்கள் கிளம்பிச் சென்றுவிட்டார்களா?
ஷெரீப்போடு சேர்ந்துகொண்டு என்ன ஆலோசனை வேண்டிக் கிடக்கிறது அவர்களுக்கு?


ரோஸ் தன் ஷெரீப் பதவியை துறந்து விட்டான்!
அப்படியா? நல்லதாகப் போயிற்று! நமக்கு ரொம்ப சாதகமான திருப்பம் அல்லவா இது!
இன்னும் எதற்காக நாம் இங்கே கால தாமதம் செய்து கொண்டிருக்க வேண்டும்!
கேட்டீர்களல்லவா தோழர்களே!
ம்ம்- உணவருந்த கிளம்பலாம் என்று எண்ணினேன். ஆனால் சற்று நேரத்தில் நிறைய வாடிக்கையாளர்கள் வந்து சேருவார்கள் என்று தோன்றுகிறது! பிளாஸ்திரி, பாண்டேஜுகளை தயாராக எடுத்து வைக்கவேண்டும் நான்!
சரியாக சொன்னீர்கள் டாக்டர்!
முடிந்தால் இவர்களை இந்தப்பக்கமாக தள்ளிக்கொண்டு வந்துவிடுங்கள், ரெஸ்டாரண்டுக்குள்ளேயே வைத்து அமர்க்களம் பண்ணி நாசப்படுத்திவிட வேண்டாம்!
சரி-!
அதே சமயம் அங்கே-
இன்னொரு காப்பி-
ஓ- சாப்பிடலாமே!
இன்னும் மூன்று கப் காப்பி கொண்டு வா!
இதோ- நொடியில்!


சமையலறையை நோக்கி விரைய யத்தனித்த ரெஸ்டாரண்ட் உரிமையாளர் சட்டென்று உறைந்து போய் நின்று விட்டார் -
ஷெரீப்- ஜாக்கிரதை!
ரெயின்போவைச் சேர்ந்த ஆசாமிகள்!
அதோ- ஷெரீப் அருகே இருக்கிற பேர்வழிகளாகத்தானிருக்கும்!
மாஜி ஷெரீப்!
நல்ல நேரத்தில் அதை ஞாபகப் படுத்தினாய் ஜுடே!
நம்மைப் பார்த்ததும் பய
கள் எப்படி விழிக்கிறான்க
பார்!
ரோஸ்- நீ ஒதுங்கிக்கொண்டு விடு- ம்- சீக்கிரம்!
அடுத்து நீங்கள் எங்கே போவதாக உத்தேசம் ரோஸ்?
எங்கேயுமில்
மார்ட்!


நட்சத்திர முத்திரையைக் காணோமே?
ரொம்ப அழுத்தியது கழற்றி விட்டேன்!
பெரிய புத்திசாலி நீ என்ற நினைப்போ?
சரி என்று தோன்றியது செய்தேன்!
இப்போது நான் ஒரு பொறுப்புள்ள சுதந்திர குடிமகன்! இனியும் சட்டத்தைப் பராமரிக்கும் பேர்வழி என்று நடித்துக் கொண்டு ஒதுங்கியிராமல் துணிச்சலாக நியாயத்தின் பக்கம் நின்று போரிட எனக்கு உரிமை உண்டு!
கேட்டாயா?
ஹா! ஹா!
முதலில் இந்த இரண்டு நச்சுப் பாம்புகளின் தோலை உறித்துவிட்டு பிறகு வருகிறோம் உன் விவகாரத்திற்கு!
பயல்களுக்கு போதாத காலம்!
டேய் சோமாறிகளா– எழுந்து மரியாதையாக வெளியே வாருங்களடா!
இல்லை– இங்கேயே வசதியாக இருக்கிறது!
என்ன கொழுப்புடா உனக்கு! எனக்கு தைரியமிருந்தால் எங்கள் ஆல்பர்ட் மீது கைவைத்து விட்டு இப்படி பயமில்லாமல் உட்கார்ந்து கொண்டிருப்பாய்!
105


நானென்றும் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கவில்லை- அப்பனே! மேஜையின் மறைவில் என் 45 ரக துப்பாக்கியை இயக்க நிலைக்கு தயார் படுத்திக் கொண்டிருந்-தேன் இது வரையிலும்!
என் துப்பாக்கி இப்போது உன் அ வயிற்றைக் குறி வைத்துக் கொண் டிருக்கிறது! ஆட்டத்தை ஆரம்பிக் லாமா- நான் ரெடி!
எல்லோரும் கைகளை மேலே உயர்த்துங்கள்!
விஷமம் செய்ய முனைந்தீர்களோ உடலில் துளை விழுந்துவிடும்!
நல்ல மனிதர்க இவர்கள்! சொல் படி நடந்து கொள்ளுங்கள்!
ஏதோ தெரியாத்தனமாக வந்து மாட்டிக்கொண்டு விட்டோம்!
அவர்களிடமுள்ள ஆயுதங்களை அகற்று ரோஸ்!
மறு நிமிடம்-
இனி நீ ஒதுங்கிக்கொள்!
யாரிடமும் எந்த ஆயுதமும் இல்லை இப்போது!



கராக்!!
ஆல்ரைட்- இனி ஒவ்வொருத்தராக பரிசை வாங்கிக்கொண்டு போகலாம்!
ணங்!!
ஐயோ- மோசம் போனேன் நிறுத்துங்கள்!
ஷெரீப் ஸார்- கொஞ்சம் கவனியுங்களேன்!
நான் பதவியை துறந்து வெகு நேரமாயிற்று!
தடால்!!
அட- பரவாயில்லையே!.
இது எப்படி யிருக்கிறது!
ஆஆஹ்!
சத்!


அடுத்து-
இது!
சத்!!
டெக்ஸ் விலகிக் கொள்!
தொப்!!
அற்பனே!
கேட்டாயா- பாட்டிலை எறிந்தால் என் தோழனுக்குப் பிடிக்காது!
?!
பாட்டில் எறியும் வேலையெல்லாம் இங்கே உதவாது தம்பி!
எனவே.....


இம்மாதிரியான ஜால வித்தையை நான் சமீபத்தில் பார்த்ததேயில்லை!
இந்தா டெக்ஸ்- இவன் தான் மிச்சம்!
விடு- என்னிடம்!
ஆயுளுக்கும் நினைவிருக்கும்- இந்தக் குத்து!
கும்!
அஹ்!
?!
டமால்!
ஐயா கனவான்களே! சேதத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது!
கவலைப்படாதே- நஷ்ட ஈட்டுத் தொகையையும் பில்லில் சேர்த்துப்போடு!
மூன்று கப் காப்பி ஆர்டர் கொடுத்திருக்கிறோம்- மறந்துவிடாதே!
கா-காப்பியா?
ஆமாம்- ஸ்ட்ராங்காக சுடச்சுட கொண்டு வா!


அத்தியாயம்-2
விழுந்து கிடக்கும் மூன்று பயல்களையும் என்ன செய்வது?
பரவாயில்லை- நானே இவர்களுக்கு ஒரு வழி பண்ணுகிறேன்!
நான் இன்னமும் ஷெரீப்பாக இருந்தால், பொது இடத்தில் அமைதிக்குப் பங்கம் விளைத்ததாக குற்றம்சாட்டி கம்பி எண்ண வைத்துவிடுவேன் இவர்களை!
ம்ம்-- எழுந்திரு!
சலோர்
இனிய கனவை கலைத்து விட்டேனா- ஸாரி!
உப்ப்!
சைத்தானே!
உஹூம்- அப்படியெல்லாம் பேசக் கூடாது! உடம்புக்கு ஆகாது!
?!




...வம் சிங்கத்தின் குகையினுள் நுழைகிறோம் ...ன்று அறியாமல் வெற்று வீருப்போடு வந்து சேர்ந்துவிட்ட அப்பாவிகளாயிற்றே என்று இம்முறை லேசாக கொடுத் தனுப்புகிறேன்!
மறுபடியும் இந்த ஊருக்குள் உங்களுடைய தலைகளை பார்த்தே னென்றால் நையப்புடைத்து கம்பி எண்ண வைத்து விடுவேன்- ஜாக்கிரதை!
வெறும் வேடிக்கைப் பேச்சல்ல இது! ஷெரீப் இல்லாத இடங்களில் சட்ட ஒழுங்கை பராமரிக்கும் அதிகாரத்தை எனக்கு வழங்குகிறது- இந்த நட்சத்திர இலட்சினை!
நல்ல அறிவுரைதான்- ஆனால் இதை காதில் வாங்கிக்கொள்ள மறுக்கும் கில்லாடி மனிதர் ஒருவர் இங்கே இருந்துவிட்டால்-?
ஓ- ரேஞ்சர்!
பெரியவர் பேக்கரை குறிப்பிட்டு என்னை அச்சுறுத்தப் பார்க்கிறாயா? நடக்காது! அவரை எப்படிச் சமாளிக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும்!
சரி போய்த்தொலையுங்கள்! ஏற்கனவே உங்களால் ஏகப்பட்ட நேரம் வீணாகிப் போய்விட்டது-
?!


அங்கே பார்- நான் எதிர்பார்த்த மாதிரியே இவர்கள் தான் வாங்கிக் கட்டிக்கொண்டு வருகிறார்கள்!
வில்லரும்- கார்ஸனும்!
அவர்களிடம் அத்தனை பயமா உனக்கு?
உன்னைப் போன்ற மரமண்டைகளால்தான் அவர்களை அலட்சியமாக எண்ண முடியும்!
அவர்கள் நாசமாகப் போகட்டும்!
ஸாரி- ஆல்பர்ட்! போகும்போது அங் படுபயங்கரப் புலிகளோடு மோதப்போ றோம் என்று தெரியாது எங்களுக்கு! அவர்கள் யார் தெரியுமா உனக்கு?
ம்ம்- சற்று முன்னர்தான் ஜூடே சொன்னான்!
சரி உள்ளே வாருங்கள் நான் வேண்டிய ஏற்பாடுகளை தயார்படுத்தும் அவகாசத்தில் நீங்கள் நிறையப் பேசலாம்!
சீக்கிரம் போங்கள் உள்ளே- ஊரே திரண்டு வந்து நிற்கிறது அங்கே- நம்மை வேடிக்கை பார்க்க!


திமிர் பிடித்த அந்த ஜனங்களின் கேலிச்சிரிப்புக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் விரைவிலேயே இங்கே விபரீதம் ஒன்று நிகழத்தான் போகிறது!
இதற்கிடையே—
காற்றுக்கு வித்திட்டவன் புயலை அறுவடை செய்வான் என்பார்கள். நீங்களோ ஆலங்கட்டி மழையை விதைத்திருக்கிறீர்கள்—
பயங்கர இடி மின்னலை நிறைய அறுவடை செய்யத் தயாராக இருக்குமாறு பயமுறுத்துகிறுயா எங்களை?
அப்படி அலட்சியமாக பேசாதே டெக்ஸ்! அந்த பேக்கருக்கு இந்தப் பிராந்தியத்தில் பாதி நிலம் சொந்தம்!
அதற்காக? சட்டம் அவரை கட்டுப்படுத்தாதா- என்ன?
நியாயமான கேள்விதான்! ஆனல் இன்று மாலைக்குள்ளாகவே வெறிக் கும்பல் ஒன்றை உனக்கெதிராக அவர் ஏவி விடும் பட்சத்தில் எந்தச் சட்டம் குறுக்கே வந்து தடுக்கும் சொல்?
வேடிக்கைக்காக அப்படி பேசுகிறுயா? அவருடைய அன்பு மகன்மீது இரண்டு குத்துவிட்டேன்— அவ்வளவுதான்!
அவனுடைய உடம்பில் இரண்டு தோட்டாக்களால் துளைபோட்டு அனுப்பியிருந்தால் கூட பாதகமில்லை— ஆனல் நீ அவமானப்படுத்தி விட்டாய்— அதுதான் மோசம்!
உள்ளூர்வாசிகள் மீது மட்டுமின்றி அங்கங்கே சிதறிக்கிடக்கும் சிறு பண்ணைகளின் சொந்தக்காரர்கள் மீதும் பேக்கர் தன் அதிகாரத்தைச் செலுத்தத் தொடங்கி வெகு காலமாகிறது-
RE URANT



எனவே அவருடைய கௌரவத்திற்கு சவாலாக நடக்கும் எந்தக்காரியத்தையும் சகித்துக் கொள்ளவே மாட்டார்!
இதைக் கேட்டு நாங்கள் இப்போது நடுநடுங்க வேண்டுமா?
சுற்றி வளைக்காமல் விஷயத்து வா ரோஸ்- இப்போது நாம் எ செய்யவேண்டும் என்கிறு
சேணத்தைப் பூட்டி குதிரைக கிளப்பிக் கொண்டு உடனே போய் விடுவது தான் நல்லது
நல்ல யோசனைதான்- ஆனால் ஏற்றுக் கொள்ள முடியாததற்கு இரண்டு நல்ல காரணங்கள் உண்டு!
ஒன்று எங்களுடைய குதிரைக மிக மோசமாக களைப்படைந்து இருக்கின்றன-
வேறு குதிரைகளை உடனே ஏற்பாடு செய்யமுடியும்!
இரண்டாவது காரணத்தை சொல்ல விடாமல் குறுக்கிட்டால் எப்படி?
சரி- சொல் என்ன அது?
எனக்கோ கார்ஸனுக்கோ இந்த இடத்தை விட்டுச் செல்லும் உத்தேசமே கிடையாது!
ம்ம்- அப்படியானால் இங்கே தான் நமக்கு சமாதி!


கிளம்புங்கள் போகலாம்!
எங்கே சமாதிக்கு குழி தோண்டவா?
வீணாக வம்பில் மாட்டிக்கொள்வது விவேகமா யோசித்துப் பார்- டெக்ஸ்!
தீர்மானம் இறுதியானது? மறு பரிசீலனைக்கு இடமேயில்லை!
ஏறத்தாழ அதே வேளையில்——
உங்களை பிறகு வந்து பார்க்கிறேன் டாக்டர்!
சென்று வா!
RAP
அங்கே யார் வருகிறார்கள் என்று பார்!
??!
நில்லுங்கள்!


ஓடிப் போய்விட ஆயுத்தம் செய்து கொண்டிருக்கிறீர்களா?
நாங்களா? எதற்காக ஓட வேண்டும்!
நல்ல யோசனைதான் மிஸ்டர் ரேஞ்சர்!
இந்த இடம் அழகாகவும் அமைதியாகவும் இருக்கிறது. எங்களுக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது நிரந்தரமாக தங்கிவிட தூண்டுகிறது.
இதைத்தான் உங்களிடம் நான் எதிர்பார்த்தேன்! இங்கே தங்க அனுமதிபெற வேண்டிய சிரமம் உங்களுக்கு இல்லாமல், நானே ஏற்பாடு செய்ய முடியும்!
நீ? எங்களுக்கு நீ அனுமதி பெற்றுத் தருகிறாயா-பலே!
நீ ரேஞ்சராக இருக்கலாம்-ஆனால் இங்கே உன் அதிகாரம் செல்லுபடியாகாது!
என் தந்தைக்கு இங்கே நிறைய செல்வாக்கு உண்டு. நீங்கள் காணாமற் போனால், இரண்டு நாய்கள் கிணற்றுக்குள் விழுந்து செத்துப்போனால் ஏற்படும் சலசலப்பின் அளவுதான் விளைவு இருக்கும் இங்கே!



பேசி முடித்து விட்டாயா... கோமாளி?
அடக்கமாகப் பேசு-இது என்னுடைய பிரதேசம் !
கார்ஸன்-நான் துப்பாக்கியை உயர்த்தியதும் மூன்றுவரை எண்ணு ..!
சரி...!
மூன்று என்று நீ சொல்லும்போது, எவனாவது அருகே இருந்தால் அவனுடைய பிணத்தை ஓரமாக இழுத்துப்போடும் பொறுப்பும் உன்னைச் சேர்ந்ததுதான் கார்ஸன்!
எங்களுடைய ஆயுதங்களை நீ பறித்தெடுத்துக் கொண்டிராவிடில் இப்படி திமிராக பேசமாட்டாய்!
க்ளிக்!!
ஒன்று...
இதற்கும் சேர்த்து நீ விலை கொடுக்க வேண்டியிருக்கும்
இரண்டு
117



யாயாஆ-ஆ
யாயா ஹீ...
என்னமாய் தலை தெறிக்க ஓடுகிறான்கள்!
சண்டாளன் ...நாசமாகப் போக-
திடீர் தாக்குதல் நடத்தி நம்மை வென்று விட்டார்கள் இமமுறை. அடுத்த தடவை எதற்கு தயாராக வருவோம்!
நகர மக்களின் சார்பில் உங்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்...
ஆனல் உங்களுக்கு நான் சொல்ல விரும்பும் சிறு ஆலோசனை உடனே குதிரையை கிளப்பிக் கொண்டு இங்கிருந்து புறப்பட்டுப் போய் விடுங்கள் என்பதுதான்!
என் இடத்தில் நீ இருந்தால் அப்-படித்தான் செய்வாயா?


ஆமாம்... சந்தேக மில்லாமல்!
நீ குறிப்பிடுகிற மாதிரி பேக்கர் அத்தனை செல்வாக்குடையவராயின் உலகின் எந்தமூலைக்கு நீ சென்றாலும் தேடிவந்து உன் உடலில் தோட்டாக்களால் துளைபோட்டுவிட முடியாதா?
எனவே, செத்துப் போவதானால் கையில் துப்பாக்கியோடும் விழிகள் எதிரியை நோக்கிய நிலையிலும் விழுந்து செத்துப் போவது தான் ஆண்மகனுக்கு அழகு...!
...வாஸ்தவம்தான்!
நீங்கள் புறப்பட்டுச் செல்கிறீ களோ-அல்லது இங்கே தங்கி விட தீர்மானிக்கிறீர்களோ... ஒன்றை மட்டும் தெரிந்து கொள்ளுங்கள்-இந்த ஊர் ஜனங்களின் ஆதரவு உங்களுக்குத்தான்..!
அரைமணி நேரம் கழித்து...
ரோஸ் — உன் தோழர்-கள் பண்ணிய ஆர்ப்பாட்டத்தைத் தான் ஊர் முழுக்க பேசுகிறார்களே!


டமால்-டுமீல்! என்று நீங்கள் ஏற்படுத்திய அமர்க்களம் செவிடன் காதில்கூட விழுந்திருக்கும்!
ஆனால் உச்சக்கட்டம் இனி-மேல்தான் வரவிருக்கிறது. அந்தசம்பவம் இவ்வூர்ஜனங்-கள் காலம் காலமாக பேசும்படியாக இருக்கப் போவது நிச்சயம்!
இதற்கு எவ்வளவு கொடுக்க வேண்டும்...?
பேக்கருக்கு பாடம் கற்பிக்கத் துணிந்திருக்கும் உங்களைப் போன்ற வீரர்-களுக்கு என்னால் செய்யக் கூடிய உதவி இதுதான்—ஆண்டவன் உங்களுக்கு துணை நிற்கட்டும்!
விலையா..? இல்லை-இது உங்க-ளுக்கு என்னலான சிறு அன்பளிப்பு!
நன்றி...
உச்சக்கட்டம் எப்-போது நிகழும்என்று நினைக்கிறாய்?
அஸ்தமன வேளையில் தொடங்கக் கூடும்
பேக்கருக்கு செய்தி எட்டியதும் உடனே நடவடிக்கையில் இறங்கக்கூடும்...
நல்லது!



பேரில் ஆறேழு பேர் மேய்ச்சலுக்குச் சென்றிருக்கலாம் என்று வைத்துக் கொண்டால், சுமார் இருபது பேராவது இங்கே வரக்கூடும்...
...நம்மை சொர்க்கத்துக்கு அனுப்பி வைக்க அந்தக் கும்பல் போதுமே
அவநம்பிக்கை கூடாது! வெற்றி நமக்குத்தான் என்ற நம்பிக்கை பூரணமாக இருக்கிறது எனக்கு!
ஆளுலும் மலையளவு தன்னம்பிக்கை உனக்கு!
அத்தோடு, தீர்மானம் செய்து கொண்டபின் வருவதை ஏற்க தயாராகத்தானே
இருக்க வேண்டும் நாம்!
ஆமாம்!
இதற்கிடையே...அங்கே-ரெயின்போ பண்ணையில் ..
திடீரென்று தாக்கி எங்களை மடக்கி விட்டார்கள் ...கெனே!
என்ன இது-உலகமே இடிந்து உங்கள் மீது விழுந்துவிட்டது போல் நொறுங்கிப் போய் வருகிறீர்கள் எல்லோரும்?



யார்...கொள்ளைக் கும்பலா?
இல்லை-இரண்டு அயோக்கிய நாய்கள்...டெக்ஸ் வில்லர், கிட் கார்ஸன்!
என்னது-வில்லரும், கார்ஸனும கெட்டது போ...!
அப்பா இங்கே இருக்கிறாரா?
இருக்கிறார்! நீங்கள் உதை பட்டுவந்துநிற்கும் கோலத்தைப் பார்த்ததும் அவர் கொதித்தெழப் போவது உறுதி!
...ஆமாம்—சந்தேகமில்லாமல்!
அடுத்து—
என்னடா இது கோலம்...பார்க்கச்-சகிக்கவில்லை!
அப்பா...!
நடந்ததை விவரித்தான் ஆல்பர்ட்...! அதைக்கேட்டு ஆத்திர மடைந்த பேக்கர் வில்லரையும் கார்ஸனையும் மனம்போன-படி இழித்துப் பேசி சபித்தார்...
அவர்களைப்பற்றி நான் கேள்விப்பட்டதில்லை. ஆனால், இந்த வெறிச் செயலுக்கு அவர்களை நான் சில்வர் பெல் மண்ணில் புரட்டி எடுக்கா மல் விடப்போவதில்லை...!


அது ஒன்றும் சுலபமான காரியமல்ல .. அவர்களிருவரும் உடலுறுதியும், நெஞ்சுரமும் கொண்டவர்கள் ..
நல்லதொரு ஏற்பாட்டோடு சென்றாலன்றி நாம் எண்ணுவதை சாதிக்க முடியாது...!
மிஸ்டர் பேக்கர்! ஆட்களை அனுப்புமுன் பிரச்னையை நிதானமாக ஆராய்ந்து தீர்மானிப்பது நல்லது என்று ஆலோசனை கூறவேண்டியது என் கடமை!
நீயே இப்படி சொல்வது எனக்கு வியப்பளிக்கிறது!
எச்சரிக்கை அவசியம் என்று குறிப்பிட்டேன்.!
அது சரிதான்!
எத்தனை பேரை வேண்டுமானாலும் உடனழைத்துக்கொள்-புறப்படு
அவர்களை தீர்த்துக்கட்டி விட்டவா?
அவசியமில்லை...!பேக்கருக்கு எதிராக யாரேனும் விரலை உயர்த்தினால் விளைவு எப்படியிருக்கும் என்று எச்சரிக்கை விடுக்கும் வகையில் ஏதாவது செய்தாலே போதும்!
சரி...அதை நான் தீர்மானித்துக்கொள்கிறேன்!


நானும் —வருகிறேன், ... கெனே!
வேடிக்கையை கண்டு களிக்கவா?
மண்ணில் புரளும்போது என்காலணியின் தூசியை அவர்களுடைய முகரையில் தோய்த்து சுத்தம் செய்து கொள்வேன்!
மாக உனக்கு அந்த வாய்ப்புக் கிட்டும்!
பெரிய வேட்டைக்கு செல்கிறோம் துப்பாக்கிகளை கையிலெடுத்துக்கொண்டு குதிரையில் ஏறுங்கள்...
அப்படியா... சமாசாரம்?
கிளம்புங்கள் ——சீக்கிரம்!
இதற்கிடையே...
இன்னமும் எனக்கு மனம் ஒப்பவில்லை, என் வீடு ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருக்கிறது. அதனுள்ளிருந்து கொண்டால் நம்மைக் காத்துக் கொள்வதோடு சரியான பதிலடி கொடுக்கவும் முடியும்!
அது-அப்படி-யில்லை...



புதுதான் பாதுகாப்பு என்று நீ கருதினால் நீ மட்டும் அங்கே செல்லலாம்-நாங்கள் எங்களிஷ்டப்படி எங்கே வேண்டுமானாலும் இருந்து கொள்கிறோம்!
நான் என் முடிவுப்படியே செயலில் இறங்க நினைக்கிறேன்... சம்மதம் தானே!
ஆனாலும் உனக்கு பிடிவாதம் அதிகம்!
இதை ஒரு பாராட்டாக எடுத்துக் கொள்வான்!
இங்கேயிருக்கிற இடுகாட்டில் ஒரே சமயத்தில்இருபது பேரைப் புதைக்க வசதி இருக்குமா என்று தெரியவில்லை...
இந்தப் பிராந்தியத்தில் கழுகுகளுக்கா பஞ்சம்...விருந்து படைத்து விடுவோம!
சரியாகச் சொன்னாய்!
நெருக்கடியான வேளையில் எப்படித்தான்ஹாஸ்யமாக பேசமுடிகிறதோ உங்களால் ..!
அதற்காக .. கருப்பு உடையணிந்து மௌனம் காக்க வேண்டுமென்கிறாயா...?
சரி...எங்கே கொஞ்சம் சிரி பார்க்கலாம்!எங்களை உன் வீட்டிற்கு அழைத்துச் செல்.


மனத்தை மாற்றிக் கொண்டு விட்டாயா?
இல்லை...அந்தஇடத்தை ஒரு கண்ணோட்டம் விட விரும்பு-கிறேன்!
சற்றைக்கெல்லாம்
அதோ...!உறுதி-யான கட்டிடம் -பக்கத்தில் வேறு கட்டிடம் ஏதுமின்றி தனித்து நிற்-கிறது பார்!
நாம் அதனுள் பதுங்கிக் கொண்டு எதிரிகளை சந்-தித்தால், நம்மை வெளியே கொண்டு வர பெரியபடைப்-பிரிவு தேவைப்-படும்!
கொஞ்சம் வைக்கோல், கொஞ்-சம் காய்ந்த சுள்ளிகள், ஒரு தீக்குச்சி-இவை போதும்...கட்-டிடத்தோடு சேர்த்து நம்மை சொர்க்கத்துக்கு அனுப்பி வைக்க!
கிராமம் மொ-த்தமும் அவரு-டைய கட்டுப் பாட்டில்தானி-ருக்கிறது என்று நீதானே சொன்னாய்?
நல்ல கதை!
ஆமாம்...இங்கிருக்கும் ஒவ்வொரு நபரும் ஏதாவது ஒரு வகையில் பேக்கரின் ஆதரவை நம்பியே இருக்கிறான். அத்தோடு அரசாங்-கத்தில் முக்கிய பிரமுகர்கள் சிலர் அவரது நண்பர்கள்...!
வேறென்ன வேண்டும்?


சற்று முன் நீ கேட்ட கேள்வி-க்கு பதிலையும் நீயேசொல்லி விட்டாய்
ம்ம்...ஒரேயடி-யாக குழப்பு-கிறது ...
இதற்கிடையே...
அவர்களை அடித்து உதைத்தால் போதுமா இல்லை எலும்பை நொறுக்கி தோலையும் உரித்துவிட வேண்டும் என்று ஆசைப்படுகிறாயா?
என்னைக் கேட்டால் நாம் வரம்பு மீறிப் போவது நல்லதல்ல...தொல்லைக்கு வழிவகுத்துவிடக் கூடும்!
உனக்கு எது சரி என்று படுகிறதோ, அப்படியேசெய்! ஆனால், அவர்கள் உடனே இங்கிருந்து தலைதெறிக்க ஓடிப்போய்விட வேண்டும்!
ஒருமணிநேர இடை-வேளைக்குப்பின —
நல்லதற்கலல...!
கெட்டதுபோ... பேக்கரின் ஆட்கள்... வருகிறார்-கள்-பார்!


நாங்கள் யாரைத்தேடி வந்திருக்கிறோம் என்று உனக்குத் தெரியுமில்லையா— அகஸ்டஸ்!
இப்போது அவர்கள் எங்கே இருக்கிறார்கள்?
மாஜி ஷெரீப்பின் வீட்டில்! அரைமணி நேரத்திற்கு முன் அவர்கள் அங்கே நுழைவதைப் பார்த்தேன். அதன் பிறகு ஒருவேளை அவர்கள்...
போதும்— நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்!ம்...விரைந்து செல்வோம் வாருங்கள்...!
அதோ வந்து விட்டார்கள்! ஏகப்பட்ட ஆட்கள்!
டுமீல் டுமீல் டுமீல்
128



உன் தலையைக்காட்டு ரோஸ்! படுக்கை-க்கு அடியில் பயந்து ஒளிந்துகொண்டு கிடக்கும் உன் தோழர்களையும் வெளி-யே வரச்சொல்
நீங்கள் எதிர்பார்ப்பது எதுவும் நடவாது இங்கே!
SHERIFF
இப்படி திமிராகப்பேசினால் உள்ளே வைத்தே கொன்று விடுவேன் !
வா வெளியே! பணிவாக நடந்து கொண்டாயானால் பிழைத்துக் கொள்வாய்! வீம்பு செய்தாயோ பிறகு என்ன நடக்குமோ —எனக்கே தெரியாது!
உன் ஆட்களை-யும் அழைத்துக் கொண்டு உட-னே இங்கிருந்து விலகிச்சென்று விடு...கெனே!
அவனோடு பேசிப் பயனில்லை ...கெனே!
டுமீல் டுமீல்
ஆமாம்... அப்படித்தான் தோன்று-கிறது!
டுமீல்!
டுமீல்!!


தொடங்கி விட்டது —தாக்குதல்!
நாமும் கலந்து கொள்வோம்!
டுமீல் டுமீல் டுமீல் டுமீல்
டுமீல் டுமீல்—
டுமீல் டுமீல்
ரெட், கிறிஸ்-குதிரைகளை ஏதாவது ஒரு பாதுகாப்பான இடத்துக்கு இட்டுச் செல்லுங்கள்-சீக்கிரம்!


ஜாக்கிரதை- அவர்கள் இந்தப் பக்கமிருந்து வருகிருர்கள்!
ஐயோ... பாவம்!
கேட்டாயா இன்னிசை முழக்கத்தை!
இரசித்துக் கேட்க அருமையான வாய்ப்பு!
நில்லுங்கள்...!
உயர்த்துங்கள்கை-களை—வாயைத் திறக்கக்கூடாது!
ஆயுதங்களை பறித்தெடு, கார்ஸன்!
இதோ—
இதற்கெல்லாம் நீங்கள் பதில் சொல்லும் நேரம் வரத்தான் போகிறது...
சரிதான்—மூடுடா ...வாயை


அதையடுத்து டெக்ஸும் கார்ஸ-னும் எவ்வித ஆர்ப் பாட்டமும் இன்றி மின்னல் வேகத்-தில் சேணங்களை அறுத்தெறிந்து குதிரைகளை விரட் டியடித்தனர்-
சீக்கிரம் ஆகட்டும்- இன்னும் நிறைய வேலை இருக்கிறது நமக்கு!
சண்டாளப் பாவிகள்!
ஆமாம்- எனக்குத் தெரியாதா!
இஷ்டப்படி ஓடுங்கள்!
உதவி வந்து சேரும்வரை இங்கேயே ஓய்வெடுங்கள் தம்பிகளா!
மேள தாள ஓசை கேட்கிறது பார்!
அருமையான கச்சேரி தான்!


ரோஸ் ஆபத்தில் சிக்கிக் கொண்டு விடக்கூடாது!
எக்காரணம் கொண்டும் வெளியேறி வரக்கூடாது என்று நாம்தான் அவளை திட்டவட்டமாக எச்சரித்திருக்கிறோமே!
ஜாக்கிரதை- தெருவை சமீபித்து விட்டோம்!
அடுத்த யுக்தியில் இறங்குவோமா?
ஆமாம்— சுட்டுக் கொண்டே ஓடு!
உன்னை பிறகு சந்திக்கிறேன். நல்வாழ்த்துக்கள்!
உனக்கும் தான்!
என்ன- ஓய்ந்து விட்டார்கள்!
ஏற்கனவே சொர்க்கத்துக்கு போய்ச் சேர்ந்து விட்டார்களா?
டுமீல்
டுமீல்
டுமீல்
டுமீல்!


ஹே- ரோஸ்!
டுமீல்..
டுமீல்
தொலைத்துக் கட்டுங்கள் அவனை!
டுமீல்
நான் இங்கே இருக்கிறேனடா மூண்டங்களா!
டுமீல்!
அஹ்!
?!
ஜாக்கிரதை அந்த சந்
யாரோ இருக்கிறார்கள்!
டுமீல்
இந்தப் பக்கம் தான்!
பண்ணைடைப்பயல் யாரென்று போய்ப் பார்!
டுமீல்
டுமீல்
துணைக்கு நீங்க
வாருங்களடா!


அவன் இந்த திருப்பத்தில் தான் இருக்கக்கூடும்!
ஓட்டத்தின் ஆரம்பம்-
டுமீல்!
அஹ்!
?!
இதில் உங்களுக்கு அடங்கியுள்ள பாடம் இரண்டு- எதிலும் திடீர் அக்-கறை காட்டக்கூடாது!- அன்னியர்களை குறிவைத்து துப்பாக்கியை முழக்கக் கூடாது!
டுமீல்!
அதே சமயம்-
டுமீல்! டுமீல்!!
?!


யாரோ நம் பின்னுலிருந்து தாக்குகிருர்கள்!
பெரிய கண்டுபிடிப்புத்தான்- இந்தா அதற்குரிய பரிசு!
வில்லரும், கார்ஸனும் அமர்க் களம் பண்ணுகிருர்கள் போ லிருக்கிறதே!
டுமீல் டுமீல்
என்னதான் நடக்கிறது? அந்த இரு சைத்தான் களுக்கும் கிராமத்தில் வேறு நண்பர்கள் யாரேனும் உண்டா?
எனக்குத் தெரிந் தவரை அப்படி யாருமில்லே!
இனி தனித்தனி குழுக்களா பிரிந்து போரிடுவோம். ஐந் பேர்களோடு நீ இங்கே இருந் கொண்டு யாரும் அந்த வீட் விட்டுவெளியேருமல்பார்த் கொள். நானும், மற்றவர்களு அந்தப் பக்கமாகச் சென்று தீவிரமாக அலசு- கிருேம்!


இந்தப் பக்கமிருந்து-
அப்படி வேகமாக ஓடக் கூடாது-தோழரே!
டமீல்!
ஐயோ!
?
டமீல்!
தோட்டாவை வீணடிக்கிறான்!
பத்துப் பேர் என்னோடு வாருங்கள்!
பரவலாக முன்னேறுங்கள்!
டமீல்


அடடே-ஊர்வலம் போகிறார்களா!
இதோ-இங்கே இருக்கிறேன்-நான்!
ஜாக்கிரதை!
ஆஹ்
டுமீல்!!
இந்தப் பக்கம்!
சைத்தானே!
டுமீல்!!
டுமீல்.டுமீல்...


உன் தோட்டா என் தலைக்கு வெகு உயரே போகிறது- அப்பனே!
கொஞ்சம் தாழ குறி வைக்க முயற்சி செய்!
டுமீல்!
அஹ்!
பின் வாங்குங்கள்!
டுமீல்...
வீட்டைச் சுற்றி பின்புறமாக வந்து பயலை வளைத்துக் கொள்வோம்!
ஆனால், கொரில்லா போர் முறையை கடைப் பிடிக்கும் நபர்களை எப்படி சமாளிப்பது என்று கொஞ்சமும் புரியாமல் குழம்பித் திணறியது கெனோவின் கூட்டம்!
பாவிகளா-எல்லோரும் என்னைத் தனியே விட்டு விட்டுப் போய்விட்டீர்களா?
இனியும் நீட்டிக் கொண்டே போகக் கூடாது-
அதே சமயம்-


தெருவின் மறுபக்கமிருந்து துப்பாக்கி முழக்கம் கேட்டது!
இல்லை-இந்தத் தெருவுக்கு இணையாக அடுத்து இருக்கும் தெருவில் கேட்டது-சப்தம்!
பன்றிகள்-மறுபடியு
தலைகாட்டுகின்றன
அதோ-அங்கே இருக் கிறான்!
டுமீல்
டுமீல்
டுமீல்.... டுமீல்..


முன்னேறுங்கள்!
அவர்களை இப்போது சுட்டு வீழ்த்தத் தவறினேமேயானால், தப்பித்து ஓடிவிடுவார்கள்-பிறகு விரட்டிச் செல்வது-கடினமாகி விடும்!
ம்ம்-என்னமாய் பாய்ந்தோடி வருகிறார்கள்!
இப்படி உள்ளே பாய்ந்து கொண்டு விடுகிறேன்!
மாயமாக மறைந்து விட்டானே-மீண்டும்?
அதிக தூரம் ஓடிப் போயிருக்க முடியாது!
நேரத்தை வீணாக்கிக் கொண்டிராமல், ரெட் நீ இடப் புறம் சென்று தேடு-ஜெர்ரி என்னோடு வரட்டும்!
ஹலோ-பசங்களா!
?!
?!


டுமீல்..
டுமீல்..
ஆ...!
ஐயோ...!
சுட்டுக் கொண்டே ஓடவேண்டும்-
டெக்ஸ் அப்படித்தான்
சொல்லியனுப்பினான்-
ஆனால் அந்த வெறிக்கும்பல்
பின்தொடர்ந்து விரட்டி வந்தால்,
கனவே வலி கண்டு விட்ட
கொண்டு அதிக தூரம் தான்
யோட முடியாது!
இதற்கிடையே-
சுடுவதை நிறுத்தச்
சொல்லுங்கள்
அவனை-மிஸ்டர்
ஆல்பர்ட்!
டுமீல் டுமீல்
டுமீல்..



லூயிஸ், ராண்டி இருவரையும் உடனே டாக்டரிடம் கொண்டு செல்ல வேண்டும்!
அந்தக் காரியத்தை நீ கவனி! பயலை நான் திசை திருப்பி தேக்கி வைக்கிறேன்!
ரோஸ்-வா-வெளியே! நீ தப்பிக்க வழியேயில்லை!
உன் சக்தியை வீணடிக்கிறாய்-வேறென்ன!
டிங்!
யாருமில்லை-உள்ளே! அவர்கள் அதிகதூரம் போயிருக்க முடியாது!
வேறு ஏதாவது ஒரு வீட்டினுள் புகுந்து கொண்டிருக்கலாம்!
கொஞ்சம் மேலே ஏறிட்டுப் பார்க்கலாமே!
சைத்தானே-அங்கே உயரே இருக்கிறாயா?
டுமீல்
டுமீல்
43


இன்றிரவு டாக்டருக்கு செமத்தியான வேலை இருக்கும்!
இம்முறை பயலை மடக்கிப் பிடித்து விட வேண்டும்!
யாராவது ஒருவர் வெளியேபோய் பய
மறுபக்கம் குதித்து வெளியேறி ஓ
விடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்
கார்ஸனுக்கு என்ன ஆயிற்றோ? போய் பார்க்க வேண்டும்!
துப்பாக்கிகளின் முழக்கத்தை வை
கணித்தால், கார்ஸனும் அருகில்
னிருக்கக் கூடும்!
ரோஸின் வீட்டைக் கடந்து செல் வதால் ஒன்றும் மோசமாகி விடாது!
கெனே-ஓடிவா-இங்கே!



ரொம்பவும் கூர்மையான பார்வைதான் உனக்கு!
டமீல்!!
ஆ...
ஐந்தாறு பேரை முடக்கிப் போட்டு விட்டேன். அங்கே கார்ஸனும் இந்த அளவுக்கு சாதித்திருந்தால் நிலைமை எங்களுக்கு சாதகமாகி விடும்!
டமீல்!!
முற்றுகையிடப் பட்டிருக்கும் ஷெரீப்பின் வீட்டை நெருங்கி நிலவரத்தை கண்டறிய வேண்டும்!
இதற்கிடையே-
இல்லை-உனக்குக் கேட்கவில்லையா-துப்பாக்கிகளின் முழக்கம்!
வேறு திசையிலிருந்து வருகிறது!
ரேஞ்சர்கள் தப்பி வெளியேறியிருக்கக் கூடும்!
GENERAL STORE
நிறுத்தி விட்டார்கள்!


வெளியேறியிருந்தார்கள் என்ருல் அத்தோடு தொலேந்தார்கள்-தப்பிக்கவே முடியாது!
பரிதாபம்!
ஹேற-அங்கே பார்-
அந்த இருவரும் பேக்கரின் பண்ணே யாட்களல்லவா?-
RALSTORE
யாராவது ஒருத்தர் ஓடிச்சென்று டாக்டருக்கு தகவல் கொடுங்கள்.
எங்களுக்கு கொஞ்சம் ஒத்தாசை செய்யக் கூடாதா?
ரேஞ்சர்களே பிடித்து விட்டீர்களா?
ஒருவேளே அவர்கள் செத்துப் போனுல் அது அவர்களாகவே வரவழைத்துக் கொண்டதாகும். ஓடிப்போய் விடுமாறு ஜூனியர் பேக்கர் எச்சரித்தும், கேளாமல் உள்ளுக்குள்ளிருந்து கொண்டு எங்களே நோக்கி சரமாரியாக சுடத் தொடங்கினுர்கள்-
அவர்கள் மீது பழி போடாதே!
146
நடந்ததெல்லாம் எங்களுக்குத் தெரியாதென்று நினைக்கிறீர்கள்?


என்ன பேசுகிறேம் என்று தெரிந்துதான் பேசுகிருயா? மிஸ்டர் பேக்கரின் காதில் விழுந்தால் என்ன நடக்கும் தெரியு-மல்லவா?
அட-சரிதான் போ!
ஏ-! இன்னெருவனும் வருகிருன் பார்!
ஒரு 'சிறகு' ஒடிந்து விட்டாற்போலிருக் கிறது!
அதே வேளையில்-
சே-என்ன முட்டாள்தனமான காரியம் இது! ஏதோ - ஆவிகளை தேடி அலைவது போல்?
ஆனல் அந்த ஆவிகள் நம் கண்ணில்படும் போதெல் லாம், நம்மில் யாருக்கேனும் தோட்டா ஒன்று பரிசாக வந்து சேருகிறதே!
ம்ம்-!
ஜாக்கிரதை! திடீரென்று எங்கிருந் தாவது வந்து முளைக்கப் போகிருர்கள்!
ம்ம்-ம்!
?!?!
ம்ம்-ம்ம்! ..


ரெம்-கிரிஸ்-என்ன இது!
ம்ம்-ம்!··
குதிரை களை எங்கே?
ஓடிப் போய்விட்டன, கெனே! அந்த ரேஞ்சர்கள் அவைகளை விடுவித்து துரத்தியடித்து விட்டனர்-
உங்களைப் போல் அறிவு கெட்ட முண்டங்களை நான் இதுவரை கேள்விப்பட்டது கூட இல்லை-
திடீரென்று எங்களை தாக்கிவிட்டார்கள்-கெனே!
ஆமாம்-உங்களைப் போல் கையாலாகாத பயல்களை மடக்கி இப்படி கட்டிப்போட வீரம் தேவையே யில்லை!
சரி-இப்போது ஓடிச் சென்று குதிரைகளை தேடிப் பிடித்து கொண்டு வந்து சேருங்கள்-சீக்கிரம்!
இன்னேரம் அவை பண்ணைக்கே போய்ச் சேர்ந்திருக்குமே!
யாரிடமாவது இரண்டு குதிரைகளை இரவல் வாங்கிக் கொண்டு போங்கள்-இரவு கவிழுமுன் திரும்பி வந்து சேர்ந் தாக வேண்டும்-ஓடுங்கள்!



அந்த ரேஞ்சர்களை நம்மால் ஏதும் செய்ய முடியாது என்று தோன் றுகிறது எனக்கு!
என்ன செய்ய லாம்!
தொடர்ந்து தேடுவோம்-இருட்டு முன் அவர்களை பிடித்துவிட முயற்சிப்போம்-தாமதமானால் சிக்கலாகி விடும்!
அதே வேளையில்- ஆத்திரமும் கோப மும் கொப்பளிக்க தொடர்ந்து தோட் டாக்களை ரோஸின் வீட்டைக் குறி- வைத்து ஆல்பர்ட் அனுப்பிக் கொண் டிருக்க - இரத்தக் களறிக்கு காரண மான அந்த மோதலை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும் தீர்- மானத்தோடு அங்கே வந்து கொண்டிருந் தார் டெக்ஸ் வில்லர்!
விடாமல் தொடர்ந்து கேட்கிறது தோட்டாக்களின் சீறல்! இன்னமும் ரோஸ் காயம்படாமலிருந்தால் ஆச்சரியப் படவேண்டிய விஷயம்தான்!
டுமீல்....
டுமீல்....
டுமீல்
டுமீ...
SHERIFF



அவர்களிடமிருந்து பதிலடி வரக்காணோமே-
செத்-தொழிந்து விட்டார்-களோ?
?!
திரும்பிப் பார்-கைகளை உயர்த்தியவாறு!
சூரத்தனமாக எதையாவது சாதிக்க இன்னமும் நீ கனவு கண்டு கொண்டிருந்தால் விழித்துக் கொள் - இல்லையேல், மற்றவர்களுக்கு பாடம் புகட்டிய முறையிலேயே உனக்கும் கற்பிக்க வேண்டியிருக்கும்!
கிராதகனே!
டெக்ஸ்வில்லர் அல்லவா?
நானு-நீயா?
ரோஸ்!
இதோ இங்கே இருக்கிறேன்! இன்னமும் முழு உருவமாக!
இறங்கி வா- சண்டை ஓய்ந்து விட்டது!


குட்டிப் பிரமுகர் நீ சுவரைப் பார்த்து நில்!
இன்னும் பாக்கியிருக்கிறது ரேஞ்சர்!
என்னைத்தேடி ஊருக்கு வெளியே அலைந்துகொண்டிருக்கும் மடையர்கள் எதையாவது சாதிப்பார்களென நீ நம்பிக்கொண்டிருந்தால் நீ ஒரு சரியான மடையன்!
இக்கணம் முதல் ஆட்டம் முழுவதுமாக ஒரு முடிவுக்கு வந்து சேரும் வரை, என் 45 ரக துப்பாக்கி உன் மரமண்டையை தொடர்ந்து குறி வைத்துக் கொண்டிருக்கும். நீயோ, உன் கூலிப்பட்டாளமோ ஏதாவது விஷமம் பண்ண முயன்ருல் விசையை இழுக்க கொஞ்சம் கூட தயங்கவோ தாமதிக்கவோ மாட்டேன்-ஜாக்கிரதை!
நீ ஒரு கொலை வெறியன்!
எங்களிடம் அந்த வெறியை யார் தூண்டிவிட்டது என்று சற்றே சிந்தித்துப்பார்- மூளையிருந்தால்!
ஒருவனை நிராயுதபாணியாக்கி மற்றவர்களை தேடிப் பிடித்து கொண்டு வர அனுப்பு!
இதோ வந்துவிட்டேன்!



எண்ணி பத்தே நிமிடத்தில் அத்தனை பேரும் இங்கே ஆஜராக வேண்டும்-
அவர்களிடமுள்ள ஆயுதங்களை அகற்றும் பொறுப்பும் உன்னுடையதே!
செய்தியை புரிந்து கொண்டாயா?
இதையெல்லாம் மிஸ்டர் பேக்கர் அறிந்தால் கோபத்தில் வெடித்து விடுவார்!
ரோஸ்!
மும்முறை தொடர்ந்து சுடு!
இனியும் கார்ஸன் விறகை அலட்டிக் கொள்ளத் தேவையில்லை!
அந்த வெடியோசை! ஆட்டம் முடிந்துவிட்டது- டோய்!


அதே சமயம்-
கெனோ! கெனோ!
?
?!
தொலைத்து விடுவோம்- தொலைத்து!
ரேஞ்சர் ஒருவர் ஆல்பர்ட்டை துப்பாக்கி முனையில் பிணையாக நிறுத்தி வைத்திருக்கிறார்!
நாம் எல்லோரும் ஆயுதங்களை தூர எறிந்துவிட்டு உடனே ரோஸின் வீட்டின் முன்னே வந்து கூட வேண்டுமாம்!
மூடுவாயை! ஆல்பர்ட் அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டபின் நாம் பலப் பிரயோகம் செய்வது முட்டாள்தனம்.
அதற்காக அப்படியே ஓய்ந்து விடுவதா?


ஆம் என்பதே என் பதில்!
சைத்தானே துப்பாக்கியை காட்டாதே!
பிஸ்டலிலிருந்து நீ கையை விலக்கியபின் அக்காரியத்தை செய்யலாமென்றிருக்கிறேன்!
நீ கார்ஸன் அல்லவா?
சாட்சாத் கார்ஸனே தான் நான்! ஏதேனும் செய்தி உண்டா?
அப்படியெல்லாம் இல்லை! ஆல்பர்ட் உங்களோடும் டெக்ஸ் வில்லரோடும் பகைமையை வளர்த்துக் கொள்ள நேரிட்ட துரதிர்ஷ்டத்தை எண்ணி சலிப்புறுகிறேன்!
வரவேற்கத் தகுந்த எண்ணப் போக்கு! பேக்கர் மாதிரி ஆல்பர்ட் மாதிரி உணர்ச்சி வசப்படும் ஜாதியல்ல நீ என்று புரிகிறது!
வாருங்கள் போகலாம்! தேவையில்லாத இந்த ஆர்ப்பாட்டத்தால் ஏகப்பட்ட நா வறட்சி எனக்கு- விட்டால் நேராக மதுபானக் கடைக்கு ஓடிப்போய் விடுவேன்!


சில நிமிடங்களுக்குப் பின்—
எல்லோரிடமிருந்தும் ஆயுதங்களை அகற்றியாகி விட்டதா?
யெஸ்!
நல்லது- அனைவரும் நான் சொல்லப் போவதைக் கவனமாகக் கேளுங்கள்- என்னைப் பொறுத்தவரை விவகாரம் முற்றுப் பெற்று விட்டது!
ரோஸ் மீண்டும் நட்சத்திர இலச்சினையை அணிந்து கொண்டு பேக்கர் விரும்புகிறாரோ இல்லையோ- ஷெரீப்பாக தொடர்ந்து பணியாற்றி வருவார்!
சட்டம் ஒழுங்கு அமுலாக்கப்பட்டு விதிவிலக்கின்றி அனைவரும் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படும் வரை நானும் கார்ஸனும் இங்கே தங்கியிருப்போம்!
உங்களைப் பொறுத்த வரை பண்ணைத்தொழிலில் ஈடுபடுவதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்! தவிர்க்க முடியாத காரணம் ஏற்பட்டாலன்றி இந்த ஊர்ப்பக்கம் தலை காட்டவேகூடாது!


சட்டத்தை தூக்கி எறியவோ, அடுத்தவர்களின் உரிமைகளில் தலையிடவோ உனக்கு அதிகாரமுண்டு என்று தப்புக்கணக்குபோட்டு விடக்கூடாது ஆல்பர்ட்!
இதைப் போய் என் தந்தையிடம் சொல்லிப் பாருங்கள். சரியான பதில் கொடுப்பார்!
நிஜமாகவே அப்படி நீ நினைக்கிறாயா?
ஆமாம்! அந்தக் கணமே உன்னை இருக்குமிடம் தெரியாமல் பண்ணி விடுவார்!
முட்டாள் தனமாக பிதற்றாதேடா இடியட்!
அப்படி ஒரு வேளை உன்னைப்போலவே ஒரு திமிர்பிடித்த- முட்டாள்தனமான அந்தப் பெரிய மனிதர் என்னோடு பேச விரும்பினார் என்றால் நான் இங்கேதானிருப்பதாக கூறு!
நான் உங்களிடம் வலியுறுத்திக்கூற விரும்புவது யாதெனில், ஆட்டுக்குட்டிகளை வேட்டையாடச் செல்லும் ஓநாய்களாக உங்களை கற்பனை செய்துகொண்டு மறுபடியும் இங்கே முட்டாள்தனமாக தலைகாட்டி விடாதீர்கள்- என்பதே!



இம்முறை உங்களை செயலிழக் கச் செய்ய மட்டுமே குறி வைத்தேன்
மறுபடியும் இப்படியொரு சூழல் உரு வானால் நெஞ்சைத்தான் குறி வைப்பேன் - ஜாக்கிரதை!
சரி-நீங்கள் போகலாம்!
உங்களை பிறகு சந்திக் கிறோம்- மிஸ்டர்!
நானாக இருந்தால் அதற் குத் துணியவே மாட்டேன் போ வராதே!
அந்தக் கும்பல் நே ராக டாக்டரின் மருத் துவமனை நோக்கிச் சென்றது. டெக்ஸ் வில்லரும் மற்ற இரு தோழர்களும் அருகே யிருந்த மதுபானக் கடையை நோக்கி நடந்தனர்-
ஏகப்பட்ட தாகம் எனக்கு!
இயற்கைதானே! எங்களுக்கு மட்டும் இல்லையா- என்ன?
சரியாகச் சொன்னாய்!


அங்கே-
மோசமாக ஏதுமில்லையே- டாக்டர்?
இல்லை!
எல்லோருக்குமே கையிலோ காலிலோதான் தோட்டா பாய்ந்திருக்கிறது. உங்களை முடக்கிப் போடுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு துப்பாக்கியை இயக்கியிருக்கிறார்கள் என்பது தெள்ளத் தெளிவு!
இருக்கலாம்- டாக்டர்!
அப்படித்தான் ரேஞ்சர்கள் சொன்னார்கள். ஆனால், மிஸ்டர் பேக்கர் அடாவடியாக மீண்டும் ஏதாவது செய்யத்துணிந்தால் விளைவு விபரீதமாக இருக்கும் என்றும் எச்சரித்தார்கள்!
விரும்பத்தகாத நிலவரம்கெனே! இங் நடந்ததை கேள்விப்பட்டபின் பேக்க சும்மா ஓய்ந்து உட்கார்ந்திருப்பார் என்று எதிர்பார்ப்பதற்கில்லை-
என் கணிப்பும் அதுதான் டாக்டர்!
இவர்கள் மூவரையும் பழிதீர்க்க என்ன வேண்டுமானாலும் செய்வார்!
அவரை தடுத்து நிறுத்த நீ ஏதாவது செய்யமுடியாதா?
முயற்சி செய்கிறேன்-டாக்டர்! வில்லரோடும், கார்லனோடும் மோத நினைப்பது சுத்த பைத்தியக்காரத்தனம் என்பதை நேரில் கண்டறிந்தவன் நான். ஆனால் மிஸ்டர் பேக்கர் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார் என்பதில்தான் சிக்கல்!
எதற்கும் முயற்சி செய்து பார்!


ரேஞ்சர்களான டெக்ஸையும், கார்ஸனை யும் பேக்கர் சவாலுக்கு அழைப்பதென் பது சட்டத்துக்கே சவால் விடுவதாகும் அது எங்கே கொண்டு சேர்க்குமோ- சொல்வதற்கில்லை!
எல்லாம் நல்லபடி யாகவே நடக்கும் என்று நம்புவோமாக!
வா-வந்து கொஞ்சம் ஒத்தாசை செய்!
வண்டி வந்து விட்டது டாக்டர்! காயமடைந்தவர்களை அதில் ஏற்றலாமா?
ஓ-ஷ்யூர்!
இதற்கிடையே-
நிஜமாகவே இங்கே தங்க தீர்மானித் திருக்கிறீர்களா?
ஏன்-கூடாதா?
எனக்கும் கார்ஸனுக்கும் இப்போது குறிப் பிட்டுச் சொல்லும்படியாக எந்தப் பணியும் இல்லை! எனவே, இங்கே சட்ட ஒழுங்கை மீண்டும் நிலை நாட்டுவதில் உனக்கு பக்க பலமாக இருக்க நினைக்கிறோம்.
அடுத்து இங்கே என்ன நடக்கப் போகிறது என்று உனக்குத் தெரியாததல்ல!
நானொன்றும் ஜோஸ்யனல்ல-ரோஸ்!
நீ விரும்பினால் நானே சொல் கிறேன்!



தயவு செய்து வேண்டாம்! இடி வந்து விழப்போகிறது நம் தலையில் என்பாய்-வேறென்ன?
போதும் போதும் கிளாஸை கையிலெடு!
நம் இறுதி நாட்கள் இன்பமாகக் கழிய!
அப்படி எதுவும் நிகழாது என்று நம்புகிறாயா?
ரெயின்போ பண்ணையில்-சிலமணி நேரம் கழித்து-
ஓகோ-அப்படியா சமாசாரம்!
ஆமாம்! நாங்கள் இந்தக் கோலத்தில் திரும்பி வந்தது ஏனென்று புரிந்து கொண்டீர்களல்லவா?
கென்னே-நீ ஏன் ஒன்றுமே பேசாமலிருக்கிறாய்?
நான் என்ன நினைக்கிறேன் என்று நிஜமாகவே கேட்டறிய விரும்புகிறீர்களா?
ஆமாம்-நீ என் நிர்வாகஸ்தர்-அல்லவா?
விவகாரத்தை அப்படியே கைவிட்டு விடுவதுதான் உசிதம்! வில்லரையும் கார்ஸனையும், அலட்சியப்படுத்துவதற்கில்லை-நாம் இதே ரீதியில் தொடர்ந்தால் இங்கே நிறைய சவக் குழிகள் தோண்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்!
நீ அப்படி நினைக்கிறாயா? கென்னே?


என் அபிப்பிராயத்தைக் கேட்டீர்கள்-சொன்னேன்-அவ்வளவுதான்!
நல்லது!
தன் கீர்த்தியையும் கௌரவத்தையும் பற்றி உறுதியான கருத்து கொண்டிருக்கும் ஒரு பேக்கரின் அபிப்பிராயம் மாறுபடலாயில்லையா-அதனால்-
நான் இப்போது சொல்வதை இருவரும்கவனமாக கேட்டுக் கொள்ளுங்கள்-
உடனடியாக நாம் அவர்களை திருப்பித் தாக்குவது புத்திசாலித்தனமல்ல என்று நீங்கள் சொன்ன கருத்தை ஏற்றுக் கொள்கிறேன்- அத்தோடு, அவர்களிருவரும் எப்படிப்பட்ட பேர்வழிகள் என்று தெரிந்து கொண்ட பின்னரும்-
அவர்களுக்கெதிராக நேரடி நடவடிக்கையில் இறங்கினால் விளைவு விபரீதமாக இருக்கும் என்பதையும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் விவகாரத்தை இப்படி தோல்வியுற்ற நிலையில் முடிவு கட்டினால் நாளை நான் வெளியே தலை-நிமிர்ந்து நடக்க முடியுமா சொல்லுங்கள்!
அதனால் பிரச்னையை இப்படியே விட்டு விடுவதற்கில்லை-வேறொரு உபாயத்தைக் கையாண்டு பழி தீர்த்துக் கொள்வோம்.
என்ன-அது!
ரூபி ஸ்காட்!
அந்தக் கொலைகாரனா?



பிஸ்டலை கையாளுவதில் அவனை மிஞ்சியவர்கள் யாருமே கிடையாது!
காசுக்கு கொலை செய்வதில் கில்லாடி அவன்!
ம்ம்-
உனக்கு சம்மதமில்லையா?
என்ன சொல்வதென்றே எனக்குப் புரியவில்லை!
காரியத்தை கச்சிதமாக முடித்துவிடுவதோடு, போலீஸாரின் கண்ணில் மண்ணைத்தூவி விட்டு மறைந்தோடிப்போவதிலும் கில்லாடி அந்த ரூபி! நம்மை எக்காரணம் கொண்டும் காட்டிக் கொடுத்துவிடமாட்டான்! புரிகிறதா!
நீங்கள் அப்படியொரு முடிவெடுத்தால் நான் சொல்ல என்ன இருக்கிறது!
திடகாத்திரமான சில ஆட்களை அமர்த்திக் கொண்டு சில தினங்களுக்கு பண்ணை வேலையில் முழுமூச்சாக ஈடுபடு-! நடந்ததை அப்படியே விட்டுவிட்டோம்-பழி வாங்கும் நோக்கம் ஏதும் நமக்கில்லை என்று அந்த ரேஞ்சர்களை நம்பச் செய்வோம்!
ஆல்பர்ட் நீ பரபாகோ குடியிருப்புக்கு நாளைக் காலை புறப்பட்டுச் செல். ரூபியை சந்தோஷப்படுத்த கையோடு சில கம்பளிப் போர்வைகளையும் கொஞ்சம் விஸ்கியையும் எடுத்துக் கொண்டு போ. நாம் அவனிடம் என்ன எதிர்பார்க்கிறோம் என்று விபரமாக எடுத்துச் சொல்.



என்ன தொகை குறிப்பிட?
ஆயிரம்-அதிகம் போனால்-இரண்டாயிரம்!
அதற்கும் கூடுதலாக கேட்டு வற்புறுத்தினான் என்றால் இந்தக் காரியத்தை அவன் நமக்காக செய்து முடித்தால், நான் ஸன்னி கிரீக் விவகாரத்தை இப்படியே விட்டு விடுவேன் என்று சொல்!
அது என்ன ஸன்னி கிரீக் விவகாரம்?
அதை நீ தெரிந்து கொள்ளாமலிருப்பதே நல்லது. எனக்கும், ரூபிக்கும் மட்டுமே தெரிந்த இரகசியம் அது!
ஸன்னி கிரீக் விவகாரத்தைப் பற்றி நீ பேச்சை எடுத்ததுமே, மறு பேச்சின்றி தன் துப்பாக்கியை எடுத்து எண்-ணெய் போடவும், குதிரைக்கு சேணம் கட்டவும் தொடங்கி விடுவான்-நிச்சயமாக!
அவனோடு நீ சேர்ந்து கிளம்புவதோ, சேர்ந்து காணப்படுவதோ, தவிர்க்கப்பட வேண்டியதொன்று! இது ரொம்ப முக்கியம். நீ சென்று வந்ததற்கான தடயம் ஏதும் இருக்கவும் கூடாது-புரிகிறதா?
புரிந்து கொண்டேன்-அப்பா!


சரி நீங்கள் போகலாம்!
அதையடுத்து-
எப்போது நீ கிளம்ப உத்தேசம்?
இப்போதே!
பரபரப்பு ஏற்படுத்தாமலும் உடனடியாகவும் செய்து முடிக்க வேண்டிய காரியம் இது. இரவில் பயணத்தை தொடங்கினால் நாளை விடிகாலையில் ரூபியை சந்திக்க முடியும். ஏற்பாட்டைசெய்து முடித்துவிட்டு அப்படியே துல்சலுக்குப் போய்விடுவேன்!
நகரில் நாலைந்து நாட்கள் தங்கி நன்றாக ஓய்வெடுத் துக் கொள்ள வேண்டும் நான். திரும்பி வரும் வழி யில் சில்வர்பெல் வழியாக வருவேன்!
வில்லரின் சமாதியில் மலர் வளையம் வைக்கவா?
முக்கியமாக நம்மைப் பார்த்து கேலியாக நகைத்த ஜனங்களின் மூஞ்சியில் காறித் துப்பிவிட்டு வரவும் தான்!


இரண்டு மணி நேரத்திற்குப்பின் பண்ணையை விட்டு குதிரையில் புறப்பட்ட ஆல்பர்ட்கூடவே இரண்டு கோவேறு கழுதைகளின் மீதுருபிக்கு ஏராளமான பரிசுப் பொருட்களையும் எடுத்துச் சென்று கொண்டிருந்தான்-
மறுநாள் விடிகாலை வேளையில்-
அப்பாடா ஒரு வழியாக வந்து சேர்ந்தாயிற்று!
அதோ அங்கே நிற்பவன்- அந்த யமனே தான்!
வ்வ்வ்வ்! வ்வ்வ்வீ! வவ்வ்!
ச்சூ- சைலன்ஸ்!
டுமீல்!!


வவ்வஹ்!!
நல்வாழ்த்துக்கள் ரூபி!
ஓ- எத்தனை பெருமை எனக்கு! ஒரு சாதாரண துப்பாக்கி வீரனை தேடி செல்வச் சீமான் பேக்கரின் மைந்தர் இவ்வளவு தூரம் வருவதென்றால்-
அப்பாவிடமிருந்து நல்வாழ்த்துக்களையும் உனக்குப் பிடித்த சில அன்பளிப்புப் பொருட்களையும் கொணர்ந்திருக்கிறேன்!
ம்ம்- அட- விஸ்கியுமா!
இதற்கு விளக்கம்? என்னுடைய பிஸ்டலின் சேவை உன் தந்தைக்கு தேவைப்படுகிறதா- என்ன?
அதைப்பற்றி பிறகு பேசலாம்- முதலில் நீ கொஞ்சம் தாக சாந்தி செய்துகொள்!
சரியான யோசனை! இறங்கி வந்து இப்படி உட்கார்!


லாகுவாரா! கொறிக்க ஏதாவது கொண்டு வா- என் நண்பருக்கும் சேர்த்து!
இதோ-
இருவரும் மௌனமாக காலை உணவை உண்டு முடித்ததும்
ம்ம்- இனி பேச்சை ஆரம்பிக்கலாம்!
விஷயம் என்ன வென்று போட்டு உடை!
டெக்ஸ் வில்லரைப் பற்றி கேள்விப்பட்-டிருக்கிறாயா?
சிறுபிள்ளைத்தனமான கேள்வி! அந்த ராஸ்கலைப்பற்றி யார்தான் கேள்விப்படாமலிருக்க முடியும்? அவனைத்தான் தீர்த்துக் கட்ட வேண்டுமா?
ஆமாம்- இதை செய்து முடித்தால் இரண்டாயிரம் டாலர் கிடைக்கும் உனக்கு!
ம்ம்- கடினமான பணி- தொகையும் அதிகமாக இருந்தால் பொருத்தமாக இருக்கும்!




அவசரப்படாதே- இன்னொன்றையும் அப்பா உன்னிடம் சொல்லச்சொன்னார். இதை நீ நிறைவேற்றினால் ஸன்னிகிரீக் சமாச்சாரத்தை அடியோடு மறந்து விடுவாராம்!
ஸன்னி கிரீக் பழைய விவகாரம்! அதைப் பற்றி வேறு ஏதும் சொன்ன
இல்லை!
ம்ம்- நல்லது! பணத்தை கொண்டு வந்திருக்கிறாயா?
ஆயிரம் இருக்கிறது! ஆனால் நீ என் தந்தையின் வார்த்தையை நம்பலாம்!
சரி- இருக்கிற தொகையை வெளியே எடு! அதை வாங் என் பாக்கெட்டினுள் திணி துக் கொண்டால் ஆயிரமாயிர யோசனைகள் ஊற்றடிக்கும் என் மூளையில்!
இந்தா எண்ணிக்கொள்!
அவசியமில்லை!
சரி- மற்ற விபரங்களைச் சொல்- பயல் எங்கே இருக்கிறான்!
சில்வர் பெல்லில்!



முதல் நாள் இரவு நடந்த அனைத்து சம்-பவங்களையும் சுருக்கமாக எடுத்துரைத்தான் ஆல்பர்ட்!
இன்னும் சில தினங்களுக்கு அவர்கள் இருவரும் அங்கேதான் தங்கியிருப்பார்கள்!
சில தினங்களுக்கு என்ன- நிரந்தரமாகவே அங்கேதான் இருக்கப்போகிறார்கள்- சமாதியினுள்!
அத்தனை நிச்சயமாக நீ சொல்வதைக் கேட்க சந்தோஷமாயிக்கிறது!
என்னுடைய பிரச்சனையை நீ எண்ணிப் பார்த்ததுண்டா?
ம்ம்- அந்த வில்லர் துப்பாக்கியை கையாளுவதில் சமர்த்தன்!
தெரியும் எனக்கு!
மின்னல் வேகத்தில் செயற்படக் கூடிய திறமைசாலி! ஆனால் என்னிடமுள்ள ஒன்று அவனிடம் கிடையாது!
என்ன அது?
நாளை அஸ்தமன வேளையில் கிராமத்திற்கு நீ சென்றால் நேரிலேயே பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்!
ஸாரி ரூபி! அப்போது நான் அங்கே இருக்கக்கூடாது!


சரி-நஷ்டம் உனக்குத்தான்! அரிய காட்சி ஒன்றை நேரில் காணும் வாய்ப்பை நீ இழக்கிறாய்!
ஒருவன் எப்போதும் எல்லாவற்றையும் ஒருங்கே பெறமுடியாது- இல்லையா?
புறப்பட்டு விட்டாயா?
இன்று மாலைக்குள் நான் துல்சன் சென்றடையவேண்டும்!
இஷ்டம் போல் செய் ராஜா!
எனக்கு இரண்டாயிரம் கொடுப்பதா சொன்னதை மறந்துவிடாதே!
காரியம் முடிந்ததும் மீதித்தொகையை நானே கொண்டு வந்து நேரில் கொடுப்பேன்!
உன்னை நம்புகிறேன்! பிறகு சந்திப்போம் - சென்று வா!
போய் வருகிறேன்!


த இரண்டுங்கெட்ட ஜாதிப் பயல் சுப் பாம்பை விட கொடியவனாக இருப்பான் போலிருக்கிறதே!
கொலை வெறி தாண்டவமாடும் அந்த விழிகளை நேருக்கு நேர் பார்க்க நேரிட்டபோது என்னமாய் ஜில்லிட்டுப் போனது என் முதுகுத்தண்டு! படுபயங்கரம்!
அங்கே-
என்னை ஏன் அப்படி வெறித்துப் பார்க்கிறாய் பெண்ணே!
நீங்கள் செய்ய உத்தேசித்திருப்பதில் எனக்கு கொஞ்சம் கூட சம்மதமில்லை!
ன் பேதலிக்கிறது உன் புத்தி? ஒருவனை தீர்த்துக்கட்ட வேண்டுமென்று முதல்முறையாக என் உதவியை நாடிவந்திருப்பதனாலா?
இல்லை- இம்முறை நிலவரம் வேறுபட்டதொன்று!
எனக்கு எந்த வேறுபாடும் தெரியவில்லை! அதேபிஸ்டல் அதே விரல்கள் தான் அதன் விசையை இழுக்கப் போகின்றன!


ஆனால் - இலக்கு? உன்னை நரகத்துக்கு அனுப்பி வைக்கும் ஆற்றல் கொண்டது!
டெக்ஸ் வில்லரை குறிப்பிடுகிறாயா.. நீ!
ஆம்! அவருக்கு "இ கழுகு" என்ற பெய உண்டு. விசே திகள் பல அவ உள்ள
கிழவிகள் பேசும் கட்டுக்கதைகளை நிறைய நீ கேட்டதனால் வந்த வினை!
உங்களுடைய பிஸ்டலின் ஆற்றலைப்பற்றிய உங்கள் மதிப்பீடு சர்ச்சைக்குரியது
எப்போதுதோற்றுப்போ ருக்கிறது இந்த பிஸ்டல் சொல்லேன்!
கிராமத்தினுள் நான் நுழைந்தால் அவனவன் விலகிவழிவிட்டுஒதுங்கிப் போகிறான் .. என் விழிகளை ஏதிட்டு நோக்க அங்கே ஒருபயலுக்கும் தைரியம் கிடையாது!
எனக்குத் தெரியும்... ரூபி!
ஆனால் உங்களுடைய நலனில் அ கறை கொண்ட என் வார்த்தை களுக்கும் கொஞ்சம் செவிசாயுங்க 'இரவுக் கழுகு'டன்-மோதுவதை தவிருங்கள்!


றமனிதர்கள் மாதிரி இல்லை அவர்
ந்திரீக வம்சாவழியை சார்ந்தவர்
ர்என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.
வில்லர் நிகழ்த்தியிருக்கும் பயங்கர சாகஸங்களை பலர் சொல்லி கேட்டிருக்கிறேன் நிறைய!
லும்புக்கூடு பள்ளத்தாக்கை இரவில்
னியாக கடந்து வந்திருக்கிறாராம்
வ்வித சேதமும் இன்றி!
என் உடம்பிலும் பாதி இரத்தம் வெள்ளை என்பதை மறந்து விடாதே! இம்மாதிரியான கட்டுக்கதைகளைக் கேட்டு மிரண்டு போகிற ஜாதி நான் இல்லை!
போதும்...நிறுத்து!
வில்லரும் சாதாரண பேர்வழிதான்! என்ன-திறமை சற்று கூடுதலாக இருக்கக் கூடும்!
இனி இரண்டாம் முறையாக சூரியன் மேல் திசையில் இறங்கும்போது அவனும், சமாதியினுள் இறக்கப்பட்டு விடுவான்! அத்தோடு அவனைப் பற்றிய கட்டுக் கதைகளும் புதையுண்டு போகும்!



அதே வேளையில் — சில்வர் பெல்லில்...
ஓ...என்ன அருமையான தூக்கம்.
ஆனால் என் விஷயம் அப்படியல்
குட்மார்னிங்! நன்றாக தூங்கினீர்களா?
இரவெல்லாம்பயங்கர கனவுகள் நூறு பேர் கையில் '.45' ரக துப்பாக்கியை ஏந்திக்கொண்டு கண்களில் கொலைவெறியோடுஎன்னைவிடாமல் துரத்தி வருகிற மாதிரி
ஆனால்.. நான் விழித்தெழுந்த மூச்சுவாங்கியது மட்டுமல்லாம என்கால்களும் பல மைல் தூர தொடர்ந்து ஓடியதுபோல் வலி கண்டதும்தான்புதிரானசமாச்
நல்லவேளை— அது வெறும் கனவுதானே!
உன்னை நினைக்கையில் பரிதாபமாகஇருக்கிறது கார்ஸன்!
முதலைக் கண்ணீர் வடிக்காதே! வலிக்கக்கிள்ளிவிட்டு பிறகு தொட்டிலையும் ஆட்டுகிற ரகம்
உனக்கு பச்சாத்தாப ஏற்படவில்லையா ரோஸ்?
எனக்கு அழுகையே வந்துவிடும் போலிருக்கிறது ஹூம்!


நாசமாகப் போங்கள்
போகிறோம்-ஆனால் முதலில் காலைச் சிற்றுண்டிக்கு ரெஸ்டாரண்ட் சென்றுவிட்டு— அப்புறம்தான்!
என் தலையை உராய்ந்து கொண்டு செல்லுமாறு தோட்டாவை அனுப்பினீர்களே — அங்கேயா?
இருபது மைல் சுற்று வட்டாரத்தில் அது ஒன்றுதான் நல்ல ரெஸ்டாரண்ட்!
சூடான ஆம்லேட்டும் கூடவே கொஞ்சம் காப்பியும் உனக்கு தெம்பூட்டக் கூடும் . கார்ஸன்!
ஆகா... நாக்கில் நீர் ஊறுகிறது!
இம்முறை செலவு என்னுடையது!
ஆனால்..இப்போது நீ வெளியே பார்வையை நீளவிட்டாயானால் உன் உற்சாகம் என்னவாகுமோ தெரியவில்லை.
அரைமணிநேரம் கழித்து ..
தெம்பாக இருக்கிறதா. இப்போது!
ஓ உற்சாகம் பிய்த்துக் கொண்டு போகிறது!



கெனோ'
ஆமாம்- அவனே தான்.
ரெயின் போ பண்ணை நிர்வாகஸ்தன்!
STAURANT
EMPORIUM
என் நிம்மதியை குலைக்க வந்த சைத்தான்!
பதறாதே !அவனைப்பார்த் தால் விவகாரம் பண்ண வந்தமாதிரிதோன்றவில்லை!
மதுபானக் கடையின் முன்னால் குதிரையை விட்டு இறங்கி உள்ளே நுழைகிறான்.
நாமும் அங்கே போகிறோமா?
நிச்சயமாக!
ஹலோ கெனோ!
ஹலோ- ஷெரீப்பை பார்த்தீர்களா?
176



இல்லை-ஆனால் இன்னும் சற்று நேரத்தில் அவர் இங்கே வரக் கூடும்!
நடந்ததைக் கேட்டு மிஸ்டர் பேக்கர் ரொம்ப கோபம் கொண்டாரோ?
அதைப்பற்றி நாம் பேசாமலிருப்பதே நல்லது.. டாம்மி!
ஆவ்....! அந்த இரண்டு ரேஞ்சர்களோடு ஷெரீப் நேராக இங்கேதான் வந்துகொண்டிருக்கிறார்!
அதோ-அங்கே ஒதுக்கமாக இருக்கிற மேஜைக்கு இந்த கிளாஸ்களை எடுத்துக் கொண்டுபோய்வை.
கெனே
ஹலோ
வேலையாக வந்தாயா, இங்கே?
உங்களை சந்திக்கத்தான் வந்தேன் . அந்தமேஜை வாருங்கள் ஓரமாக உட்கார்ந்துகொண்டு அனைத் தையும் விபரமாக சொல்கிறேன்!



நடந்த அனைத்தையும் விரிவாக எடுத்துரைத்தான் கெனே!
முதல் முறையாக காதில்விழுகிறது-இந்தப் பெயர்!
ரூபி ஸ்காட்டை கேள்விப் பட்டிருக்கிறீர்களா?
யார் அந்த துப்பாக்கிக்காரனு?
ஷெரீப்புக்கு அவனைத் தெரிந்திருக்கிறது! வில்லரைத் தீர்த்துக்கட்ட அவனை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.
ஓகோ !
இது என்ன புதுத்தொல்லை!
நீ புறப்படுமுன் உன்னிடம் ஒரு கேள்வி கேட்கவிரும்புகிறேன் கெனே?
கேளுங்கள்!
பேக்கரின் நிர்வாகஸ்தன் அல்லவா நீ !அப்படியிருக்கையில் இந்தத் தகவலைவந்து எங்களிடம்நீசொல்லக் காரணம்? உன்னை வேலையைவிட்டு நீக்கிவிட்டாரா என்ன?
அப்படியெல்லாம் ஏதுமில்லை!
உங்களைப்போன்ற ஒரு நபர் பச்சைப்படுகொலை செய்யப்படுவதை என் மனம்ஏற்றுக் கொள்ள மறுக்கிறது!


ஆச்சரியம்தான்...!சொல்-மேலே .!
சீக்கிரமாக சொல்லிமுடித்து விட்டு இங்கிருந்து நான் ஓடிப்போய்விடவேண்டும்!
பாபாகோ குடியிருப்புக்குச் சென்று ரூபி ஸ்காட்டைஅமர்த்த தன்மகன் ஆல்பர்ட்டை அனுப்பியிருக்கிறார் மிஸ்டர் பேக்கர்
ம்ம் ..
ரூபி ஒரு செவ்விந்தியனா-என்ன?
ஒரு வெள்ளையருக்கும் ஒரு செவ்விந்திய பெண்ணுக்கும் பிறந்தவன்-வருடத்தில் சில மாதங்கள் பாபாகோ குடியிருப்பில் இருப்பான். பிறகுவடக்கே எங்கோபோய் வருவான்-வரும்போது பை நிறைய கரன்ஸிகள் இருக்கும்.
இரண்டுமுறை நான் அவனை பார்த்திருக்கிறேன்.ஆனால் மிஸ்டர்பேக்கர் அவனை நெருக்கமாக அறிவார்
நானும் அவனை சில தடவைகள் சந்தித்திருக்கிறேன் அவனைப் பார்க்கும்போதெல்லாம் நச்சுப்பாம்புதான் என் நினைவுக்கு வரும்.


ஆள் எப்படியிருப்பான்?
உங்கள் உயரம் இருப்பான்.. கருப்பு முடியை நீளமாக வளர்த்து தொங்கவிட்டிருப்பான் . ஆல்ம ண்டுபோன் கண்கள். கன்னத்து எலும்புகள் சற்று தூக்கலாக இருக்கும்.
வழக்கமாக வெள்ளி டாலர்களால் அலங்கரிக்கப்பட்ட தொப்பியும், மெக்ஸிகன் ஸ்டைலில் கருப்புநிற கோட்டும் அணிந்திருப்பான்..
சரியான விதூஷகன் என்றுசொல்!
எப்போது இங்கே வருவான் என்று உனக்குத் தெரியுமா?
இல்லை... அனேகமாக ஓரிரு நாளில் வரக் கூடும்!
ஓகோ...
மிஸ்டர் பேக்கரிடம் வேறு என்ன தான் குற்றங்குறைகள் இருந்தாலும் என்னைப் பொருத்தவரையில் அவர் ஒரு நல்லமுதலாளியாகவே இருந்துவந்திருக்கிறார் எனவே..
என்னை எச்சரிக்க மட்டுமே இங்கே நீ வரவில்லை என்று நான் நினைக் கிறேன்!
ம்.. மேலேசொல் கென்னே!
BARBER
ஆமாம் சரியாக யூகித்துவிட்டீர் கள்!



நீங்கள் மூவரும் உடனே இங்கிருந்து கிளம்பிச்சென்று விட்டீர்கள் என்றால், மிஸ்டர் பேக்கரின்கொலைத்திட்டம்அர்த்த மற்றுப்போய்விடும் . அத்தோடு வேறு ரேஞ்சர்கள் விசாரணை நடத்த இங்கே வர காரணமும் இராது!
நான் சொல்வதை புரிந்து கொண்டீர்களா?
ஓ .. தெள்ளத் தெளிவாக!
நான் கொலை செய்யப்படுவதை நீ விரும்ப வில்லை- காரணம்.. அப்படி நான் செத்து விழுந்தால் போலீஸ் விசாரணை வரும்— உன் முதலாளி வம்பில்மாட்டிக்கொள்வார் அப்படித்தானே?
ஆமாம்...அப்படித்தான் நீங்கள் தயவு செய்து இங்கிருந்துபோய் விடுங்கள்!
இல்லை..!
தக்க தருணத்தில் வந்து எனக்கு தகவல் கொடுத்த உனக்கு என்மனமார்த்த நன்றி கென்னே.. ஆனால் நான் எக்காரணம்கொண் டும் இங்கிருந்து கிளம்பிப் போவதில்லை.
ம்ம் நான் எதிர் பார்த்ததுதான்!
என் மனச்சாட்சி இட்ட கட்டளைப்படி நடந்து கொண்டேன் நான் வேறென்ன செய்ய முடியும்?



உங்களுக்கு நல்வாழ்த்து கூறத் தான் விரும்புகிறேன், மிஸ்டர் வில்லர் — ஆனால்
முகத்தை ஏன் இப்படி தொங்கப்போட்டுக் கொண்டிருக்கிறாய் கென்னே- இன்னும்நான் செத்துப்போக வில்லே!. உற்சாகமாக இருக்க முயற்சி செய்!
ஆனால் ரூபி ஸ்காட்டின் துப்பாக்கி முழங்கும்போது உயிர் பிழைக்கும் வாய்ப்பு உங்களுக்கு ஆயிரத்துக்கு ஒன்றுதான்!
அந்த இரண்டுங்கெட்ட ஜாதிப்பயல் ஒரு பயான்!
எதற்கும் ஒரு மலர் வளையம் வாங்கி தயாராக வைத்திரு. அவனுடைய சமாதியில் வைக்க!
அதையடுத்து, கென்னே அங்கிருந்து கிளம்பி பண்ணையை நோக்கிப் பயண மானான்...
டுமீல் டுமீல்... டுமீல்...
அதே வேளையில் அங்கே பாபாகோ குடியிருப்பில் அன்றாடம் மேற்கொள்ளும் சுடும்பயிற்சியை அப்போது தான் முடித்திருந்தான் . ரூபி.



இன்றைக்கு இது போதும்!
மிச்சமிருக்கும் தோட்டாக்களை இலாபகரமான முறையில் மதிப்பு வாய்ந்த வேறொரு இலக்கை குறி வைக்க பயன்படுத்துவேன்
வேண்டாம்போகாதீர்கள் .. ரூபி.
அந்த அகம்பாவக்காரன் பதிலேதும் சொல்லாமல் தன் குதிரையை நெருங்கி அட்டகாசமாக பாய்ந்து ஏறி அமர்ந்தான்-
வர இரண்டு மூன்று தினங்களாகும்.. திரும்பிவரும்போது நான் உனக்கு கொண்டு வரப்போகும் அரிய பரிசைக் கண்டு இங்குள்ள மற்ற பெண்கள் பொருமையால் செத்துப்போகப்போகிருர்கள்.. பாரேன்! வரட்டுமா!
யாயாஹாஹீஈஈ...!
அவர் திரும்பி வருவாரா..?
இந்தக் கேள்விக்கு பதில் தெரியவேண்டுமா உனக்கு?
18



என்னோடு வா...
சற்றைக்கெல்லாம் அந்த மாந்திரீகனின் குடிசையை சென்றடைந்தனர்...
நபியின் உடமைப்பொருள் ஏதேனும் உன் வசம் இருக்கிறதா?
ஆமாம்... மற்றவர்களுக்கு அவர் துஷ்டராக தெரிந்தாலும்என்னைப் பொறுத்தவரை எந்தக் குறையும் வைக்கவில்லை அவர்.!
இந்தத் தாயத்தினுள் அவருடைய முடி இருக்கிறது!
அதைக்கொடு இப்படி...!
அந்த முடியை களிமண்ணினால் மூடி ஒரு பொம்மைபோல் உருவகப்படுத்தினான்..
தனக்கு முன்னால் தரையில் அந்தப்பொம்மையை வைத்து கத்தியினால் அதைச்சுற்றி வட்டம் வரைந்தான்
உன் இடது கையை நீட்டு...


ஸாகுவாராவின் கையில் விநோத அமைப்பிலான மூன்று சிறு எலும்புகளைபோட்டான்...
பையிலிருந்த மற்ற எலும்புதுண்டுகளை நன்ருகக் குலுக்கி, வட்டத்தினுள் கவிழ்த்தான்.
ஓ...! உன் எஜமானன் வேருெரு நபரை எதிர்கொள்ளப் போகிருன் மிக முக்கியமான நபர்! ஆபத்தை நான் காண்கிறேன் —
'இர்வுக் கழுகு'
நவஜோக்களின் தலைவனு?
இன்றுகாலையில் இங்கே வந்தவெள்ளையன் 'இரவுக்கழுகை' கொல்லவேண்டுமென்று இவரிடம் கேட்டுக்கொண்டான்.
சே..! சுத்தபைத்தியக் காரத்தனம்.
சரியாகப்பட வில்லையே!
அவரை தடுத்து நிறுத்த முயன்றே ஆனல் என்வார்த்தைகளை அவர் அலட்சியம் செய்யவேயில்லை.


அந்தவெள்ளை
யனோடு ருபி பேசிக்கொண்டு
உட்கார்ந்திருக்கும்போதே
நினைத்தேன்-இப்படி-ஏதோ விப
ரீதம் முளைக்கப்போகிறதென்று!
உள்ளங்கையை நன்றாக மூடிக்கொண்டு,
வட்டத்தின் மையப்பகுயை நோக்கி
நீட்டி கவனமாக அந்த!எலும்புத்¡துண்டங்
களை அப்படியே நழுவ விடு-
அவ்வாறு ஸாகுவாரா செய்து முடித்
ததும் திடீரென்று அந்த மந்திரீகன்
பயங்கரமாக கூச்சலிட்டான்...
வாவாஆஆ...வ்வ்!
அவர் திரும்பிவரமாட்டாரா?
உன் கேள்விக்கு நீயே
பதிலையும் சொல்லிவிட்
டாய் ஸாகுவாரா...!
அதே நாளில் பின் மாலைப் பொழுதில்...
ரெட்ராக்கின் கோச்சுவண்டி!
யாஆஆ...!



...நில்லுங்கடா பயல்களா!
ஹி...
வணக்கம் ஷெரீப்,,ஸார்!
நலம்தானே...?
எனக்கு ஒருகேடும் இல்லை...! ஆபத்து உங்கள்கிராமத்திற் குத்தான்! இங்கே வில்லர் என்று யாரேனும்இருக்கிருர்களா
நீங்கள்தாஞ-?கொலைசெய்வதில் கில்லாடி என்று பெயர் வாங்கி யிருக்கும் ஒரு சண்டாளனிடமி ருந்து உங்களுக்கு ஒரு செய்தி கொண்டுவந்திருக்கிறேன்
இதோ இவர்தான்!
யார்ருபிஸ்காட்டா?
ஓ...அவனை முன்கூட்டியே தெரியுமா...உங்களுக்கு!
சுற்றி வளைக்காமல் விஷயத்துக்கு வா...
சொல்கிறேன்


கிராமத்துக்கு நாலைந்து மைல் தொலைவு இருக்கையில் அந்த அயோக்கியன் என்னை நிறுத்தி ஐந்து டாலர் நோட்டையும் உங்களிடம் கொடுக்க இந்தக் குறிப்பையும் தந்தான் ஷெரீபோடு உங்களைப் பார்க்க முடியும் என்று சொன்னான்!
வில்லர், துப்பாக்கியை கையாளுவதிலும் நேரடி மோதல்களிலும், சமர்த்தன் நீ என்று கேள்விப்பட்டேன். நீ இதுவரை ஈட்டிய வெற்றிகளுக்கெல்லாம் உன் திறமைதான் காரணம் என்று நீ நினைத்தால் உண்மை எது என்று சோதித்துப் பார்த்து விடலாமே?
— ரூபி ஸ்காட்-
கெனே சொன்னது சரியாகிவிட்டது.-நம் தோழர் ஸ்காட் உடனே கிளம்பி வந்துவிட்டிருக்கிறார்.
அந்த இரண்டு கெட்ட ஜாதிப்பயல் நரகத்துக்குத்தான் போவான்...! அயோக்கிய நாய்—
செய்தியை கொண்டு வந்து சேர்த்ததற்கு நன்றி பெரியவரே- இந்தாருங்கள் என் அன்பளிப்பு! போய் தாகசாந்தி செய்து கொள்ளுங்கள்...
உங்களுடைய நலம் பாடி குடிப்பேன்!
சரி... நாடகத்துக்கு நம்மை தயார்செய்து கொள்வோம் நண்பர்களே!
அலட்சியமாக எண்ணாதே, டெக்ஸ்!
கவலைப்படாதே... நான் எல்லா முன்னெச்சரிக்கைஏற்பாடுகளையும் செய்துகொள்ள உத்தேசித்திருக்கிறேன்..
நிஜம்தானா...?


அவன் எந்தத் திசையிலிருந்து வருகிறான்., எப்போது வருகிறான்என்பதை சற்றுநினைவு கூர்ந்துபார். ஏன் அப்படி திட்டமிட்டிருக் கிறான் என்று விளங்குகிறதா?
சரியாக சொல்லிவிட் டாய்!
ஓவ்-!புரிகிறது-!அஸ்தமானவேளை-அந் தப்பக்கமிருந்து வந்ததானால் அவனுக்கு பின்னாலிருக்கும் நம் முகததில் சூரியனின் கதிர்கள் விழுந்து கண்களை கூசச்செய்யும்.
இந்த வசதி அவனுக்கு கிடைக் காதவாறு, கிராமத்தின் உள் பகுதிக்கு அவன் வரும்வரை காத்திராமல் நானேஎதிர்சென்று அவனை சந்திக்கப்போகிறேன்
நல்ல யோசனைதான். மிகுந்த எச்சரிக்கை தேவை!
கார்ஸன் எச்சரிப்பதிலும் அர்த்தம் இருக்கிறது. ரூபியை எமன் என்று குறிப்பிடுவார்கள்
நான் அதி ஜாக் கிரதையாக இருப்பேன்!
'நீயா-நானா' நேரடிமோதல் நடக்கப்போகும் விஷயம் நொடியில் கிராமம் முழுவதும் பரவிவிட்டது.சீக்கிரமே எல்லோரும் அவரவர் வீட்டினுள் பதுங்கிக் கொண்டுவிட தெருக்கள் வெறிச்சோடிப்போயின...


நிமிடங்கள் கரைந்துகொண்டிருந்தன — இறுதியில் ..
அதோ, வருகிறான்- அவனேதான்!
ம்ம்ம்... அட்டகாசமான பேர்வழிதான்! ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்!
குதிரையிலிருந்து கீழே குதித்த ரு அதை ஓரிடத்தில் கட்டிப்போட்டு விட்டு தெருவின் மையத்துக்கு வந் தான்!
நான் இதோ வந்து விட்டேன், வில்லர்! நான் விடும் அழைப்பு கேட்கிறதா..உனக்கு?
?!
அப்படி கத்தவேண்டிய அவசியமே இல்லையடா இடியட்! இதோ உனக்குப்பின்னால் இருபதடி தொலைவில்தான் நின்றுகொண்டிருக்கிறேன் நான்!


யோக்கியமானவன் நீ என்று கேள்விப் பட்டேன். நேர்மையாக நடந்துகொள் வாய்என்று எதிர்பார்க்கிறேன்....
பிஸ்டலிருந்து கையை விலக்கி மெள்ள என்னை நோக்கித் திரும்பு பின்னர் நான் மூன்றுவரை சொல்வேன்-
அதை நீ நிச்சயமாக எதிர்பார்க்க லாம் . !
ம்.. அப்படித்தான்- ஜாக்கிரதை ! ஒன்று-இரண்டு-
நீ மூன்று என்று சொல்லி வாயைமூடுமுன் பிணமாகி விழப்போகிருயடாமுட்டாள்!
டுமீல்டுமீல்
டுமீல்
அட . சண்டாளா.. !
டுமீல்!


டமீல் டமீல்
ஆ வ்!
பிஸ்டலை தூர எறி ஸ்காட்! துப்பாக்கி ஒன்று உன்முதுகை குறிவைத்துக்கொண்டிருக் கிறது!
?
இது ஒரு நேர்மையான ஒற் ஒற்றை மோதல்- இதில் நீங் தலையிட உரிமையில்லை... ஷெ
நேர்மையான மோதலா? இதுவா?
முதல் முறை நீ எப்படி சுட்டாய் என்று நான் கவனிக்கவில்லை என்று நினைத் தாயா? உறையிலிருந்து பிஸ்டலை நீ எடுக்காமலே சுட்டாய்...
இம்மாதிரி உறையை பய படுத்தக்கூடாது என்று சட்டம் இருக்கலாம்- ஆன
உங்களுக்கு கழுகுக் கண் கள் ஹாம்!
92


விசேஷ அமைப்புக் கொண்ட உறையை நான் வைத்துக் கொண்டிருக்கிறேன். பிஸ்டலை வெளியில் எடுக்காமலே அப்படியே சுட இதில் வசதியுண்டு!
செய்யுங்களேன்...! ஆனால் ஷெரீப் பாகஇருந்தாலும் தூக்கில்தொங்க வேண்டி வரும்- மறந்துவிடாதீர் கள்!
ரூபி .! துப்பாக்கி விசையை இழுத்து உன்னை இக்கணமேபிண மாக்க வேண்டும் என்ற வெறி ஏறி வருகிறது என் நெஞ்சில்.
தொலைந்து போ சனியனே- இங்கிருந்து!
என்னை வெளியேறச் சொல்ல எந்தச் சட்டம் உங்களுக்குஅதிகாரம்வழங்கு கிறது? என்னை வெளியேற்ற நீங்கள் நினைத்தால்
பலப் பிரயோகம் செய்தீர்களானால் தான் உண்டு அதாவது உங்கள் துப்பாக்கியைப் பயன்படுத்த வேண்டும் நீங்கள்!
ஏன் நிறுத்தி விட்டாய்?
என்னை தீர்த்துக் கட்டவும் ஒரு காரணத்தைஉரு வாக்க நினைக் கிறாயா?
என் வெற்றியை நான் கொண்டாடி முடித்த பின்னர்தான், அந்தமுயற்சி..! பிரபல கதாநாயகன் டெக்ஸ்வில்லரே என்னிடம் தோற்றுவிட்டான்- மறந்து விடாதீர்கள்!
சும்மா மிரட்டாதே..ரூபி!
பேச்சை இத்தோடு முடித்துக் கொள்வோமா


ஆல்பர்ட் என்னையும் தீர்த்துக் கட்டச்சொல்லி அனுப்பினாரு!
வாய்க்கொழுப்பாக பேசுகிறீர்கள்..!
பேக்கரின் ஆதரவை நம்பி ரொம்ப தான்ஆட்டம் போடுகிறாய் நீ-இப்ப போய்விடாது . காலம்!
தொங்கும் அந்த 'ஸ்டார்' இலச்சினை தொடர்ந்து அங்கே இருக்கவேண்டு மானால்.. அடங்கிப்போங்கள்!
வெறும் மிரட்டல் இல்லை ஷெரீப்- நிஜமான எச்சரிக்கை..!
பூச்சாண்டி காட்டுகிறாயா?
என்னை நேருக்கு நேர் பார்க்கிற 'தில்' ஒரு பயலுக்கும் கிடையாது...! அற்பப் புழுக்கள்...
சட்டென்று அங்கிருந்து அகன்ற ரூபி மதுபானக்கடையை நோக்கி நடந்தான். ஏதோ விஷப்பூச்சியை கண்டு ஒதுங்குவதுபோல் விலகி நகர்ந்தனர் வழியில் நின்ற ஜனங்கள் ..



அங்கே —
அதிர்ஷ்டவசமாக-ஆம்! கட்டை விரலை உராய்ந்துகொண்டு மணிக்கட்டுவரை சென்றிருக்கிறது ஒரு தோட்டா...
யிர்இருக்கிறதா?
இன்னொன்று, துப்பாக்கியை தாக்கியிருக்கிறது: மூன்றாவது தோட்டா தோளைஊடுருவி சென்றிருக்கிறது. அடுத்தது நெற்றியின் வலப்பக்கம் தாக்கியிருக்கிறது.
பதினைந்து நிமிடங்களுக்குப் பின் டாக்டர் வீட்டில்-
நடந்ததை விபரமாக சொல் நான் மூன்று என்று எண்ணியதுதான் நினைவிருக்கிறது-அதன் பிறகு?
அவனுடைய உறை விசேஷ அமைப்புக் கொண்டதாகையால் அப்படியே பிஸ்டலைஇயக்கி முதலில் உன் கையை செயலிழக்கச் செய்தான்.
அடுத்து உன் தலையை குறிவைத்து இரண்டு தோட்டாக்களை அனுப்பியிருக்கிறான் சூரியஒளி அவன்கண்களை கூசச் செய்து கொண்டிருந்ததால் குறி தவறி விட்டது!
ரூபி என்ன ஆனான்?
பேக்கரின் ஆதரவு இருக்கிற தைரியத்தில் துள்ளுகிறான் பயல் தன் வெற்றியை இப்போது கொண்டாடிக் கொண்டிருக்கிறான்!





ம.கோ.ம-7.



அரட்டையடித்தது போதும். இதைக் குடி! உனக்கு உடனடி தேவை இது!
இது என்ன டாக் விஸ்கியா?
வேடிக்கையாக பேசுகிறாயா? இத்தகஷாயம் உன்னுடைய நரம்புகளை சமனப்படுத்தி கவலை யற்று நிம்மதியாக தூங்கப் பண்ணும்!
அந்தக் கிராதகன் என்னை வென்றுவிட்டதாக வெற்றிக் கொண்டாட்டம் போட்டுக் கொண்டிருக்கிறான் அங்கே! நான் நிம்மதியாக இங்கே தூங்குவதா- வெட்கக் கேடு!
வேறென்ன செய்ய உத்தேசம்?
பதில் சொல்லாதே டெக்ஸ்! கேட்டால் மயக்கம்போட்டுவிழுந் வைக்கப்போகிறார்!
சரியாகச் சொன்னாய் .. கார்ஸன்!
நோ... இந்த நிலையில் நீ வெளியேபோகக்கூடாது வில்லர்!
கோபித்துக்கொள்ளாதீர்கள் டாக்டர்! போய்விட் அரைமணி நேரத்தில் திரும்பி வந்து விடுவேன் வெளியே கொஞ்சம் தூய்மையான காற்றை சு சிக்கவும் அந்தப் பன்றியின் கணக்கைத் தீர்க் ஒரு தோட்டாவை அவன் நெஞ்சில் செலுத்த அந்த அவகாசம் போதும்!


உன் நிலைமை புரியாமல்பேசுகிருயா? இப்போதைகது உன்வலது கை எதற்குமே பயன்படாது... தோளும் நல்ல நிலையில் இல்லை!
தெரியும் டாக்டர்! ஆனல் அதிர்ஷ்டவசமாக இடது கையையும் வலது கை போலவேபயன்படுத்த இயலும் எனக்கு!
ஆனலும் இது தற்கொலை முயற்சிக்கு ஒப்பானது வில்லர்!
சரி . உன்னை இனி தடுத்து நிறுத்த முடியாது,போகுமுன் இதையாவது குடித்துவிட்டுப் போ . !
சரியான பைத்தியக்காரன்!
தெம்பூட்டும் பானம்..!அடுத்த அரைமணிநேரத்திற்கு நிற்ப தற்காவதுவலிமை வேண்டாமா?
நன்றி.. டாக்டர்!
இதற்கிடையே—
நான் உடனே ஓடிப் போய்விட வேண்டு மென்கிருயா..? எதற்காக..?
நானுக இருந்தால் இன்னேரம் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கமாட்டேன்!




★ நேருக்கு நேர் துப்பாக்கிச் சண்டையில், ஒரு நபரை வீழ்த்துவது குற்றமல்ல- பத்தொன்பதாம் நூற்றாண்டின் சட்டமிது!


இந்தக்குரல்... இந்தக்குரல்
இருக்க முடியாது!
?
இனி நீ திரும்பலாம்-
மரணத்தை வரவேற்க?
ஆ - டெக்ஸ் வில்லர்-
நீயா!
முழீல்...
முழீல்...
முழீல்...
முழீல்...
ஆ
அதே வேளையில்-
'இரவுக் கழுகோடு'
மோதிக்கொள்வதை எப்பாடு
பட்டேனும் தடுத்து நிறுத்திவிட
வேண்டும்!



இன்னும் அவர்கள் சந்தித்துக்கொண்டிருக்கமாட்டார்கள் என்றே நம்புகிறேன் பேக்கரின் பணத்தைதிருப்பிக்கொடுத்துவிடுமாறு ரூபியை தூண்டி வழிப்படுத்துவேன்!
மாந்திரீகனின் ஜோசி
பலித்துவிடக்கூடாது..
ஆ..காலம்கடந்துவிட்
SALOON
அதேசமயம் சில்வர் பெல்லே நெருங்கி வந்துகொண்டிருந்தான் ஆல்பர்ட்...
வாக்களித்தபடி ஸ்காட் செய்துமுடித்திருந்தான் என்றால் வில்லரின் கதை இன்னேரம் முடிந்திருக்கவேண்டும்!
...சவப்பெட்டியினுள் அவனுடையபிணம் கிடத்தப்படுவதை கண்ணால் கண்டால்தான் என் ஆத்திரம் அடங்கும்!
ஆனால் அங்கே மட்டமான சவப்பெட்டியினுள் கிடத்தப்பட்டிருந்த தபரோ- வேறொருவன்!
இல்லே. ! ஒரு வெள்
மாதிரியான வாழ்க்
தான் விரும்பினர் இ
வெள்ளேயர்களின் பி
திலேயே இவரை பு
விடுங்கள்!
உங்களுடைய குடியிருப்புக்கு கொண்டு போய் அங்கே புதைக்க நினேக்கிருயா.. ?
ஸ்காட்டின் மனேவியா? அவனே பார்க்கக்கூடாதென்று உன்னே நான் தடுக்க முடியாதுதான்!



செவ்விந்திய வழக்கப்படி ஒன்றே ஒன்றைமட்டும் நிறைவேற்று வேன் — பழிக்குப்பழி!
ஆத்திரப்பட்டு தப்புத் தண்டாவாக எதை யாவது செய்து விடாதே பெண்ணே!
எல்லாமே முறைப்படித்தான் செய்து தீரும் ஷெரீப்!- வருகிறேன்
இதற்கிடையே-
அரைமணி நேரத்திற்கு முன் வந்திருந்தால் நீயே நேரில் பார்த்திருக்கலாம்!
அப்படியா சேதி ? மோதலில் ஸ்காட்டா செத்துப்போனுன்?
அந்த ரேஞ்சர் இப்போது டாக்டரின் வீட்டில் படுத்துக்கிடக்கிருர்..!'சவப் பெட்டியினுள்படுத்துக்கிடப்பதைவிட இது தேவலாம் அல்லவா?
நம்ப முடியவில்லையே வில்லருக்கு லேசான காயம்மட்டும்தானு?
ஆமாம் !
ஓ..தெய்வமே- எனக்குத்துணை செய்!


தன் எஜமானனின் சாவுக்கு காரணம் ஆல்பர்ட்தான் என்பதை சட்டென்று நினைவு கூர்ந்த ஸாகுவாரா தன்அருகே யிருந்த நபரிடமிருந்த துப்பாக்கியை பாய்ந்து எடுத்தாள்..
டுமீல்!
இரு கைகளாலும் இறுகப்பற்றிக்கொண் ஆல்பர்ட்டைக் குறிவைத்து சரமாரியாகச் சுட்டாள்...
இது என்ன புதுத்தொல்லை ? அங்கே என்ன விவகாரமோ தெரியவில்லையே!
துப்பாக்கி வெடியோசை!
டுமீல்! டுமீல்!
இதுவரை வெடித்தது போதாது என்று யாரேனும் நினைத்திருக் கக்கூடும்!
ஒருவேளை நம்மை தீர்த்துக்கட்ட பேக்கரின் புது முயற்சியாக இருக்குமோ இது?
சேச்சே... அப்படியெல்லாம் இராது வீணாக அலட்டிக் கொள்ளாதே!
ஓ ..இன்னும் நீ இங்கேதானி ருக்கிறாயா? குட்நைட் சொல் லிக்கொண்டு போகவந்தாயா


அட அப்படியா சேதி?
நான்கொண்டுவந்திருக்கும் செய்தியை கேட்டபின் நீ இனிய கனவுகளோடு நிம்மதியாகதூங்கலாம் டெக்ஸ்!- ஆல்பர்ட் கொல்லப்பட்டுவிட்டான்
யார் அது?
ருபியின் மனைவி! எதற்காகவோ அவள் இங்கே வந்திருக்கிருள். அவன் இறந்து விட்டதை கேள்விப் பட்டதும் காண ஓடோடி வந்தாள்.
கணவனின் மரணத்திற்கு பழிவாங்குவதாக குளுரைத்துவிட்டு வேகமாக வெளியேறிச் சென்ருள். மிச்சத்தை மதுபானக்கடையருகே நின்றிருந்த ஒரு ஆள் சொல்லி அறிந்தேன்- ஆல்பர்ட் வந்து யாருடனே பேசிக்கொண்டு நிற்கையில் அங்கே வந்துசேர்ந்த அந்தபெண் அருகே இருந்தவர்வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து அவனை தீர்த்துக்கட்டியிருக்கிருள்!
.. செவ்வித்திய மரபு இது!


இருக்கலாம்! ஆனால் நம் பிரச்னை ஓய்ந்துவிட்டதாக ஆகாதே! பேக்கர் எப்படி இதை சகித்துக் கொண்டு வாளாவிருப்பார்?
என்னைக்கேட்காதே.. ரோஸ்நானென்னஜோஸ்யக்காரனா?
டாக்டர் கொடுத்த கஷாயம் வேலை செய்யத் தொடங்கி விட்டது... தூக்கம் தூக்கமாக வருகிறது!
விடுங்கள். நிம்மதியாக தூங்கட்டும்!
அங்கே பண்ணையில்-
செத்துப் போனானா? என்ன பிதற்றுகிறாய்? செவ்விந்திய பெண்ணொருத்தி அவனை கொன்று விட்டாளா! இருக்காது-முட்டாளே-பொய் சொல்கிறாய்-நம்பமாட்டேன் நம்பவே மாட்டேன்-
நிஜம்தான்... என்னை நம்புங்கள்!
எதையெதையோ உளறும் பைத்தியக்காரனே ஓடிப் போ இங்கிருந்து கொன்று விடுவேன்... ஜாக்கிரதை!
ஐயோ. எஜமானருக்கு பைத்தியம் பிடித்து விட்டது!
டுமீல்!


ஆல்பர்ட்-என் செல்ல மகன் ஊஹூம்... அவன் சாகவே மாட்டான்...!
அயோக்கிய பதர்களே-நன்ருக கேட்டுக் கொள்ளுங்கள். நான் சொல்வதை-! பேக்கர் வம்சா வழியினருக்கு சாவே கிடையாதடா சண்டாளர்களா-! ஐயோ-தெய்வமே-
இது தெரியாமல் என் மகன் செத்துப் போனுன் என்றுசொல் லிக்கொண்டு என்முன் வந்து நிற்க உனக்கு என்னதைரியமடா?
ஹூம் பெரியவருக்கு புத்தி பேதலித்து விட்டது!
நான்போய் டாக்டரை கூட்டிவருகிறேன்!
தொலைந்து போ ! பேக்கர் வம்சா வழியினருக்கு இறப்பே கிடையாது ஹாஹ்ற...ஹா ஹாஆஆ...!
ஐயோ பண்ணை மாளிகை தீப்பற் றிக்கொண்டு விட்டது!
தொலைந்தது !
ரெயின்போ பண்ணைக்கு முடிவுகாலம் வந்து விட்டது!






# படித்து விட்டீர்களா?

# ஜூனியர் லயன்

# &

# மினி லயன்

மினி லயன்


இரட்டை வேட்டையரின் "மினி" சாகஸம்!
திருடனுக்கு திருடன்
பிரிட்டிஷ் டெலிவிஷனில் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது-'வேட்டையர்கள்' என்னும் பிரபல தொடர் நிகழ்ச்சி-
பயங்கர துப்பாக்கிச் சண்டை!
விடாதீர்கள்- சுட்டுத் தள்ளுங்கள்!



கட்டுக் காவல் மிகுந்த கிரீவில்லி சிறை யினுள் இருந்த பயங்கர குற்றவாளி களும் அந்த டி. வி. நிகழ்ச்சியை பார்த்துஇரசித்துக்கொண்டிருந்தனர்.
எதிர் அணியினர் என்ற போதிலும், பாராட்டாமல் இருக்க முடியவில்லே!
நிஜமல்ல- நடிப்பு! கேமரா தந்திரம்- வேறென்ன?
'வேட்டையர்கள்' நிகழ்ச்சியின் கதாநாயகர் களான ஜார்ஜூம் டிரேக்கும் உண்மையில் பிரிட்டிஷ் உளவுப் பிரிவான S-I-6ன் உளவா ளிகளாவர். இந்த உண்மையை மறைக்க நடிப்புத் தொழில் ஒரு போர்வை.
அதோ-எதிர்பார்த் தபடி சரியானநேரத் திற்கு வந்து விட்- டார்கள்!
உன் காரோட்டும் திறமையை முழுமை யாக வெளிப்படுத்து பார்க்கலாம்.
ஹேக்!
நேராக நம்மீது மோத வருகிறுன்-ஒடித்துத் திருப்பு!


மிரட்சியில் அவர்களாகவே போய் மோதிக்கொண்டு விட்டார்கள்!
ஆஆ-!
நமக்கு வேலை சுலபமாகி விட்டது!
ஒரு நூலேணி இருக்கிறது! உடனே கர்னலோடு தொடர்பு கொண்டு மேல் விபரம் என்னவென்று கேள்!
காரில் வந்த கூலிகள், கிரீவில்லி சிறையை தகர்த்து உட்புகும் நோக்கமுடையவர்கள் என்ற ஒரு விபரம் மட்டுமே எங்களுக்குத் தெரியும்-இப்போது அவர்களுடைய இடத்தில் நாங்கள்-அப்புறம்?
கர்னல் ஹண்ட்டர் S-I.6ன் தலைவர்-
உளவுபார்த்த குற்றத்திற்காக 25 ஆண்டு கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது பிரீவ்ஸ்டருக்கு. ஆனால் விசாரணையில் சதிவேலையின் முழுப் பரிமாணமும் வெளிப்படவில்லை. சிறையிலிருந்து தப்ப வெளிநபர்களின் உதவியை அவன் நாடியிருப்பதாக வந்திருக்கும் தகவல் நமக்கு ஒரு புதிய வாய்ப்பை கொடுத்திருக்கிறது. உங்களுடைய நடிப்புத் திறனை பயன்படுத்தி அவனிடமிருந்து மேற்கொண்டு இரகசியங்களை கறக்கவும்!
ஜமாய்த்து விடுகிறோம்-பாஸ்!
சில நிமிடங்களுக்குப் பின்-
ஏறிவாருங்கள்-மிஸ்டர் பிரீவ்ஸ்டர்-வெளியே சுதந்திரக் காற்றை சுவாசிக்க!
வேடிக்கைப் பேச்சு வேண்டாம்-வெளியே வந்ததும் பேசிய கூலியை பெற்றுக் கொண்டு, நான் சொல்கிறபடி செய்தால் போதும்!



ஓ.கே - அடுத்து என்ன செய்யவேண்டும் நாங்கள்?
நேராக நகரின் கீழ்க் கோடிக்கு செல்லவேண்டும்-மேற்கொண்டு செய்யவேண்டியதை அங்கே சொல்வேன்! வேறு கேள்வி கேட்டு எரிச்சல் மூட்டாதீர்கள்-நான் ரொம்பபொல்லாதவன்!
பின்னர்-
இப்படியே கொல்லைபுறசாலைகளிலேயே சுற்றிக் கொண்டிருக்க வேண்டியது தானா?
மூடுவாயை! கேள்வி கேட்காதே-அந்த கட்டுமான வேலை நடக்கும் பகுதிக்குள் போ!
என் கும்பலின் இரகசிய தலைமையகம் அரைகுறையாக கட்டப்பட்டு நிற்கும் இந்தக் கட்டிடத்தினுள் இயங்கி வருகிற உண்மை அந்த S-I.6ன் உளவுப் பிரிவு மடையர்களுக்குத் தெரியாது. இங்கே உள்ள என் சகாக்கள் நான் உடனே பிரிட்டனை விட்டு பறந்து வெளியேற வகை செய்வார்கள்!
ஆகா-என்ன மதியூகம்! எப்போதுமே கட்டிமுடிக்கப்படாத கட்டிடம்!
ஸாரி பிரீவ்ஸ்டர்! உனக்கு நேரம் சரியில்லை என்று நினைக்கிறேன் - நாங்கள் S-I-6 ஐச் சேர்ந்த உளவாளிகள்!
எ-ன்-ன?
தெரியவேண்டிய உண்மை உன் வாயிலிருந்தே வெளிப்பட்டு விட்டது-இனியும் நாம் இங்கே சுற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்பதில்லை-
டுமீல்!
அவர்களை தப்ப விடாதே-சுடு!
சக்கரத்தை குறிவை! மிஸ்டர் பிரீவ்ஸ்டரும் காரினுள் இருப்பதை மறந்து விடாதே!


S-1.6ன் உளவாளிகள் அவர்கள் - சுட்டு வீழ்த்துங்கள்!
இதோ - தீர்த்துக் கட்டிவிடுகிறோம்!
ஜார்ஜ்-படு-!
ஏதோ செய்ய நினைக் கிறான் - சிமெண்ட் கல்லை இயந்திரத்தின் அருகே ஓடுகிறான்-
அஹ்-
அஹ்-
அருமையான யுக்தி!
ஆ-வ்!
மயிரிழை தான்!
பிரீவ்ஸ்டர் எங்கே தொலைந்தான்?
அந்தக் கிரேன்- குனி-!


அந்த இரும்பு உத்தரத்தை நம்மீது இறக்கி நசுக்கிக் கொல்ல முயற்சிக்கிறான்!
அதைத் தடுக்க வேண்டுமானல்-
அவனை நேராக குறி வைப்பதைத் தவிர வேறுவழியில்லை!
ஆஆ-!
அரைகுறையாக நின்ற கட்டிடத்தினுள், எதிர்பார்த்த இரகசியங்கள் அனைத்தும் வெளிப்பட்டன-
பீரோ நிறைய ஏகப்பட் குறிப்பேடுகள் - பெயர் விலாசம், இரகசியப் பரிபாஷை, மற்றும் பிரி டனிலுள்ள கூட்டாளிக பற்றிய விபரங்கள்-
பிரீவ்ஸ்டர் மட்டும் வாயை திறந்து இந்த விபரங்களை கக்கியிருந்தால் உயிர் மிஞ்சியிருக்கும்! ஹ¬ம் ஆறுலென்ன-25 ஆண்டு கடுங்காவல் தண்டனையை அனுபவிக்க வேண்டிய கஷ்டம் இனி இல்லை அவனுக்கு!
முற்றும்


இரும்பு ஹீரோவின் சூப்பர் சாகஸம்!
வெனிஸ் நகரில் ஆர்ச்சி
இதமான சூரிய ஒளியில், வெனிஸ் நகரின் பிரதான கால்வாயில் அசைந்தாடி நகர்ந்து கொண்டிருந்த அந்தப் படகில் தாம்சன், விக்டர் மற்றும் அவர்களுடைய அதிசய ரோபோவான ஆர்ச்சியும் பயணம் செய்து கொண்டிருந்தனர் - ஒரு பெட்டி நிறைய தங்கக்கட்டிகளோடு...!
ஆர்ச்சியின் துணை மட்டும் இல்லாவிடில் இப்படி தங்கத்தை இடம் விட்டு இடம் பத்திரமாக எடுத்துச் சென்று ஒப்படைக்கும் பணிக்காக தினமும் கணிசமான ஊதியம் பாங்கிலிருந்து நமக்கு கிடைத்து வருமா... சொல்!
வேலையா இது-உல்லாசப் பயணம் மாதிரி இருக்கிறது! சொல்லப் போனால் இந்த சுகானுபவத்துக்கு நாம்தான் பாங்கிற்கு கட்டணம் செலுத்த வேண்டும்.



ஹெ! ஹெ! ஹெ! நண்பர்களின் கூற்று நூற்றுக்கு நூறு உண்மை!
கரும்பு தின்னக் கூலி ! தங்கத்தை பாதுகாக்கும் பொறுப்பை ஆர்ச்சியிடம் விட்டுவிட்டு நாம் ஜாலியாக பயணத்தை அனுபவிக்கலாம்!
ARCH
ஆர்ச்சியின் பலம் ஒரு படைப்பிரிவின் பலத்துக்கு இணையானது...!
இதற்கிடையே, அந்தக் கால்வாயை பார்த்தாற் போலிருந்த ஒரு பால்கனியில் ..
நாம் எதிர்பார்த்த குழு வந்து கொண்டிருக்கிறது லியோ சதித் திட்டத்தை செயல்படுத்தத் தொடங்குவோமா...?
ஏற்பாடுகள் அனைத்தும் தயார் ப்ராண்டா ! நூதன கொள்ளையர்கள் என்று சரித்திரத்தில் நாம் இடம்பெறப் போவது உறுதி!


ஓரிரு நிமிடங்களுக்குப் பின், விபரீதம் ஆரம்பமானது...
என்ன இது... புயல் காற்று- திடீரென்று
காற்று ஏன் இப்படி ஐஸாக குளிருகிறது-
ஊஊஷ்!


ஆர்ச்சி தடுமாறியது...
ஹாவ்... குளிர்- கு...ளி...ர்!
என்ன விபரீதமோ இது-விளங்க. வில்லையே!



ஐயையோ... தண்ணீர் உறைந்து விட்டதே!
உடனே கரை யேறி விடுவது தான் நல்லது.
ஆமாம்... அப்படித் தான்-பனிப் பாளத் தை உடைத்து வழி ஏற்படுத்து!
கீழே இறங்கி முயன்று பார் ஆர்ச்சி..
ஆர்ச்சி பனிப் பாளத்தின்மீது காலை வைத்ததும் அந்தோ-
ஆர்ச்சி உள்ளே புதைந்து விட்டதே! இத்தனை. சீக்கிரமாக எப்படி பனி உருகியதோ?
ஐயோ !
ஹாவ்- ஐஸ் நொறுங்குகிறது!



ஆர்ச்சி அப்படியே உறைந்து விட்டதே- டிரான்ஸ்மீட்ட ரால்கூட அதை தூண்டிட முடியவில்லையே!
விடுவிக்க முயற்சிப்போம்- வா!



புயல் ஒருவாறு அடங்கியதும்...
ம்... கிளப்பு-ரோபோ இயக்கமிழந்து விட்டது... வெற்றி நமதே!
சந்தேக மில்லாமல்



விரைவில்-
கையை உயர்த்துங்கள்...! ஏதாவது சேட்டை செய்ய முயன்றீர்களோ தொலைத்துவிடுவேன்-
அவன் சொல்கிறபடி செய், விக்டர்
தங்கம் இருந்த பெட்டி இடம் மாறியது—
ஜாக்கிரதை!- ஒதுங்கியே நில்லுங்கள்!
நீ...யார்- ஏன்...


அப்படி சுலபமாக தப்பியோடிவிட அனுமதியோம்!
இதோ கிளம்பிவிட்டோம்- இன்னுமா சந்தேகம் உனக்கு?
தாம்சன் தன் டிரான்ஸ்மிட்டரை இயக்கி ஆர்ச்சியின் உள்ளேயிருந்த ஹிட்டரை தூண்டினுன்
சே... நானெரு முட்டாள்- அப்போதே இதை செய்தி ருக்கலாம்! போச்சு .. என் முட்டாள்தனத்தினல் ஐம்பதினுயிரம் பவுண்டுகள் கொள்ளை போய்விட்டன....
ஹா! புத்துணர்ச்சி வந்துவிட்டது ஆர்ச்சிக்கு!


ஆர்ச்சி விடுபட்டு எழுந்ததும்...
வேகமாக இழுத்துக்கொண்டு ஓடு-அந்த அயோக்கர்களிடமிருந்து தங்கத்தை எப்படியேனும் மீட்டாக வேண்டும்!
ஆர்ச்சி செயல்படாத மறுகணமே தோழர்கள் அம்பேல்!
அந்த கொள்ளையர்கள் முன்னேற்பாடாக அந்தப் பனிப் படகு இங்கே வந்திருப்பதை பார்த்தால் இந்த அசம்பாவிதம் இயற்கையாக ஏற்பட்டதல்ல என்று தோன்றுகிறது!


அந்த பனிப்படகு ஏற்படுத்திச் சென்ற தடத்தை பின்பற்றி உச்ச வேகத்தில் ஓடு ஆர்ச்சி!
ஆர்ச்சி ரெடி! ஏலேலோ ஐலஸா!


கண்ணிமைக்கும் பொழுதில் நமக்கு முட்டாள் பட்டம் கட்டி தங்கத்தோடு ஓடி மறைந்த அந்த அயோக்கியர்களை விரட்டிப் பிடித்து...
... கம்பி எண்ண வைக்க வேண்டும்!
அங்கே பனிப்படகில்...
துரத்திக் கொண்டு வருகிறார்கள்...
அந்த ரோபோ பெரிய சூரன்...! நம் தட்ப-வெட்ப கருவிக்கு இன்னும் கொஞ்சம் வேலை கொடுப்போம்!
222


சீதக் கதிர்களை பாய்ச்சி தண்ணீரை உறைய வைத்தோம்-இப்போது, வெப்பக் கதிர்களை பாய்ச்சி வேடிக்கை பண்ணுவோம்!
மறுகணம்-
உஷார். ஐஸ் உருகுகிறது!
ஐயோ... ஆர்ச்சி உள்ளே இறங்கி விட்டது!
தொபுக்!


ஆர்ச்சியின் பாதங்கள் தரையை தொட்டன....
படகு தடுமாறி கவிழ்ந்து விடாமல் பிடித்து நிறுத்து ஆர்ச்சி!
ஆங்... அப்படித்தான்-
அந்த அயோக்கியர்களால் எப்படியோ கால நிலையை கட்டுப்படுத்த முடிகிறது என்பது ஊர்ஜிதமாகிவிட்டது நாமும் சளைத்தவர்களல்ல என்று அவர்களுக்கு உணர்த்துவோம்...! இழுத்துக் கொண்டு நட ஆர்ச்சி!
சற்று நேரம் கழித்து...
அவர்கள் கண்ணில் படவே காணோமே!
பனிப்படகின்எஞ்ஜினிலிருந்து வழிந்த எண்ணெய் படலம் அவர்கள் சென்ற வழியை தெரிந்துகொள்ள உதவுகிறது!


கால்வாய் நகரான வெனிஸ் நகரில் புது விதமான கண்காட்சி-
அங்கே பாருங்கள்... வேடிக்கையை!
விந்தையான காட்சிதான்!
எண்ணெய் படலம் இங்கே முடிவடைகிறது... தாம்சன்!
அடுத்து என்ன செய்வது? கரையேறி ஆராயலாம்!


இதென்னடா புதுக் கூத்து!
பிடி நழுவி ஆர்ச்சி சரிகிறது ... பார்!
'க்ளிக்' என்ற ஓர் ஓசை எழுந்தது-
அங்கே பார் கதவு விலகுவதை! எப்படியோ சாதித்துவிட்டானே!
இரகசிய வழி! அதன் சுவிட்ச் இந்தக் கம்பத்தில் இருக்கக்கூடும்!



தலை விளக்கை எரிய விடு... ஆர்ச்சி
அந்த பனிப்படகு இந்த குகைப் பாதை வழியே சென்று மறைந்திருக்கக் கூடும்!
அதோ...அங்கே நிற்கிறது பார்!
227



மேலே இருந்த தளத்தில்-
விளக்கொளி! நம் மறைவிடத்தை எப்படியோ கண்டு பிடித்துவிட்டார்கள்.
படகு கீழே நிற்கிறது-அதை கைப்பற்றிவிட்டார்கள் என்ருல்...
கவலைப்படாதே... நம்மை தடுத்து நிறுத்த யாராலுமே முடியாது! ஆபத்து நமக்கில்லை- அந்த ரோபோவுக்கும் அதன் சகாக்களுக்கும்தான்!- இந்த உண்மையை விரைவிலேயே தெரிந்து கொள்வார்கள்...



ரீகோ... சுட்டுத் தள்ளு அவர்களை! வீரம் இருக்கிற அளவுக்கு விவேகம் இல்லை அவர்களிடம்-அசட்டுத் துணிச்சல் பேர்வழிகள்!
போக்கிரி கும்பல் அதோ-ஆர்ச்சி மடக்கப்போகிறது!
229


முன்னேறி வரும் டாங்க்கை,
பட்டாணிக் கடலையை எறிந்து
நிறுத்த முயற்சிக்கும் அறிவிலி
கள்! நேரடி மோதலுக்கு அவர்கள்
தயார் என்ருல் ஆர்ச்சிக்கும்
சம்மதமே!
திடீரென்று ஒரு விசை 'கிர்ர்...' என்ற ஓசையோடு
இயங்கியது .. அதையடுத்து-
இனி எங்களை
நெருங்க முடியாது!
ஒரு இரும்புக் கிராதி
கீழே இறங்குகிறது...
தாம்சன்!


ப்ராண்டா என் பெயர் - இனி ஆயுளுக்கும் இந்தப் பெயர் உங்களுடைய நினைவில் இருக்கும் ..
ஹா... ஹ... ஹா!
டிரான்ஸ்மிட்டரை துரிதமாக இயக்கினான் தாம்சன்!
ஆங்... அப்படித்தான்- சீக்கிரம்! முடியுமானால் அவர்களுக்கு ஏதாவது பரிசு கொடுத்து அனுப்ப நினைக்கிறேன்!


சைத்தானே!
ஆகா.... கச்சிதமாக அடித்து விட்டாய் .. ஆர்ச்சி! கொடுத்தது போதாது ..
ப்ரபெல்லர் கெட்டுவிட்டது- நெருங்கி விட்டார்கள்!
உன் தட்ப-வெப்பக் கருவியை பிரயோகம் செய்!


ஒரு கம்பத்தை பிடுங்கி எடுத்தது ஆர்ச்சி...
உயரம் தாண்டும் கோலாக அதை பயன்படுத்தி நேராக அந்தப் படகில் போய் இறங்கப் போகிறாயா... பலே!


ஆனால், எதிரிகள் முந்திக் கொண்டுவிட்டனர்...
அப்படியே உறைந்து போ- உலோக பிண்டமே!
தொலைந்தது சனியன்!


மறுகணம்-
நம்ப முடியவில்லையே! கம்பத்தோடு ஆர்ச்சி அப்படியே ஐஸாக உறைந்துவிட்டதே!
ப்ராண்டா மீண்டும் கருவியில் ஏதோ விஷமம் செய்தான்.
கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பனிமூட்டத்தையும் திரையாக உருவாக்கி விட்டேன்.
சரியான எத்துவேலை!
ஆர்ச்சியின் உள்ளே இருக்கும் ஹீட்டரை தூண்ட வேண்டும்- உடனே...!



முயற்சி பலித்து விட்டது...! ஓடி வா- ஆர்ச்சி !
ஐஸ் பாளங்கள் ஆர்ச்சியின் எடையை தாங்குமா?
அந்த போக்கிரிகள் அதிக தூரம் சென்றிருக்கமுடியாது -கண்ணில் படும் முதல் படகை வசப்படுத்தி துரத்திச் செல்வோம்!


இந்த வழியாகத்தான் சென்றது அந்தப் படகு
இன்னும் காலம் கடந்து விடவில்லை!
ஆனால்-திடீரென்று எதிர்பட்டனர் போலீஸார்...
பியாவான்னி பாங்குக்கு சொந்தமான தங்கத்தோடு நீங்கள் தலைமறைவாகிவிட்ட குற்றத்திற்காக கைது செய்ய வாரண்ட்டோடு வந்திருக்கிறோம்...
ஆ...தோ—


உங்களை கைது செய்கிறேன்-
தங்கத்தை நாங்கள் திருடவில்லை, இன்ஸ்பெக்டர். அதை பறித்தெடுத்துக் கொண்ட போக்கிரிகளை விரட்டிக்கொண்டுதான் இப்போது நாங்கள் விரைந்து கொண்டிருக்கிறோம்-ஆவ்! டிரான்ஸ்மிட்டரை கெடுத்து விட்டீர்களே!
ஹோய்! ஆர்ச்சி ரௌடிக்கு ரௌடி! தெரியுமா?
டிரான்ஸ்மிட்டர் கெட்டுப் போனதால் ஆர்ச்சி தறிகெட்டு வெறியாட்டம் போடத் தொடங்கியது-
டிரான்ஸ்மிட்டரை சரிசெய்ய முடியவில்லை. அரெஸ்ட் செய்ய முடியாதவாறு முரண்படுகிறது ஆர்ச்சி தப்பு போலீஸ்காரர்கள் பேரில்தான்!
நிறுத்து- எச்சரிக்கிறேன் உன்னை!



ஒரு போலீஸ்காரரை பிடித்துக் கொண்டது ஆர்ச்சி...
ஆர்ச்சி எச்சரிக்கிறது உன்னை-
நிஜமாகவே வம்பில் மாட்டிக்கொண்டு விட்டோம்-ஆர்ச்சி நிதானத்தில் இல்லை!
டிரான்ஸ்மிட்டரை சரி செய்ய பரபரத்தான்...
அங்கே பார் அவன் போடும் வெறியாட்டத்தை-ஏதாவது செய்து அவனை த்டுத்து நிறுத்து.
ஏதாவது செய்து என்றால் . என்ன செய்வதாம்?
ஆர்ச்சி மீதா கை வைக்கிறீர்கள்- தொலைத்துவிடுவேன்!



டிரான்ஸ்மிட்டர் சீர் செய்யப்பட்டுவிட்டபோது ஏற்கனவே நிலைமை படுமோசமாகிவிட்டிருந்தது ..
ஆர்ச்சியின் அடாவடித் தனத்தினால் சிக்கலில் மாட்டிக்கொண்டு .. விடப் போகிறோம்
உதவி உதவி- ரோபோவுக்கு மறை கழன்று விட்டது!



ஆர்ச்சி...ஓடி வா- போய்விடலாம் இங்கிருந்து!
ஓடிப் போய்விட்டால் மட்டும் பழி நம்மீது விழாமல் போகுமா என்ன?


இன்னும் வேகமாக செலுத்து... ஆர்ச்சி!
சில மணி நேரம் கழித்து
நல்லவேளை-யாரும் நம்மை பின்தொடர்ந்து வரக் காணோம்!
இப்போதைக்கு நாம் தப்பி விட்டது வாஸ்தவம்தான். ஆனால் சிறைக் கம்பிகளின் பின்னே செல்வதை தவிர்க்க வேண்டுமானால் முதலில் அந்த தங்கத்தை மீட்க வேண்டும்!
ப்ராண்டோவும் அவனுடைய சகாக்களும் இப்போது எங்கே இருப்பார்களோ? ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் - இந்த ஒரு கொள்ளையோடு திருப்தியடைந்து ஓய்ந்து விடக்கூடிய கூட்டமல்ல அது! எப்படியாவது அவர்களை பிடித்து அந்த தட்ப-வெப்ப கருவியை நொறுக்க வேண்டும்...


தாம்சன் யூகித்ததைவிட மிக அண்மையில்தான் இருந்தது அந்த திருட்டுக் கும்பல்...
அடுத்த இலக்கை தேர்ந்தெடுக்க வேண்டும் நாம் ..
ஒரு வழியாக, பறித்தெடுத்து வந்த தங்கத்தை பத்திரமாக மறைத்து வைத்தாயிற்று! ஆனாலும் அந்த ரோபோ எமகாதக பேர்வழிதான்!
அதோ... அந்த ரோபோ-
திரும்பத்திரும்ப தொல்லை கொடுக்கிறார்களே-தக்கவாறு பாடம் புகட்டினால்தான் நம் வழியில் குறுக்கிட துணிய மாட்டார்கள்...



இப்போது பார்... அவர்கள் என்ன பாடுபடுகிருர்கள் என்று-
மறுகணம்,...
சூருவளி! எப்படி திடீரென்று?
ஹே .. என்ன இது·


இங்கே எப்படி? இம்மாதிரி சுழல் காற்று இங்கே வீசியதாக சரித்திரமே இல்லையே!
சுழல் காற்று- மேலை நாடு களில்தான் இது சகஜம்!
எதற்கும் ஒரு முதல் தடவை உள்ளது என்பதை நினைவூட்டுகிறது ஆர்ச்சி!
புரிந்துவிட்டது...! அதோ... அந்த ஹெலிகாப்டரிலிருந்து கொண்டு ப்ராண்டோ தன் தட்ப-வெப்ப கருவியை பிரயோகிக்கிறான்!
243


இப்படியொரு விபரீதத்தை அவர்கள் கற்பனையில்கூட எண்ணியிருக்க மாட்டார்கள்.
சிறிது நேரத்திற்கு இங்கேயே வட்டமடி, லியோ! அவர்களை மூழ்கடித்துவிட்டு செல்லலாம்!


நல்ல யுக்தி...
இரும்புத் தலையனுக்கு அவ்வப்போது அருமையான யோசனைகள் வரத்தான் செய்கின்றன!
அந்த மரத்தை பற்றிக்கொண்டுவிடு ஆர்ச்சி...
படகு படும் பாட்டைப் பார்...
இரும்புத் தலையனல்ல- பராக்கிரம ஆர்ச்சி நான்!


சுழல் காற்று ஓய்ந்துவிட்டது .. ஆர்ச்சியும் தோழர்களும் பத்திரமான இடத்தை நோக்கி ஓடத் தொடங்கினர் ..
தப்பியோடிவிட அனுமதியேன்! இடி, மின்னல்களை உருவாக்கப்போகிறேன்!
ஐயோ .. படுபயங்கரம்!
மீண்டும் ஒரு முறை மின்னல் தாக்குமுன்—
ஆர்ச்சியின் கோபத்தைக் கிளறுகிருர்கள்- ஆர்ச்சி பதிலடி கொடுக்கப் போகிறது!
பயல் என்ன செய்யப் போகிருன்?



மறுகணம் கவணிலிருந்து புறப்படும் கல்லைப் போல துடுப்பு பாய்ந்தது-
பலே பிரமாதம்!
குறி-கச்சிதம்! பழி தீர்த்துக் கொண்டாயிற்று!



தரையிறங்குவதை தவிர வேறு வழியில்லை அவர்களுக்கு இறங்கி ஓடிப் போகுமுன், அவர்களை பிடித்தால்தான் உண்டு.
செயற்கையாக உருவாக்கப்பட்ட சுழல்காற்று இயற்கை காற்றை வலுவடையச் செய்திருந்தது ..
காற்றாலையின் மறுபக்கம் தரையிறங்கியிருக்கிறது ஹெலிகாப்டர் ..


அசுர கதியில் இயங்கிய அந்த காற்றாலை எந்த வினாடியும் விபரீதத்திற்கு வித்திடக்கூடும் என்ற நிலை— காற்றாலையை கட்டுக்குள் கொண்டுவர வேண்டிய நெருக்கடியான சூழலில் விரைந்து செயல்பட்டது ஆர்ச்சி.
ஆர்ச்சியின் பளு கூட அந்த இறக்கைகளின் சுழல் வேகத்தை மட்டுப்படுத்தவில்லை பார்!


ஆர்ச்சியை கட்டுப்படுத்தும் டிரான்ஸ்மிட்டரை இயக்கினான் தாம்சன் ..
கையிலிருக்கும் கயிற்றினால் அந்த இறக்கையை கட்டு ஆர்ச்சி!
பலனிருக்குமா . ?
ஹாய்! ராட்சஸ ராட்டிணத்தில் சுற்றுவதை போல— நல்ல வேடிக்கை!
ஆங் - அப்படித் தான் !
அற்புதமான சர்க்கஸ் வேலை!


தரையில் கால் பட்டதும் விரைந்து செயல்பட்டது ஆர்ச்சி-
இறுக்கமாக கட்டு !
ஐயோ தீப்பற்றிக் கொண்டுவிட்டது- உள்ளே!
பாய்ந்தோடியது ஆர்ச்சி
அப்பப்பா என்ன சக்தி- என்ன வேகம்!
ஆர்ச்சி இருக்கப் பயமேன்?


சலோர!
ஆர்ச்சி இல்லேயே
காற்ருலே சாம்பல
கிப் போயிருக்கும்!


எப்படி நன்றி
சொல்வதென்றே
தெரியவில்லே!
நன்றிக் கடனுக கயவர்
களே பின்தொடர வாகன
வசதி செய்துகொடுத்
தார்கள் என்ருல் நன்ருக
இருக்கும்!
ARCH


சில நிமிடங்களுக்குப் பின்-
ஹெலிகாப்டர் நிற்கும் இடத்துக்கு வண்டியை விடு ஆர்ச்சி ..
சென்று வாருங்கள் !
ரசிகர்களிடம் ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசக்கூட அவகாசமில்லை ஆர்ச்சிக்கு!
இந்த தலைக்கனம் தானே வேண்டா-மென்கிறது!
யாரையும் காணோமே-
ஹெலிகாப்டரை அப்படியே விட்டு விட்டு ஏதாவது ஒரு காரில் அவர் கள் ஓடிப் போயி ருக்க வேண்டும்.



இது என்ன புத்தகம்? குளிர் கால விளையாட்டு அரங்க மான வியூலா நகருக்கு செல்லும் பயண குறிப்பேடு!
ப்ராண்டா குழு ஒருவேளை தங்களுடைய அடுத்த கொள்ளையை அங்கே நடத்த திட்டமிட்டிருக்கக் கூடுமோ? பறிகொடுத்த தங்கத்தை மீட்டு, கய்வர் களை சிறையினுள் அடைக் கும்வரை நாம் ஓயப் போவதில்லை - எனவே, நாம் உடனே வியூலாவுக்கு பயணம் செய்வோம்.
நீண்ட பயணத்திற்குப் பின்
வியூலாவை நெருங்கி விட்டோம்.
குளிர்கால விளையாட்டு சாதனங்கள் சிலவற்றை முதலில் வாங்கிக் கொண்டு விடலாம்.


இரண்டு தினங்களுக்குப் பின் -
ஆர்ச்சிக்கு மட்டும் குளிர் உடுப்பு தேவையிருக்காது- ஹி! ஹி! ஹி!
அதோ தெரிகிறதே-அது தான் வியூலா! ஆனால் இங்கே ப்ராண்டா குழுவுக்கு என்னவேலை இருக்க முடியுமோ....தெரியவில்லை!
சோழியன் குடுமி சும்மா ஆடாது!
சரிவின் மேலே இருந்த ஹோட்டல் ஒன்றில்—
இங்கே நிறைய தங்கம் இருக்கிறது என்று சொல்கிறாய்?
ஆமாம்... சுவிட்ஸர்லாந்துக்கு கோவேறு கழுதைகள் மூலம் கொண்டு செல்லப்படவிருப்பதாக தகவல்!


பெரும்பாலான உல்லாச பயணிகள் இன்று புறப்பட்டு விடுகிறார்கள். நமக்கு உதவ இன்னும் சிலரை ஏற்பாடு செய்திருக்கிறேன் அவர்கள் துணையோடு, இங்கே பின்தங்கிவிட்டிருப்பவர்களை சுலபமாக சமாளித்து விடலாம்.
திடீரென்று-
அங்கே பார்... ரோபோவும் அதன் தோழர்களும்! இங்கேயும் பின்தொடர்ந்து வந்துவிட்டார்களே!
அவர்களுக்கு நேரம் சரியில்லை என்று நினைக்கிறேன்! நம்மிடம் வாலாட்டுகிறார்கள். தட்ப-வெப்ப கருவியை பயன்படுத்தி இம்முறை ஒரேயடியாக அவர்களை ஒழித்துக்கட்டிவிடப் போகிறேன்!



கிரீச்!
ஹாங்... லிப்ட் பாதி வழியில் நின்று போனதே - இதுவும் ப்ராண்டோவின் வேலைதானோ?
ARCHIE
ஜாக்கிரதை... அடுத்து என்ன விபரீதம் நிகழுமோ?



தட்ப-வெப்ப கருவியால் பனி முகட்டை நோக்கி குறி வைத்தான் ப்ராண்டோ...
நம்மை பின்தொடர துணிந் சிறுபிள்ளைத்தனமான செயலு உயிரையே விலையாக கொடுக்க போகிறார்கள்-இன்னும் ஒரிரு நிமிடங்களில்...?
அதீத வெப்பக் கதிர் வீச்சினால் உருகிய பனிப் பாறைகள் சரியத் தொடங்கின...


பனிப்பாறை சரிவும் வெள்ளப் பெருக்கமும்-


அந்தக் கம்பியை பற்றி, கரையேற முயற்சி செய் ஆர்ச்சி.
நாம் ஆர்ச்சியை இறுக பற்றிக் கொண்டு விடுவோம்!
259



தன் முழு ஆற்றலையும் வெளிப்படுத்தி பிரச்னையை சமாளிக்க முயன்றது ஆர்ச்சி—
தோழர்கள் அஞ்சவேண்டாம்!
வளவளவென்று பேசிக் கொண்டிராமல் காரியத்தை கவனி!
இதற்கிடையே, ப்ராண்டா குழு வேறொரு காரியத்தில் மும்முரமாக ஈடுபட்டிருந்தது-
ம்... சீக்கிரம்-தங்கப் பாளங்களை எங்கள் பையினுள் போடுங்கள்
மேதாவித்தனமாக எதையாவது செய்ய நினைத்தீர்களோ என் துப்பாக்கிதான் பேசும்... ஜாக்கிரதை!



மோசடி கும்பலை சேர்ந்த மற்ற ஆசாமிகள் ஹெலிகாப்டரில் வந்தடைந்தனர்.
தங்கம் அடங்கிய பையை கொக்கியில் மாட்டி மேலே அனுப்பு...


அருகே..
இன்னும் கொஞ்சம் வேகமாக முன்னேற முயற்சி செய் ஆர்ச்சி.
தப்பியோட ஆயத்தமாகிறார்கள்-எதையோ கொள்ளையடித்துக் கொண்டு!


ஹெலிகாப்டர் விலகிச் சென்று விட்டது ..
இனி, தங்கம் பத்திரமாக நம் மறைவிடத்துக்கு போய்ச் சேர்ந்துவிடும்... நாமும் கிளம்புவோமா?
எல்லாமே உன் திட்டப்படி கச்சிதமாக நிறைவேறி விட்டது. என்ன அபார மூளை உனக்கு!
அதோ... போய் விட்டார்கள்! நாம் சற்று தாமதித்து விட்டோம்.
ஆர்ச்சி இருக்கிறது- விரட்டிப் பிடிக்க!
இந்த சறுக்கு வண்டியை வேகமாக தள்ளிக் கொண்டு வா... ஆர்ச்சி!
இதோ— புறப்பட்டு விட்டது ஆர்ச்சி எக்ஸ்பிரஸ்!


ம்ம் - இன்னும்
கொஞ்சம்
வேகமாக...!
இம்முறையும்
அந்த இரும்பு
சைத்தான்தான்!
பொறு... அவர்
களுக்கு ஒரு வழி
பண்ணுகிறேன்!


நெருங்கிவிட்டோம் .. அவர்களை!
விரைவிலேயே பிடித்துவிடலாம்!
பராண்டா... இடைவெளி வேகமாக குறைந்து வருகிறது!
'பிசாசுப் பிளவு' நோக்கி அவர்களை இழுத்துச் செல்கிறேன்... பனிச்சறுக்கு கட்டைகளின் உதவியால நாம் பிளவை தாண்டிவிட முடியும்... ஆனால் அவர்கள் சரிவினுள் விழுந்து சாகப் போகிறார்கள்!


ப்ராண்டா குழுவினரை இதோ நெருங்கிவிட் டோம்-அவர்கள் நம் மிடம் அகப்பட்டுக் கொள்வது நிச்சயம்!
ப்ராண்டாவின் சூழ்ச்சியை அவர்கள் அறிய மாட்டார்கள்.



அகன்ற பிளவை எட்டியது கொள்ளையர் கூட்டம்...
ம்ம் .. பாய்ந்து தாண்டுங்கள்– அந்த சைத்தான்களின் தொல்லை இதற்குமேல் தொடராது. இங்கேயே சமாதி அவர்களுக்கு!
மறு வினாடி, பீதியால் அலறினான் விக்டர்...
சூழ்ச்சி வேலை... பயங்கர பிளவு-இதோ சில அடிகள் தொலைவில்! தொலைந்தோம் இத்தோடு!
பதறாதே- ஆர்ச்சியால் நம்மை காப்பாற்றிவிட முடியும்! இன்னும் வாய்ப்பிருக்கிறது!




தாம்சன் டிரான்ஸ்மிட்டரை தூண்டினான்-
உன் பாதங்களை பனியினுள் புதைத்துக் கொண்டு விடு ஆர்ச்சி!
ஹம்ம்ப்! ஆர்ச்சி இல்லையேல் தோழர்கள் அம்பேல்!
மறுகணம், ஆர்ச்சியும் அந்த கோச்சு வண்டியும் பிளவின் குறுக்கே பாலமாக இணைந்து நின்றன-
ஹே-அற்புதமான சாதனை- இம்முறையும் ஆர்ச்சி நம்மை மரணத்தின் பிடியிலிருந்து மீட்டு விட்டது!
அந்தப் பக்கமாக குதித்து விடலாம்-வா!
267


அடுத்து-
கோச்சு வண்டி அதள பாதாளத் தினுள் விழுகிறது-ஆர்ச்சிக்கும் இக்கதி ஏற்படாமல் தவிர்க்க வேண்டுமானுல் மின்னல் வேகத் தில் புத்திசாலித்தனமாக நாம் ஏதாவது செய்தால்தான் உண்டு!
டிரான்ஸ்மிட்டரை மிகுந்த எச்சரிக்கையோடு இயக்கினுன் தாம்சன்-
மெள்ள அந்த மரத்தின் பக்கமாக நகர்ந்து கால்களால் 268 அதை பின்னிக் கொள்-
ம்ம்-அப்படித்தான்! இன
மெள்ள எழுந்து கொள்
இந்த அற்புதம் நிகழ்ந்தது ஆர்ச்
யாலா-தாம்சனுல


அந்த மரத்தை சாய்த்து, குறுக்கே பாலமாக விழுமாறு செய்-
அதன்படி செய்து முடித்த ஆர்ச்சி, மறுநிமிடமே தோழர்கள் இருந்த பக்கமாக வந்து சேர்ந்தது-
இந்நேரம் அந்த போக்கிரி கும்பல் வெகு தொலைவு சென்றிருக்கும்-எப்படித்தான் விரட்டிப் பிடிப்பதோ தெரியவில்லை!
ஆமாம்-எனக்கும் குழப்பமாகத் தானிருக்கிறது-ஆனால் முயற்சியை இப்படியே கைவிட்டு விட்டு திரும்பினால் கம்பி எண்ண வேண்டியிருக்குமே!
பிரபல சர்க்கஸ் வீரர் ஆர்ச்சி வருகிறார்!



பனிச்சறுக்கு கட்டைகளின் தடத்தை பின்தொடர்ந்து முடிந்தவரை வேகமாக விரட்டிச் சென்றார்கள். ஒரு கட்டத்தில் பனிப் பரப்பு முடிந்து விட்டது-
இங்கிருந்து சாலை வழியே சென்றிருப் பார்களோ?
நமக்கு உடனடியாக ஒரு வாகனம் தேவை- ம்ம்-ஒரு யோசனை-
இரண்டு மரங்களை வெட்டி வீழ்த்தியது ஆர்ச்சி-
ARCH
அந்த ரோபோ என்ன நோக்கத் தோடு மரத்தை வெட்டுகிறது?
சுத்த பைத்தியக் காரத்தனம்!
270


இல்லை - அது எத்தனை சமயோசிதமான காரியம் என்பதை விரைவிலேயே புரிந்துகொண்டார்கள் அங்கே குழுமியிருந்த ஜனங்கள்-
விடை பெறுகிறோம்!
பிரமாதமான யுக்தி!
அந்தக் கும்பல் இந்த வழியாகத்தான் சென்றிருக்கும் என்ற நம் கணிப்பு சரியாக இருக்கட்டும்!
இந்த ஒரு சாலைதானே இங்கே இருக்கிறது!


அங்கேயோ-
ஹே-நிஜம்தானா இது?
கனவு காண்கிறேனா-
இல்லை-பிரமையா?
எத்தனை லாவகமாக அந்தத்
திருப்பத்தை எதிர்கொண்டது
பார்த்தீர்களா!


திடீரென்று அச்சத்தோடு கூவினான் விக்டர்-
சாலையை அடைத்துக் கொண்டு பரவலாக வரும் ஆட்டு மந்தையோடு மோதப்போகிறோம்!
குதி ஆர்ச்சி- நீ இப்போது செய்யப்போகும் சாகஸத்-தில்தான் இருக்கிறது நாங்கள் உயிரோடு தப்புவதும் எலும்பு நொறுங்கி சாவதும்!
ஹூப்! ஆர்ச்சிக்கு இதெல்லாம் ஒரு பிரச்சனையல்ல!
ARC


இதற்கிடையே, ப்ராண்டா சஞ்சலப்படலானான்-
காவல் துறையினர் சாலைத்தடை ஏற்படுத்தியிருக்கிறார்கள் அங்கே!
அதோ-ரோபோவும் இரு ஆங்கிலேயர்களும் இன்னமும் உயிரோடுதான் இருக்கிறார்கள்!
முன்னால் போலீஸ்-பின்னால் இவர்கள்-வகையாக சிக்கிக் கொண்டுவிட்டோமே!


கலவரமடையத்தேவையில்லை- இந்த இக்கட்டிலிருந்து விடுபட தட்பவெப்ப கருவியை பயன்படுத்துவோம்! இவர்-களின் வரவை நமக்கு சாதகமாக்கிக் கொண்டு விடலாம்!
ஆர்ச்சி ஜாக்கிரதை!
வேகத்தைக் குறை- எதிரேயிருப்பது எது-வுமே தெரியவில்லை!


ஆ ஆ-வ்!
ஐயோ நீ நாசமாகப் போக!
கொள்ளையர்களோடு தோழர்களும் கூட்டு என்று தப்புக் கணக்கு போட்டிருந்தனர் போலீஸார்-
விடாதீர்கள் பிடியுங்கள்!
ரோபோவும் அதன் தோழர்களும் கொள்ளையர்களின் கூட்டாளிகள்- வலிய வந்து நம்மிடம் மாட்டிக் கொண்டது நம் அதிர்ஷ்டமே!


ஆர்ச்சியின் கட்டுமானத்தில் ஏதோ கோளாறு- பொறி பறக்கிறது பார்!
ரோபோவைசரணடையச் சொல்லுங்கள்- இல்லையேல் சுட்டுவிடுவோம்!
போச்சு- டிரான்ஸ்மிட்டரின் கட்டளைக்கு ஆர்ச்சி கட்டுப் படாது இப்போது!
ஆர்ச்சியினுள்ளே ப்யூஸ் போய்விட்டது- ருத்ரதாண்டவம் ஆடப்போகிறது!



சுடாதீர்கள்- ரோபோவின் இயக்கம் கெட்டுப் போய்விட்டது- அதனால்தான் இப்படி ஆர்ப்பாட்டம் செய்கிறது!
ஹீக்-காயீஈஈ-!
ARC
ஆர்ச்சிக்குத் தலைவணங்குங்கள் அற்பர்களே!


கைது செய்ய விடாமல் கலாட்டா பண்ணுகிறது! நமக்கு ஆயுள் தண்டனை நிச்சயம்- தாம்சன் ஏதாவது செய்து ஆர்ச்சியை வழிக்குக் கொண்டு வா!
வழி ஒன்றும் புலப்படவில்லையே?
இதற்கிடையே ப்ராண்டா குழு சுறுசுறுப்படைந்தது-
அந்த வெறிபிடித்தரோபோபோலீஸாரின் கவனத்தை திசை திருப்பி வைத்திருக்கையில் சாலைத் தடையை தகர்த்துக்கொண்டு நாம் தப்பியோடிவிடுவோம்- பழி அந்த இரு இங்கிலீஷ்காரர்கள் மீது விழுவது உறுதி!



போதும் நிறுத்து ஆர்ச்சி- மேலும் குழப்பத்தை உண்டு பண்ணாதே!
பசங்களை ஒரே சுருட்டாக சுருட்டி விடும் ஆர்ச்சி!
ARC
தாம்சன்- ஆர்ச்சியின் இயக்கத்தை அடியோடு நிறுத்திவிட முயற்சி செய்!


மின்னமைப்பில் ஏற்படும் சாதாரண பழுது அல்ல இது– இதில் நான் செய்வதற்கு ஒன்றுமேயில்லை!
சந்தர்ப்பத்தை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள முயன்றது கொள்ளைக் கும்பல்-
சாலைத்தடையை அந்த ரோபோவே தகர்த்து வழி ஏற்படுத்துகிறது பார்!
ரோபோ தறிகெட்டுப்போனது நம் அதிர்ஷ்டம்!



சாலைத்தடையை கொள்ளைக்கும்பல் தப்பியோட ஆர்ச்சி உதவி செய்து விட்டதே!
நாமும் அந்த கொள்ளையர்களோடு கூட்டு என்ற போலீஸாரின் கணிப்பை இது ஊர்ஜிதப்படுத்திவிடும்!
ஆனால் திடீரென்று ப்ராண்டா ஓர் அதிர்ச்சிக்குள்ளானான் -
ஐயோ அந்தரோபோ உள்ளே வர முயற்சிக்கிறதே!
ரீகோ- பிடித்துத் தள்ளு வெளியே!
லிஃப்ட் தருகிறீர்களா ஆர்ச்சிக்கு?


ஆர்ச்சியை அவ்வளவு சுலபமாக பிடித்துத் தள்ளிவிட முடியுமா என்ன-?
ஸ்டீரியங்கைப்பற்ற முயற்சிக்கிறது- தடுத்து நிறுத்த முடியவில்லை!
இதற்கிடையே-
சிறையினுள் செல்லுங்கள்- எக்கச் சக்கமாக சிக்கலில் மாட்டிக்கொண்டிருக்கிறீர்கள்!
சொல்வதைக் கேளுங்கள் நாங்களொன்றும்-



ஏகப்பட்ட குற்றச் சாட்டு நம்மீது-
ப்ராண்டாவை பிடித்து தங்கத்தை மீட்கும் வரை நம் மீதுள்ள பழிதீராது- எப்படியாவது இங்கேயிருந்து தப்பி வெளியேறியாக வேண்டும்!
ஏதாவது அற்புதம் நிகழ்ந்தால்தான் உண்டு- அல்லது ஆர்ச்சியின் உதவி இருக்கவேண்டும் – எதற்கும் தொடர்பு விசையை போட்டு வைக்கிறேன்- சிற்சில சமயம் பழுது தானாகவே சீராகிவிடுவதுண்டு!
ஆனாலும் அதிர்ஷ்டத்தின் மீது உனக்கு அபார நம்பிக்கை தாம்சன்!
அங்கே-
வழி விடுங்கள்! ஆர்ச்சி சவாரி போகிறது!



எதிரே பஸ் ஒன்று வருகிறது- நிச்சயமாக மோதிக் கொள்ளப் போகிறோம்! அவனைத் தடுக்க மண்டையில் ஓங்கி ஒன்றுபோடு!
இதோ ஆனால் பலனில்லையே!


என்ன திமிர்- அவன்களுக்கு- நானொன்றும் ஒதுங்கப் போவதில்லை!


தொலைந்தோம்!
குதித்து விடுவோம்- வேறு வழியில்லை!
சட்டென்று கையை நீட்டியது ஆர்ச்சி-
ஆர்ச்சிக்கு இது வேண்டுமே!
ஐயோ- தட்ப வெப்ப கருவி!


என் தட்ப வெப்ப கருவியை பிடுங்கிக் கொண்டுவிட்டது அந்த உலோகப்பிசாசு! விபத்தில் சிக்கி உருக்குலைந்து போகப் போகிறது அந்த அற்புதக் கருவி!
ஆவ்வ்!
இடைவெளி வேகமாக குறைந்து வந்தது-
கவசமணிந்திக்ருக்கும் அந்த கிறுக்கு டிரைவர் நேராக நம்மை குறி வைத்து வருகிறானே!


சண்டாளன்—
பயலுக்கு
மறைகழன்று
விட்டதா?
ஆர்ச்சி ஓட்டிச் சென்ற கார்
பலமாக குலுங்கி தள்ளாடியது
அப்போது ஆர்ச்சியின் முழங்
கை அருகே இருந்த தட்ப-
வெப்ப கருவியின் விசையை
தற்செயலாக அழுத்திடவே-



பனி மூட்டம் பரவத் தொடங்-
கியது- நாலா திசைகளிலும்-
கவசமணிந்த ஆசாமியிடமிருந்து
தீப்பொறிகள் பறக்கின்றன- சுற்-
றிலும் பனிமூட்டம்- நம்பவே
முடியவில்லையே!



ப்ராண்டாவும் அவனது சகாக்களும் அரண்டு
போய் விழித்தார்கள்-
பனி மூட்டம்- அந்த ரோபோ
ராஸ்கல் தட்பவெப்ப கருவியை
பிரயோகிக்கிறது!
மறுபடியும் வந்த வழியிலேயே
திரும்பிச் செல்கிறதே!



கார் மறுபடியும் சாலைமீது ஏறி முற்பட்டபோது ஏற்பட்ட குலுக்கலில், ஆர்ச்சியினுள் ஏற்பட்டிருந்த பழுது விலகி சீராகிவிட்டது-
ஆர்ச்சி ஓ.கே! இனி உத்தரவுகளுக்கு கீழ்ப்படியும்!


அங்கே சிறைக் கூடத்தில் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தான் தாம்சன்!
விக்டர்-ஆர்ச்சியின் பழுது தானாகவே சரியாகி விட்டது-இங்கே திரும்பி வந்து கொண்டிருக்கிறது!
முதலில் நம்மை இங்கிருந்து விடுவிக்கச் சொல்லவேண்டும்-பின்னர் உடனடியாக ப்ராண்டோவை தேடிப்பிடித்து தங்கத்தை மீட்டு நாம் நிரபராதி என்று நிருபிக்க வேண்டும்!


ஆர்ச்சியால் தடுமாற்றத்திற்குள்ளாகி ஏறத்தாழ சாலையை விட்டு இறங்கிவிட்ட பஸ்ஸை கைப்பற்றிக் கொண்டது ப்ராண்டாகூட்டம்-
உயிர் மீது ஆசையிருந்தால் ஒதுங்கி அப்பால் செல்லுங்கள்.
அந்த இரும்புத் தடியனுக்கு ஒரு பாடம் கற்பிக்காமல் விடப்போவதில்லை நான்!
பனிமூட்டம் கடுமையாக இருக்கிறது எதிரே இருப்பது எதையுமே பார்க்க முடியவில்லை-
அதோ-ஆர்ச்சி! அந்த தட்ப-வெப்ப கருவியையும் கவர்ந்துகொண்டுவருகிறது போலும்!
29



செய்வதறியாது திக்குமுக்காடிப் போனார்கள் போலீஸார்-
உறை பனி! விபரீதமான சீதோஷ்ண நிலை! தரை கண்ணாடி போல் பளபளக்கிறது!


பனி மூட்டத்தை ஊடுருவி யாரும் இங்கே வர முடியாது-
நண்பர்களை தவிக்க விட்டு சென்றதற்கு வருந்துகிறது ஆர்ச்சி!
ம்ம்-பிடுங்கி எடு-!



அப்பாடா-முதல் கட்டம்-வெற்றி!
இங்கே கணமும் தாமதிக்கலாகாது!
பரவிவந்த பனி மூட்டத்தை இலக்கு வைத்து பின் தொடர்ந்து வந்த ப்ராண்டா குழு அங்கே வந்தடைந்தது-
இரு இளைஞர்களும் தப்பியோடுகிறார்கள்-ரோபோ மீண்டும் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இயங்குகிறது.
அந்த இரும்பு சைத்தானை சமாளிக்க நம்மாலாகாது. வந்து பஸ்ஸில் ஏறு-விலகிச் சென்று விடலாம்!



அங்கேயிருப்பது- ப்ராண்டாவும் அவனது சகாக்களும்! விடாதே-விரட்டிப் பிடி அவர்களை!
சுடுகிறான்! நாமிருவரும் பதுங்கிக் கொள் வோம்!
ஆனால்-
அடடா-ஆர்ச்சி வழுக்கி விழுந்து விட்டதே! அந்த போக் கிரிகள் புறப்பட்டு விட்டார்களே!
ஆர்ச்சிக்கும் அடிசறுக்கும்!
காரை நோக்கி ஓடிவா! தட்ப-வெப்ப கருவியின் இயக்கம் நின்றுவிட்டது!


ம்ம்- இன்னும் வேகமாக ஓட்டு
போலீஸார் சுதாரித்துக் கொள்ளுமுன் தலைமறைவாகி விட வேண்டும்! சீக்கிரம்!
சே-கெட்டது காரியம்!



போலீஸாரை தேக்கி நிறுத்தி வைக்க தாம்சனுக்கு சட்டென்று ஒரு உபாயம் தோன்றியது-
ஆர்ச்சி-கையிலிருக்கும் அந்தக் கருவியை இயக்கு!



சட்டென்று நாலா திசைகளிலும் அதீத வெப்பக் கதிர்கள் பாய்ந்தன-
அந்த ரோபோ தட்ப-வெப்ப கருவியை பிரயோகிக்கிறது!
சாலையில் மேடிட்டிருக்கும் பனி உருகுகிறது-பஸ்ஸை-வேகமாக செலுத்த முடியவில்லை!
சூடுதாங்காமல் ரேடியேட்டர் வெடித்து விட்டது எஞ்சினும் இயக்கமிழந்து விட்டது!
டமால்!
இறங்கி ஓடிப்போய் விடலாம்-நாம் அகப் பட்டுக் கொண்டு விடலாகாது!


அதோ ஓடுகிருர்கள்! விடாதே-
இதோ-



தாம்சன் டிரான்மிஸ்டரை இயக்கி ஆர்ச்சியை தூண்டிஞன்-
வேலியை பிடுங்கு-அந்த ரௌடிகள் அதிர்ச்சி யடையப் போகிருர்கள்!
என்ன செய்ய உத்தேசம்!


ஆங்-அப்படித்தான்! ஒட்டு மொத்தமாக மாட்டிக் கொண்டு விட்டார்கள்!
ஹே-என்-ன-இது?
இதுதான் "ஆர்ச்சி அரெஸ்ட்!"
தங்கத்தை எங்கே ஒளித்து வைத்திருக் கிறீர்கள் என்று சொல் லும் வரை இப்படி தட் டாமாலை சுற்றி வந்து கொண்டிருக்க வேண்டியது தான்!



நிஜத்தை போலீஸாரிடம் கூறிவிடத் தயார்! தயவு செய்து எங்களை கீழே இறக்கிவிடுமாறு உங்கள் ரோபோவிடம் சொல்லுங்கள்!
இதுதான் புத்திசாலித் தனம்!
போலீஸார் அங்கே வந்தடைந்த போது-
தங்கத்தை வெண்டுரியில் ஒரு வீட்டில் பதுக்கி வைத்திருக்கிறோம். ஆனால் அதை சுலபத்தில் உங்களால் மீட்க முடியாது. ஏனெனில் அங்கே காவல் நிற்கும் என் சகாக்களிடம் இன்னொரு தட்ப-வெப்ப கருவி இருக்கிறது!
பிரச்னை தீர்ந்தது என்றல்லவா நினைத்தேன்-சே!
பலமணி நேர இடைவெளிக்குப் பின் போலீஸாரும், தோழர்களும் வெண்டுரியில் ஒரு வீட்டை முற்றுகையிட்டனர்-
இந்த வீடுதான் - மீதப் பொறுப்பை ஆர்ச்சியிடம் விட்டு விடுங்கள் கமாண்டண்ட்! எதிரிகளிடம் தட்ப வெப்ப கருவி ஒன்று இருக்கிறது. ஆனால் அதன் அசல் ஆர்ச்சி வசம் உள்ளது!
சரி-ஆர்ச்சியே நடவடிக்கைகளை மேற்கொள்ளட்டும்!




பாய்ந்து முன்னேறி தாக்கியது ஆர்ச்சி-
அசையாதீர்கள்!
ஹா! அந்த ரோபோ இங்கேயும் வந்து விட்டது! தட்ப-வெப்ப கருவியை இயக்கி அவனை குழம்பாக உருகி வழியச் செய்!
அதீத வெட்பக் கதிர்கள் ஆர்ச்சியை தாக்கின-
பழுக்கக் காய்ச்சிய இரும்பு போல் சிவந்து விட்டது ஆர்ச்சி-ஆனால் இந்த விபரீதத்துக்கு உடனே முடிவு கட்டிவிட முடியும்!


மறுகணம் ஆர்ச்சியின் கைவசமிருந்த தட்ப-வெப்ப கருவி இயங்கியது-
அந்த உலோக கிராதகன் சீதக் கதிர்களை பாய்ச்சி நம்மை விறைக்க வைக்க முயற்சிக்கிறான்!


அந்த இரு தட்ப வெப்ப கருவிகளும் அவற்றின் செயல் உச்ச வரம்பையும் மிஞ்சி தூண்டப்பட்-டதால் படார் என்று வெடித்துச் சிதறின-
நல்ல முடிவு- இனி அவர்கள் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை!




லயன் காமிக்ஸ் சார்பாக வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: லயன் காமிக்ஸ், த. பெ. 55, சிவகாசி-626123. போன்: 21159. வெளியீடு எண் : 36. அச்சிட்டோர்: ஸ்ரீ விஜய் புக்ஸ், சிவகாசி-626123.

## வாசகர் கடிதம்!

● **V. ரேவதி, திண்டுக்கல்.**

மரண மாஸ்டர் கதை அருமை! மாடஸ்டி கார்வின் சாகஸம் சூப்பர்.

● **S. ரவி, சென்னை-39.**

கோடைமலர் லயன் காமிக்ஸ் வருவது போல ஜுனியர், மினி ஆகியவற்றிலும் கோடை மலர் வெளியிடுமாறு வேண்டிக் கொள்கிறேன்!

● **முருகேசன், காட்ரோடு.**

லயன் காமிக்ஸை முதன்முறையாக படித்தேன். கதை அம்சம் கண்டு சுவைத்தேன். ஸ்பைடர் சாகஸம் கண்டேன். அதனால் மலைத்து நின்றேன். மரண மாஸ்டருக்கு ஸ்பைடர் கொடுத்தது மரண அடி. லயன் எங்களுக்கு கொடுத்தது அதிர்ச்சி அடி (பரிசு) லயன் வளர்ச்சிக்கு நாங்கள் செய்கிறோம் பூஜை! அதனால் தீர்ந்து விடும் எங்கள் ஆசை! தொடரட்டும் உங்கள் சேவை!

● **R. சந்தோஷ் குமார், மங்கலம்பேட்டை.**

சிலந்திவலை மன்னன், எத்தனுக்கோ எத்தன் நீதிக் காவலன், ஸ்பைடரின் சாகஸமாக வெளிவந்த "மரண மாஸ்டர்" அருமையிலும் அருமை. அட்டைப் படம் சூப்பர்!

போனஸாக வெளிவந்த மாடஸ்டியின் கதை தத்ருபமாக அமைந்துள்ளது!

● **M. முருகன், இராயப்பன்பட்டி.**

மரண மாஸ்டர் அருமையான சித்திரம். அட்டை என்ன பளபளப்பு! உள்ளே என்ன கிளுகிளுப்பு! அப்படியே அட்டையை வெட்டி கதவில் ஒட்டி விட்டேன்!

● **ரவிகிருஷ்ணா, மதுரை-3.**

அட்டைப் படம் தூள், ஸ்பைடர் சாகஸம் பெண்டாஸ்டிக். புதிய ஹீரோ ஜிம்மியின் வீரம் என்னை மெய் சிலிர்க்க வைத்தது. விசித்திர சகோதரர்கள் போன்ற கதைகள் மீண்டும் மீண்டும் பிரசுரியுங்கள் பாராட்டுக்கள்!


மே முதல் வாரத்தில் கிடைக்கும்!
திகில்!
BAT MAN
ரேம்போ
கோடை மலர்!
ரோஜர் மூர்
இந்த சர்வ தேச சூப்பர்ஹீரோக்களின் அற்புத சாகஸங்கள்
திகில் கோடை மலரில் (விலை ரூ.5)
படிக்கத் தவறாதீர்கள்!